தம்பதிகளுக்கு மட்டுமே
தரப்படும் வாழ்வு நூல்.

அதிவீரராமன்

கொக்கோகம்

புலியூர்க் கேசிகன்
விளக்கத்துடன்

இன்பக் கடல்

தியாகராயநகரம் :: சென்னை—17

முதற் பதிப்பு: டிசம்பர் 1957

விலை ரூ.

தம்பதிகளுக்கு
ஒரு வேண்டுகோள்!

இந்நூலினால் வாழ்விலே இனிமையைப் பெருக்கிக் கொள்ளும் தம்பதிகள் தங்கள் தங்கள் மேலான அபிப்பிராயத்தைத் தெரிவித்தருளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

புலியூர்க் கேசிகன்.

விற்பனை உரிமை:

தேனருவிப் பதிப்பகம்

சென்னை-17.

நவபாரத் பிரஸ், 76, எல்லீஸ் ரோடு, சென்னை-2.

இந்த நூல்

ஆண் பெண் கூட்டுறவு பற்றிய நூல்களைப் படிப்பதோ அது பற்றிய செய்திகளைக் கேட்பதோ தவறானது என்ற நிலைமை மாறி அனைவரும் அறிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது என்ற தெளிவு இப்போது பிறந்திருக்கிறது. இன்பகரமான குடும்ப வாழ்வு நாட்டிலே மலர்வதற்கு இது ஒரு நல்ல அறிகுறியாகும்.

மிகப் பழைய காலத்திலிருந்தே இந்த உறவு மிகவும் புனிதமான உயர்ந்த கண்ணோட்டத்துடனேயே ஆராயப் பட்டிருக்கின்றது. நமது மூதாதையர் மிகச் சிறந்த நூல்களை வகுத்திருக்கின்றனர். அவற்றுள் ஒன்று இந்தக் கொக்கோகம் ஆகும்.

இதனைப் பாடிய அதிவீரராமர் பொறுப்பற்ற ஒருவரன்று. தமிழ் மன்னர் பரம்பரையுள் மிகச் சிறந்த புலவராகவும், தூய சிவபக்தராகவும் விளங்கியவர். அவ்வளவு புலமையும் உயர்பேர் ஒழுக்கமும் தகுதியும் உடையவர் கொக்கோக நூலைத் தமிழ்ப்படுத்தினார் என்றால், அது நாட்டிலே மிகச் சிறந்த பயன் விளைக்கும் என்ற அவரது அருள் நோக்கம் ஒன்றினால் மட்டுமே யன்றோ!

மேலும், சமீபத்தில் சென்னைத் தமிழ்த் தினசரி ஒன்றில் வந்த செய்தியைப் படியுங்கள்: எவ்வளவு உருக்கமாக வுள்ளது?

"சென்னைச் சைதாப்பேட்டையைச் சேர்ந்த சின்னப் பெண் என்ற 18 வயதுப்பெண், கல்யாணமாகி நான்கு மாத காலமாகியும் புருஷனுடன் கல்யாண இன்பத்தை அநுபவிக்க முடியாமற்போனதால், வாழ்க்கையை வெறுத்து மின்சார ரயில் முன் குறுக்கே விழுந்து தன்னை மாய்த்துக்கொண்டாள். பஞ்சாயத்தார், 'வாழ்க்கையில் சந்தோஷம் இல்லாததால் வெறுப்பு ஏற்பட்டுத் தற்கொலை செய்துகொண்டாள்' என்று முடிவு கூறினர்கள்."

தாம்பத்யம் ஏற்றும், ஆண் பெண் உறவை முறையாக அறியாததால் இத்தகைய விபரீதம் ஏற்பட்டதை நினைக்கும்போது, அது எவ்வளவு இன்றியமையாத சாஸ்திரம் என்றும், அதனை அறியாததால் எவ்வளவு துயரம் ஏற்பட நேர்கின்றது என்றும் நாம் அறியலாம்.

எனவே, தமிழகத் தம்பதிகள் அனைவரும் கட்டாயம் கொக்கோகம் படிக்கவேண்டும். இதற்கு உதவிய தமிழறிஞர் பலர் ஆவர். இம் முயற்சியில் திரு. பொ. திருகூடசுந்தரனுர் அவர்கள்தாம் இதனைச் செப்பமுடன் வெளியிட்டனர். அனைவருக்கும், குறிப்பாகத் திருமிகு பிள்ளையவர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

என் அரிய நண்பரான 'இளவேனில்' அவர்கள் இதற்கு வழங்கிய முன்னுரைக்கு நான் மிக மிகக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கும் இத்தனை அழகுடன் விரைவில் அச்சேற்றித் தந்த நவபாரத் அச்சகத்தார்க்கும் நன்றிகூறிக்கொண்டு இதனைத் தமிழ்த் தம்பதிகள்பால் சமர்ப்பிக்கிறேன்.

புலியூர்க் கேசிகன்.

முன்னுரை

திருமண விழாக்களில் தம்பதிகளை வாழ்த்திப் பலர் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். புதுமணத் தம்பதிகள் வாழ்க்கையில் அன்பும் பண்பும் பெருக வேண்டும் என்றெல்லாம் வாழ்த்துவார்கள். பலர் வெள்ளியும் தங்கமுமாகப் பரிசுகளை வழங்குவார்கள்.

அப்போதெல்லாம் நான் நினைப்பதுண்டு: "இந்த வாழ்த்துக்கள் இந்தப் பரிசுகள் எல்லாவற்றையுங் காட்டிலும், புதுமணத் தம்பதிகளுக்கு வாழ்க்கையின் வழிகாட்டியாகவும், அன்பும் பண்பும் பெருகும்படியான வாழ்க்கையை வகைப்படுத்திக் கொடுக்கும்படியாகவும் இருக்கக் கூடிய ஒன்றையல்லவா பரிசாகக் கொடுக்க வேண்டும்" என்று.

அந்த ஒன்று கொக்கோகம் தான்!

பலர் வாழ்க்கையின் ஆரம்பத்தில் அடைந்த கஷ்டம், வேதனை, முதலியவைகளைப்பற்றி நிறையக் கேட்டிருக்கிறேன். கஷ்டம் என்ருல் சொல்லக் கூடிய கஷ்டமா? மனத்திலேயே வைத்துத் தாமாக எண்ணி எண்ணி மனம் குமையும் வேதனை! இதை யாரிடம் துணிந்து கேட்க முடியும்? யார் இதற்கு வழிவகைகள் கூறவல்லார்?

உதாரணமாக எனது நண்பர் ஒருவர்; வீட்டில் செல்லக் குழந்தையாக வளர்ந்தவர். ஒரே குழந்தை. இதைப் பேசாதே; அதைப் பாராதே; இது கெடுதல்; அது கூடாது இப்படியெல்லாம் கூறி வளர்க்கப்பட்டவர். அதனுல் வயது

வந்தும் கூட உலக அநுபவம் சிறிதுமே அடையாமலிருந்தார். அவருக்குத் திருமணம் ஆயிற்று. சில தினங்கள் கழித்து அவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் முகத்திலே மகிழ்ச்சிக் களை சொட்ட வேண்டியதற்குப் பதிலாக வேதனையின் ரேகை படர்ந்திருந்தது. காரணம் கேட்டேன்; ஏதோ கூறி மழுப்பிவிட்டார். சரி! தாம்பத்ய வாழ்க்கை திருப்தியாக அமையவில்லைபோலும்; காலம் செல்லச் செல்ல எல்லாம் சரியாகி விடும் என்று நினைத்துக்கொண்டேன். சிலர் விஷயத்தில் ஒரு குழந்தை பிறந்த பின்னரே தாம்பத்ய வாழ்க்கை சோபிப்பதுண்டல்லவா? அவ்விதம் எண்ணி விட்டேன்.

மீண்டும், சுமார் மூன்று மாதம் கழித்துத்தான் அவரை நான் சந்திக்க நேர்ந்தது. என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. ஆள் அப்படி மாறிப்போயிருந்தார். மெலிந்து, கண்கள் குழி விழுந்து, சோகத்தின் சின்னமாக விளங்கினார். நான் காரணம் கேட்குமுன் என்னைத் தனியாக அழைத்துச் சென்றார். அவர் மனத்தில் இருப்பதையெல்லாம் கொட்டினார். குழந்தை மாதிரி அழுதார். என்னால் நம்பவே முடியவில்லை!

விஷயம் இதுதான். தம்பதிகளுக்கு அன்றுவரை உடல் உறவு ஏற்படவில்லை. காரணம் அன்பில்லாததாலா? ஒருவரை ஒருவர்க்கு பிடிக்காததினாலா? இல்லவே இல்லை. இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்தனர். ஆனால் விஷயம் தெரியாது தவித்தனர். இருவரும்தான்!

இப்படியும் இருக்க முடியுமா என வாசக நேயர்கள் ஆச்சரியப்படலாம். நானும் அப்படித்தான் ஆச்சரியப்பட்டேன். எனது நண்பரைப்பற்றி நன்றாக அறிந்தவன் ஆதலால் ஒருவாறு நம்பினேன். அவரைத் தேற்றினேன். அவருக்கு வழி கூறுவதாக உறுதி கூறினேன். மிகுந்த பிரயாசைப்பட்டுத் தேடிக் கிடைத்த ஒரு பழைய கொக்கோகப் பிரதியொன்றை அவரிடம் கொடுத்து அதைப் படித்து அதன்படி நடக்கச் சொன்னேன்.

இரண்டு நாள் கழித்துத் திரும்ப என்னைப் பார்க்க ஓடோடி வந்தார். மகிழ்ச்சி பொங்க என்னை வந்து கட்டிக் கொண்டார்.

இப்போது அந்த நண்பர் குழந்தையும் குட்டியுமாகச் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார். இப்போதும் கூட அந்த நண்பரின் மனைவியார் என்னைக் காணும்போதெல்லாம் நாணத்தினால் தலை குனிகிறார்கள். முகத்தில் மகிழ்ச்சியின் ரேகை மிளிர்கிறது. அந்தப் பாவி மனிதர்! வெள்ளையுள்ளம் படைத்த என் நண்பர், நான் உதவி செய்ததை அந்த அம்மையாரிடம் அப்படியே கூறிவிட்டாராம்.

இது எனக்குத் தெரிந்தது. என் நண்பர் மூன்று மாதம் கழித்தாவது என்னிடம் விஷயத்தைக் கூறினார். அந்த தைரியத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் எத்தனை எத்தனை பேர் மனத்தினுள்ளே அடக்கி அடக்கி அவஸ்தைப் படுகிறார்களோ? அதன் காரணமாக எத்தனை எத்தனை குடும்பங்கள் அல்லல் பட்டனவோ? இதையெல்லாம் நினைத்துத்தான் கல்யாணப் பரிசாகத் தமது நண்பருக்கு யாராவது, ஏதாவது கொடுக்க எண்ணினால் சிறந்த பரிசு 'கொக்கோகம்' என ஆரம்பத்தில் கூறினேன்.

அன்று ஒரு கொக்கோகப் புத்தகத்திற்காக தேடித் தேடி நான் அடைந்த கஷ்டம் கொஞ்சமன்று. கிடைத்ததும் பூரவும் கவிதைகள் அடங்கிய புத்தகம், விளக்க உரை கிடையாது.

தமிழ் நாட்டில் எது எதற்கெல்லாமோ புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. தையல் கலை, சமையல் கலை, கோழி வளர்ப்பு இப்படியாக பலப் பலவற்றிற்கும் புத்தகங்கள் வந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் வரவேற்கிறேன்.

ஆனால், மனிதனின் வாழ்க்கைக்கு அத்யாவசியமான, அன்பும் பண்பும் பெருகி வாழ வழிகாட்டியாக ஒரு வாழ்க்கைப் பண்பு நூல் துரதிர்ஷ்டவசமாக ஒழுங்கான முறையில் இதுவரை வெளி வரவில்லை. காமக் களஞ்சியங்களாக பல வந்திருக்கலாம். அவைகளைத் தள்ளி விடுங்கள்.

பண்டையத் தமிழ் அறிஞர்கள் நமக்காகப் பல அரிய நூல்களை வைத்துத்தான் சென்ருர்கள். அவைகளில் மறைந்தன போக இருப்பன சிலவேதான். அந்த வரையில் தமிழர்கள் பாக்கியசாலிகளே. பழந்தமிழ் நூல்களெல்லாம் கவிதைகளாகவேதான் இருக்கும். காரணம் அன்றைய தமிழ் வளர்ச்சி தான். வசன நடை தோன்ருத காலம் அது. இன்று எழிலும் வேகமும் காணும் காலம். கவிதைகளை விளக்கி புரிந்து கொள்ளும் ஆர்வம் குன்றிய காலம்.

எனவே, கொக்கோகம் போன்ற அவசியமான, உயர்ந்த நூல் கவிதையாகவே இருந்ததால் பலரால் புரிந்து படிக்க முடியாததாகவே இருந்தது.

இக்குறையை நீக்கச்சின்னுட்களுக்கு முன் அறிஞர் திருகூட சுந்தரம் பிள்ளை அவர்கள் விளக்க உரையுடன் கொக்கோகத்தை வெளியிட்டார்கள். அந்த நூலுக்குத் தமிழர்களிடையே நல்ல வரவேற்பிருந்தது.

இப்போது இன்பக்கடல் பதிப்பகத்தார் தமிழர்கள் அனைவருக்கும் வாங்குவதற்கு வசதியாக இருக்கட்டுமே என்ற உயர்ந்த நோக்கத்துடன் மலிவுப் பதிப்பாகக் கொக்கோகத்தை வெளியிட்டிருக்கிருர்கள். உன்னதமான முயற்சி.

மலிவுப் பதிப்பென்கிருர்களே! பிழையும் மலிர்ந்திருக்குமோ? என்று புத்தகத்தை நன்ருக அலசினேன். என்ன ஆச்சரியம்! விலைதான் மலிவே தவிர, உயர்ந்த பதிப்பு. சிறந்த அச்சு, நல்ல தோற்றம், அற்புதமான முகப்பு அட்டை இவ்வளவுடன், நல்ல முறையில் தயாரித்துள்ளார்கள்.

கொக்கோகத்தை இயற்றியவர் அதிவீரராம பாண்டியன். கவிக்கு அரசர், புவிக்கும் அரசரான அதிவீரராம பாண்டியனின் இனிமையும் எளிமையும், அர்த்த புஷ்டியும் கொண்ட கவிதைகளை விஷயத்துக்காக மட்டுமன்றிக், கவிதையின் இனிமைக்காகவே படித்துப் படித்து ரஸிக்கலாம்.

விளக்க உரையைப்பற்றி சில வார்த்தைகள். அன்பர் புலியூர்க் கேசிகன் அவர்கள் எழுதியுள்ள 'குறள் தந்த இல்லற இன்பம்' என்ற நூலைப் படித்தவர்கள் அவரின் உயரிய தமிழாராய்ச்சியை பற்றி அறியாமலிரார். எளிய, எல்லோருக்கும் புரியும் நடை. எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு இம்மியும் புறம் போகாமல் பொறுப்புடன் விளக்கி யிருக்கிரு்ர். பழம்பெரும் கவிகளின் காப்பியங்களுக்கு உரை எழுதும்போது முக்கியமாகக் கையாள வேண்டியது புறம்போகாப் பொறுப்பே. அன்பர் புலியூர்க்கேசிகன் அவ்விஷயத்தில் திறம்பட உரையாற்றியுள்ளார்.

கொக்கோகம் என்ருல் பூதமோ பிசாசோ! என பயப்படுபவர்களுக்கு ஒரு வார்த்தை. விவசாயத்தைப் பற்றி எழுதுவது என்ருல், மண், கலப்பை, உரம் முதலிய வார்த்தைகள் வருவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் வாழ்க்கைக்கலை பற்றி எழுதும் போது ஆண் பெண் உறவு பற்றிய சில வாசகங்களைக் குறிப்பிடுவது. இவற்றைக் கண்டு யாரும் மிரளவேண்டியதில்லை. இம்மாதிரி நூல்களில் எவ்வளவுக் கெவ்வளவு கொச்சை வார்த்தைகளை நீக்கி விஷயங்களை விளக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. அன்பர் புலியூர்க் கேசிகன் அவர்கள் வார்த்தைகளை உபயோகிப்பதில் நிரம்பவும் நிதானம் காட்டியிருக்கிருர் என்றே சொல்ல வேண்டும். அதிவீரராம பாண்டியரின் கவிதைகளிலுள்ள வார்த்தைகளுக்கு ஒருபடி கூட அதிகம் போகவில்லை; குறைவாகவே போயிருக்கிருர். அவருடைய இந்தப் பொறுப்புணர்ச்சி பாராட்டத் தக்கது.

7-12-57-ம் தேதி தினமணி காலைப் பதிப்பில் 6-வது பக்கத்தில் 6-வது காலத்தில் ஒரு செய்தி வெளியாகி யிருக்கிறது. மதுரை அடிசனல் செஸன்ஸ் நீதிபதி கனம் எச். தேவதாஸ் அவர்கள் ஒரு கேஸில் தீர்ப்புச் செய்திருக்கிருர்கள். மூக்கம்மாள் என்ற 22வயதுப்பெண்ணுக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. கணவன் தலையில் திரிகைக் கல்லைப் போட்டுக் கொன்றதாக வழக்கு.

இந்த வழக்கு பற்றி கூறப்படுவதாவது :—

கன்னிவாடி போலீஸ் சரகத்தில் உள்ள பன்றிமலைக்கிராமத்தில் மூக்கம்மாளும் அவள் கணவன் ஓச்சத்தேவரும் (வயது 40) வசித்து வந்தார்கள். அவர்களுக்கு 2 குழந்தைகள்.

மூக்கம்மாளுக்கு பெரியம்மை கண்டது. பிரஸ்தாப கொலை நடந்த 10 நாட்களுக்கு முன்னால்தான் பெரியம்மை நோய் குணமாகி அவள் தலைக்கு தண்ணீர் விடப்பட்டிருந்தது. இந்த நோய் கண்டதால் மிகவும் பல ஹீனமாக இருந்த அவளை, சம்பவம் நடந்த இரவில் தன் ஆசைக்கு இணங்கும்படி கணவன் நிர்ப்பந்தித்த தாகவும், அதற்கு மூக்கம்மாள் மறுத்ததைத் தொடர்ந்து இருவருக்கு மிடையே சண்டை மூண்டதாகவும், அதன் விளைவாக ஓச்சத் தேவரின் தலையில் மூக்கம்மாள் திரிகைக்கல்லைப் போட்டுக் கொலை செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

எதிரிக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளிக்கையில், இ. பி. கோ. 401 பிரிவின்கீழ் தண்டனையைக் குறைப்பது பற்றி சர்க்கார் பரிசீலிக்கக்கூடிய விஷயம் இது என்றார்.

எதிரி ஓர் இளம்பெண். சம்பவம் நடந்த சூழ்நிலை அனுதாபத்தை ஏற்படுத்துவதாய் உள்ளது என்றும் நீதிபதி சொன்னார்.

மேலேகண்டது செய்தி. வாழ்க்கைக்கலை படித்தோ, கேட்டோ இருந்தால் இவ்வித நிகழ்ச்சி நடந்திருக்க முடியுமா? சிந்தித்துப் பாருங்கள்! இம்மாதிரி எத்தனையோ சிக்கல்கள் வாழ்க்கையில் தோன்றும்.

தம்பதிகளிடையே தோன்றும் சிக்கல்களை நீக்கி, ஊடல் அகற்றி, அவர்கள் வாழ்வில் இன்பகாதத்தைக் கிளப்பும். வழி காட்டியாக இந்நூல் திகழுமென்பது நிச்சயம்.

"இளவேனில்"

பொருளடக்கம்

1. காமதேவன் வணக்கம் 17
2. நூலின் வரலாறு 23
3. நூலின் பயன் 26
4. சாதி லட்சணம் 29
   1. பத்மினி சாதிப் பெண் 29
   2. சித்தினி சாதிப் பெண் 32
   3. சங்கினிச் சாதி மாதர் 34
   4. அத்தினிச் சாதி மாதர் 36
      காலமும் கரணமும் 38
   5. திதியும் யாமமும் 39
   6. வசீகர மருந்து 42
5. அமுத நிலைகள் 45
   1. மதனவேள் துதி 45
   2. அமுத நிலைகள் பதினைந்து 46
   3. அமுதத்தின் ஏற்றமும் இறக்கமும் 46
   4. அமுதநிலை ஸ்தானங்களில் செய்வதற்கு உரிய தொழில்கள் 47
6. பஞ்சபாணம் 50
   ஐங்கணை எய்யும் இடங்கள் 51
   மாரன் கணைகளின் விளைவு 52

7. திதியும் கூட்டமும் 53

1. பிரதமை திதியில் 53
2. துதியை நாளில் 54
3. திரிதியை நாளில் 54
4. சதுர்த்தி நாளில் 55
5. 6. பஞ்சமி சஷ்டி திதிகளில் 56
7. சத்தமியில் 56
8. அஷ்டமியில் 57
9. 10. நவமி தசமித் திதிகளில் 53
11. ஏகாதசியில் 58
12. துவாதசியில் 59
13. 14. திரயோதசி, சதுர்த்தசிகளில் 60
15. பூரணை—அமாவசை நாட்களில் 60
இன்பம் இன்பம்! 61

8. மூவகை மாதரும் ஆடவரும் 63

மூவகையினர் 63
சமரதச் சேர்க்கை 64
உச்சச் சேர்க்கை 64
நீசச் சேர்க்கைகள் 65
அதிஉச்சம் அதிநீசம் 65
ஏற்றத் தாழ்வுகள் 66
நீசத்தின் நிலைகேடு 67
உச்சமும் தீதே 67

9. போகமும் இன்பமும் 69

காமத் தினவு 69
தினவு நீங்காது 70
முந்தினும் பிந்தினும் கேடுதான் 70
ஒத்த போகத்தின் சிறப்பு 71
சேர்க்கைக் காலம் மூன்று 71

சேர்க்கை வேகங்கள் மூன்று 72
மந்தவேக நாயகியைக் கூடும் விதம் 73
மத்திமவேகப் பெண்ணைக் கூடுதல் 73
சண்டவேக நாயகியைக் கூடும் விதம் 74
பொருந்தாத திருமணம் 75
சேர்க்கை வகை இருபத்தேழு 75
உத்தமம் மத்திமம் அதமம் 76

10. மூவகைச் சாதிகள் 77

மான் சாதி மாதர்கள் 77
பெட்டைக் குதிரைச் சாதிப் பெண் 79
முயல் சாதி ஆடவன் இலக்கணம் 83
காளைச் சாதி ஆடவன் 84
குதிரைச் சாதி ஆடவன் 86
குணமும் குறியும் பொருத்தமும் 87

11. வயதும் பருவமும் 89

உலகத்தின் மூலகாரணன் 89
நான்கு பருவங்கள் 90
முதன் மூவருக்கும் காலம் 90
சேர்க்கையும் பயனும் 91
கனைச்சாதிப் பெண் இலக்கணம் 91
சிலதையின் இலக்கணம் 92
கனை—சிலதையைச் சேர்தல் 93
தருணியை மகிழ்வித்தல் 93

12. உவப்புடன் சேர்தல் 95

வாலை வயது நாயகியை மகிழ்வித்தல் 95
பேரிளம் பெண் — விருத்தை 95
சுபாவமும் பெண்களும் 96
பித்த குண மாது 98
வாத குண மாது 99
கால அளவும் அன்பும் 100

13. பத்துச் சத்துவங்கள் 101
1. தேவசத்துவப் பெண் 101
2. மானிட சத்துவப் பெண் 102
3. நாக சத்துவப் பெண் 103
4. இயக்க சத்துவப் பெண் 103
5. காந்தர்வ சத்துவப் பெண் 104
6. பிசாசு சத்துவப் பெண் 104
7. அசுர சத்துவப் பெண் 105
8. காக சத்துவப் பெண் 106
9. குரங்கு சத்துவப் பெண் 106
10. கர்த்தப சத்துவப் பெண் 107

14. நால்வகை மாதர் 108
1. மானிடப் பெண் இலட்சணம் 108
2. காந்தர்வப் பகுதிப் பெண் 108
3. இயக்கப் பகுதிப் பெண் 109
4. பசாசப் பகுதிப் பெண் 109

அளவையின் முதன்மை 110

15. அன்பும் தகுதியும் 111
தலை சிறந்த பெண்கள் 111
விரும்பத் தகாத மகளிர் 111
வீட்டிற்குத் தகுதியற்றவள் 112
பெண்கள் விரும்பாத ஆடவர் 113
அன்பு தோன்றும் வகை 114
உள்ளன்பு உடைய நாயகி 114
அன்பிலாத மனைவி 116
சேர்க்கை விரும்பாத பெண்கள் 119

16. நாடும் கூடலும் 122
உலகை வென்ற ஒருவன்! 122
போக காலத்தின் இயல்பு 123

நாயகியின் போககாலம் ஒத்திருக்க 123
நாயகனின் போககாலம் ஒத்திருக்க 124

17. பல நாட்டவர்க்கும் 125
1. மத்திம தேச நாயகியர் 125
2. அவந்தி தேச நாயகியர் 126
3. மாளவம், ஆமிர தேசநாயகியர் 127
4. சிந்து—இராவதி தேச நாயகியர் 127
5. இலாடம், கலிங்கப் பகுதி நாயகியர் 128
6. கருநடம், தெலுங்குப் பெண்கள் 128
7. கோசல மாதர் 129
8. மகராஷ்டிரப் பெண்கள் 129
9. கேரளக் கன்னியர் 130
10. சோழ தேசத்து மாதர் 131
11. பாண்டி நாட்டுப் பாவையர் 131
12. ஒட்டியம், இலங்கை, யவனம், வங்க மங்கையர் 132

பலதேசப் பெண்டிரை மகிழ்வித்தல் 133
பெண்கள் வசமாதல் 133
காளையர் லட்சணம் 134

18. கூடல் விழா ஏற்பாடு 136
1. சேர்க்கைப் பள்ளி சேர்தல் 136
2. தொடக்கவிழா ஏற்பாடுகள் 139

19. பொருத்தமற்ற தழுவல் 142
1. ஒவ்வாத ஆலிங்கனங்கள் 142

20. ஆலிங்கனம் எட்டு 145
காதலர்க்கு இசைந்தவை 145
1. கொடி சுற்றி தழுவல் 145
2. பனை மரம் ஏறல் 145
3. எள் அரிசிக் கலவை 146

4. பால் நீர்க் கலவை 147
5. முழுத்தொடை தழுவல் 148
6. குறி கூடும் தழுவல் 148
7, தனமுறத் தழுவல் 148
8, நெற்றி நெருக்கம் 148

21. இதழ் அமுதம் 150

இதழ் பருகல் எட்டுவகை 150
துயிலெழுப்பல் 153

22. நகக்குறி பதித்தல் 154

நகக்குறித்தானங்கள் 154
நலம்பெற நெருடுதல் 156
நல்ல நகம் 156
நகக்குறி வகைகள் 157
1. பாதிநிலா 2 மண்டலம் 157
3. புலிக்கால் நகம் 157
4. மயிற் பாதம் 158
5. முயலடி 1·8
6. மூங்கில் இலைக்குறி 159
நாயகியும் நகக் குறியும் 159

23. பற்குறி பதித்தல் 160

1. எலிப்பல் குறி 160
2. மறைந்த பல் 161
3. பவளம் 161
4. துளி 161
5. மணி பிந்து மாலை 161
6. கோலச் சார்வம் 162
பற்குறியின் பயன் 162

24. தாடன வகைகள் 163

நால்வகைத் தாடனங்கள் 163
மற்றும் நால்வகை 164

தாடனம் இயற்றும் இடங்கள் 164
உச்சித் தாடனம் 165
தாடனமும் இடமும் 166

25. அங்குலி யோகம் 167

அங்குலி யோகம் 167
1. பெண் லிங்கம் 168
2. காமன் கவிகை 169
3. சந்திர நாடி 169
அங்குலி யோகவகைகள் 170
1. கரிகரம் 170
2. காமாயுதம் 171
3. காம மருந்து 172
4. மதன அங்குசம் 172
5. மன்மத பாகை 173
6. குதிரைச் சவுக்கு 173
அங்குலி யோகப் பயன் 173

26. ஒத்த போகம் 175

27. அகத் தொழில்கள் 179

பொது விதி 180
கரண பேதவகை 181

28. உத்தானித முறைகள் 182

மல்லார்ந்த நிலைச் சேர்க்கைகள் 182
சமப் புணர்ச்சிக்குரிய சிறப்பு வகைகள் 183
நீசப்புணர்ச்சிக்குரிய சிறப்பு வகைள் 183
3. உற்புல்லிதம் 183
4. சிரும்பிதம் 184
5. இந்திராணிகம் 184
உச்சப் புணர்ச்சிக்குரிய சிறப்பு வகைகள் 185

6. உத்தான சம்புடம் 185
7. பாற் சம்புடம் 186
8. ஊரு பீடிதம் 186
9. வேஷ்டிதம் 186
பொதுக் கரணங்கள்
10. பாடவம் 187
11. உற்புக்கினம் 187
12. பாணிபாதம் 188
13. உரபூடனம் 188
14. அத்தினி பீடிதம் 189
15. மதன சிரும்பிதம் 189
16. ஊர்த்துவஙிபீடிதம் 189
17. வேணு விதாரிகம் 189
18. சூலசிதம் 190
19. கர்க்கடகம் 191
20. பிரேங்கா 191
21. பத்மாசனம் 191
22. அர்த்த பத்மாசனம் 191
23. சம்யமனம் 192
24. கூர்மம் 192
25. பரிவர்த்தனம் 193
26. அதிபீடிதம் 193
27. கடிபீடிதம் 193
திரியக்கின் வகைகள் : 2 **194**
28. சமுற்கம் 195
29. விபரி வர்த்தனம் 195
ஆசிதக வகைகள் : 3 **195**
30. உக்மபதம் 195
31. விதர்ச்சனம் 196

32. மர்க்டம் 196
ஸ்தித கரண வகைகள் : 4
33. சானுகூர்ப்பரம் 197
34. அரிவிக்கிரமம் 197
35. துவிதலம் 197
36. அவலம்பிதம் 198
ஆன்மிதக் கரண வகைகள் : 5
37. பசுகரணம் 199
38. வியாக்கிரமம் 199
39. சித்திரம் 200
40. சங்காடகம் 201
கரண நுட்பம் 201
29. உபசர்ப்பன வகைகள் **203**
1. மதித்தல் 203
2. விமர்த்தம் 203
3. நிபீடிதம் 204
4. அசனி 204
5. கோலாகலம் 204
6. ரிஷிப காதம் 204
7. சகடாயுதம் 205
30. லய வகைகள் **206**
மூன்றின் பண்பு 206
காதலன் அயர்வைப் போக்க 207
31. உபரிசுரதம் **206**
உபரிசுரதப் புணர்ச்சிகள் 208
தலைவி மேம்பாடு 209
கலவிக் களி 210
காம நடனம் 210

மகிழ்நன் மேம்பாடு	211	
உபரிசுரதம் செய்யலாகாத நாயகியர்	212	
32. முகரத வகைகள்		**213**
1. நிமித்தம்	214	
2. பாற்கரவை	214	
3. வாகியம்	214	
4. அப்பியந்தம்	214	
5. சும்பிதம்	215	
6. பரிமிதம்	215	
7. சூடியம்	215	
நாயகன் முகரதம்	216	
33. ஊடலும் கூடலும்		**220**
ஊடலின் தோற்றம்	220	
ஊடலின் விளைவு	220	
ஊடற் குறிகள்	221	
ஊடல் தீர்த்துக் கூடல்	222	
34. கலவிச் சிறப்பு		**225**
உத்தமக் கலவி	225	
மத்திமக் கலவு	225	
மத்திமமும் உத்தமம் ஆகலாம்	226	
பொருந்தாக் காமம். கபட காமம்	227	
35. பேரின்ப வாழ்வு		**229**
கூருத செய்திகள்	227	
வாழ்த்துக்கள்	227	
காதலர் வாழ்வு		**231**
குறள் அமுதம்		**237**

1. காமதேவன் வணக்கம்

1. கன்னலன்றி வேம்புநுகர்
காமத் துரோகிகள் போல்
பின்னை யொரு தெய்வத்தைப்
பேசோமே—எந்நாளும்
சாற்றுவதும் காமகலை
சாதிப்பதும் கரணம்
போற்றுவதும் காமனடிப் போது.

அன்புடன், ஆண் பெண் இருவர், தம்முள் கூடிவாழும் இல்வாழ்வானது கரும்பு போன்ற இனிமையுடையது. அதனை அநுபவியாது வெறுத்துப் பேசுவதுடன், சிலர் வேம்பு போன்ற கசப்பான வாழ்விலும் ஈடுபடுகின்றனர். அவர்கள் காமனை இகழ்ந்தும் பிற தெய்வங்களை வழிபட்டும் வருகின்றனர். இல்வாழ்வாராகிய நாமும் அவர் போல நடக்கமாட்டோம்; வேறு தெய்வம் எதுவும் எண்ணேம்; எந்நாளும் காமன் கலைபற்றிப் பேசுவோம்; நம் நாயகியருடன் கூடிக் கலந்து மகிழ்வோம்; காமன் திருவடிகளையே உளங்கனிந்து போற்றுவோம்; என அழைக்கிறுர் ஆசிரியர். காம இச்சையின் விளைவால் பிறவி எடுத்தவரான மானிடருள் சிலர், அதனையே நிந்திப்பது துரோகச் செயல் எனக்கருதி, அவரைக் காமத் துரோகிகள் என்கிறுர் அதிவீரராமர்.

2. திருமலி கரும்பு வென்றிச்
சிலையினுல் உலகம் எல்லாம்
பொருது செங்கோல் நடாத்திப்
புகழ்விளை ஏக வீரன்
விரிகடல் பிறந்த திங்கள்
வெண்குடை நீழல் வைகும்
மருமலி மலர்க்கை வாளி
மைந்தனைச் சிந்தை செய்வாம்.

அழகு மலிந்த கரும்பு வில்லினுல், உலகத்து உயிர்கள் அனைத்தையும் போரிட்டு வென்று, தன் ஆணைக்குள் அடக்கி, ஆட்சி நடத்திப் புகழ் விளைவிக்கும் ஒரே வீரன்; பரந்த கடலிலே அன்று பிறந்த திங்களாகிய குடை நிழலில் அமர்பவன்; மண மிகுந்த ஐவகை மலர்க்கணைகளைக் கொண்டிருப்பவன்; அந்த மதனவேளை நாம் அனைவரும் நம் சிந்தையில் நீங்காது கொள் வோமாக.

3. படைப்பவன் நாவின் மேனி
வெண்ணிறம், படுத்து வேலை
அடைப்பவன் மார்பில் பொன்மை
அவிர்நிறம் ஆகி, வையம்
துடைப்பவன் ஒரு பாகத்தில்
பசுமையாய்த் துலங்கும் திங்கள்
குடைப்பரன் புகழே என்னில்
அவன் புகழ் கூறல் ஆமோ!

உலகினைப் படைக்கும் பிரம்மதேவனின் நாவிலே வெள்ளைக்கலையுடுத்த நாமகள் இருப்பதால் அது வெண்ணிறம் பெற்றது; பாம்பணைமேல் பாற்கடலில் பள்ளி கொண் டிருக்கும் காத்தல் கடவுளாகிய திருமால், தன் மார்பில் திரு மகளைக் கொண்டதால் அஃது ஒளிவீசும் பொன்னிறம் பெற்றது; ஊழிக் காலத்திலே உலகை அழிப்பவனுன சங்கரன், இடப் பாகத்தில் மலைமகளைக் கொண்டதனுல், அப் பகுதி பசுமை பெற்றுத் துலங்குகின்றது; இவ்வாறு முத்தேவர்களுமே நிறம் பெற்றது மதனனின் போர்க்கு ஆற்ருது தோற்றுத் தத்தமக்கு ஒவ்வொரு தேவியரைத் தேடிக்கொண்டதனுல் அல்லவா? அவர்களே திங்களைக் குடையாக உடைய மன்மதனின் புக ழினைக் காட்டும் சான்ருக நிற்கும்போது, அவன் புகழை எளி யோமாகிய எம்மால் அளவிட்டுக் கூற முடியுமா? முடியாது அன்ருே!

4. மாதுமை நிமித்த மாக
மழுவலான் அணங்கி னுக்கும்
கோதில் நெஞ்சழியச் சீறிக்
கொண்கனேடு உமைக்கும் மேனி
பாதிசெய்து அவரைத் தண்டம்
பண்ணித் தன் வசமாய்ச் செய்த
நாதனே உலகிற்கு எல்லாம்
நாதன் என்று ஏத்துவோமே!

உமாதேவியாரின் இச்சை நிறைவேறும் பொருட்டு மழுப்படை வல்லவனுகிய சிவபிரானுக்கும், அணங்காகிய உமையம்மைக்கும், அவர்தம் தூயநெஞ்சகங்கள் கட்டு அழியுமாறு சினந்து, சிவனேடு உமைக்கும் மேனி பாதியாக, இருவரையும் உமாதேவராகச் செய்து, அவர்க்குத் தண்டனை விதித்துத் தன் ஆட்சிக்கு உட்படச் செய்த நாதன் மன்மதனே; ஆதலால், அவனே உலகிற்கு எல்லாம் நாதன் என்று கருதி நாமும் அவனைப் போற்றுவோமாக.

5. குயில்புரை சொல்லும், சந்தக்
குழம்பினில் ஊறும் கஞ்சத்து
இயல்பின் மெய்ம் மணமும், மிக்க
இரதியைப் பழிக்கும் பொற்பும்,
அயில்விழி நோக்கும், வாயின்
அமிர்தமும், அம்பு ஐந்தாகப்
புயன் மலர்க் குழலார் நல்கப்
பொருமதன் புவிக்கு நாதன்.

மலரணிந்த கரிய முகில் போன்ற கூந்தலாரான இளம் பெண்கள், தம் குயிலினுமினிய சொல், சந்தனக் குழம்பினில் ஊறும் தாமரை மலரின் மணத்தை யொத்த உடல் மணம், இரதிதேவியும் மிகராகாள் எனப் பழிக்கும் அழகு, காளையரை நோக்கினுல் வருத்தும் வேல் போன்ற கண்பார்வை, செவ்வாயின் ஊறலான அமுதம் ஆகிய ஐந்தினையும் அம்புகளாகக் கொடுத்து உதவ; அவற்றைத் துணையாகக்கொண்டு, காளையரைப் பொருது அடிமைகொள்ளும் மதனனே, இவ்வுலகிற்கு எல்லாம் நாதன் ஆவான்.

6. தேர் இளந்தென்றல் ஆகச்
செழுங்குடை மதியம் ஆகத்,
தூரியம் கடல்கள் ஆகச்,
சொற்குயில் காளம் ஆக,
நாரியர் சேனை யாக,
நறவண்டு விடுதூ தாகப்
பாரினில் விசயஞ் செய்யும்
படைமதன் சரணம் போற்றி!

தேர் இளந்தென்றல் ஆகவும், அத்தேரிலே விளங்கும் வெண்கொற்றக் குடை மதியம் ஆகவும்; ஒலிக்கும் செய பேரிகை கடல் முழக்கமாகவும், ஊதும் எக்காளம் குயிலின் கீதமாகவும், உதவும் படைத்துணைவோர் கன்னிப் பெண்களாகவும், தூதுரைப்போர் தேனுண்ணும் வண்டினங்களாகவும் கொண்டு, இவ்வுலகினர் யாவரையும் அடிமைகொள்ள வருபவனாகிய மதனவேளின் திருப்பாதங்களை நாமும் பணிந்து போற்றுவோமாக!

7. மாலின் புதல்வன் இரதியுடன்
மணக்குங்காலை அவன் இயற்றும்
ஆலிங்கனங்கள் நகக் குறிகள்
அருந்தா டனங்கள் சும்பனங்கள்
ஏலுங்கரணம் பிற குறிகள்
முதலாம் இவற்றின் வினை இன்பம்
ஞாலந்தன்னில் ஆடவர்க்கு
நீங்கா தென்றும் நண்ணுவதே!

திருமாலின் மகனை மதனன்; தன் மனைவியான இரதிதேவியுடன் கூடி இன்புறும் காலத்தில் இயற்றுகின்ற, ஆலிங்கனங்கள், நகக்குறிகள், அரிய தாடனங்கள், சும்பனங்கள், இசைவான கரணங்கள், பற்குறிகள் முதலான இவற்றின் செயலின்பம் எல்லாம், உலகத்திலே ஆடவர்களுக்குக் குறையாமல் எந்நாளும் கிடைக்கக் கூடியதேயாகும்.

8. உலக மெல்லாம் பொதுநீக்கி
ஒருகோல் ஓச்சிப் புரந்திடினும்,
இலகு மவுலி நவமணிப்பூண்
இமைக்கும் பொற்றா சணிந்தாலும்,

அலகிலாத பெருஞ்செல்வம்
அளகேசன்போல் துய்த்தாலும்,
கலக விழியார் முயக்கற்றார்
காலால் நடந்து கழிபிணமே!

உலகம் அனைத்தும் பலருக்கும் பொதுவான உரிமை உடையதென்பதை நீக்கித், தானே ஒரு குடைக்கீழ் அடிப் படுத்திச் செங்கோல் நடாத்திக் காத்து வந்தாலும் என்ன? ஒளிவீசும் கிரீடமும், நவமணிகள் இழைத்து ஒளிரும் அழகிய ஆடைகளும் அணிந்தாலும் என்ன? கணக்கிட்டு அறிய வியலாத பெருஞ் செல்வம் குபேரனைப் போலப் பெற்று, அவற்றை அநுபவித்தாலும் என்ன? கட்டமைந்த இளைஞர் உள்ளத்தே கலகம் விளைக்கும் விழியினரான மங்கையரின் ஆலிங்கனத்தை அவர் இழந்தவராயின், அவரெல்லாம் காலால் நடந்து வாழ்நாட்களை வீணே விரைந்து கழியச் செய்கின்ற உயிரற்ற நடை பிணங்களேயாவர்.

2. நூலின் வரலாறு

9. எல்லா உலகும் படைத்தவிதி
இயற்றும் தருமம் பொருளின்பம்
வல்லார் உணரச் செய அவற்றுள்
மற்றை இரண்டும் பிறர் செய்தார்,
நல்லார் புகழும் நந்தி இன்ப
நலமென்று எடுத்த ஆகமத்தைச்
சொல்ஆயிரத்தால் ஈரைஞ்னூறு
அத்தியாயம் பெறச் சொன்னான்.

எல்லா உலகங்களையும் படைத்த விதியானது, விதித்தது அறம் பொருள் இன்பம் என மூன்று. அவற்றுள் அறிவுடை யோர் உணருமாறு, அறம் பொருள் எனும் இரண்டு பற்றிய நூல்களை ஏனையோர் செய்துள்ளனர். சான்றோர் புகழும் நந்தி யானவர், இன்ப நலம் ஒன்றை மட்டுமே எடுத்துக்கொண்டு, அது பற்றிய இலக்கணங்களை எல்லாம் விரித்து, ஆயிரம் அத்தி யாயங்களாக முன்னொரு காலத்திலே அருளிச் செய்தனர்.

10. பின்னர் அதனை முறைமுறையே
சுருக்கி உரைத்தார் பெரியோர்கள்
மன்னும் சுவேத கேதுவொடு
மருவு தவத்துப் பாஞ்சாலன்

சொன்ன அவற்றை எழுவகையாய்த்
தொகுத்தார் எழுவர் அதைத் திரட்டிப்
பன்னி உரைத்தான் பெருந்தவத்துப்
பழியில் வாச்சாயன பகவான்.

நந்தியம்பெருமானவர் அவ்வாறு சொன்ன இன்ப நூலைப் பின்னர், பெரியோர்கள் பலர் சுருக்கி உரைத்தனர். அவர்களுள் சுவேதகேது என்பவரும், தவ வலிமையுடைய பாஞ்சாலனும் கூறியவற்றை, எழுவர்கள் ஏழு வகையாகத் தொகுத்தனர். அப்படித் தொகுத்த ஏழையும் ஒன்ருகத் திரட்டிப் பெருந் தவமுனிவராகிய, பழியற்ற வாச்சாயன பகவான் வடமொழியில் உரைத்தனர்.

11. "இவர்கள் முன்னுள் உரைத்தவெல்லாம்
எவர்க்கும் விளங்கா ததுவிளங்க
உவரியுலகத்து உரைத்தி'' என,
வைண தத்தன் உரைத்திடலும்,
கவிஞர் உரைக்கும் கொக்கோகன்
என்னும் வடநூற் கவிராயன்
அவனி முழுதும் நிலைநிற்க
அனங்கா கமத்தை வகுத்துரைத்தான்.

முற்காலத்தில் இவ்வாறு இவர்கள் உரைத்தவை எல்லாம், எவருக்கும் எளிதில் விளங்காதனவாய் இருந்தன. எனவே, 'அதனை இக்கடல்சூழ் உலகத்தே அனைவருக்கும் விளங்குமாறு சொல்வீராக' என்று, வைணதத்தன் கொக்கோகரைக் கேட்டான். அவன் கேட்டதும், கவிஞர் புகழும் அக் கொக்கோகர் என்ற வடநூற் கவிராயர், உலக முழுதும் இடையருது நிலை பெற்று நிற்குமாறு, அநங்காமத்தை வகுத்து ரதிரகஸ்யம் என்னும் நூலாகச் சொல்லினர்.

12. பண்டு வாச்சா யனபகவான்
பழைய முனிவன் கொக்கோகன்
கண்டா ரியத்தால் குறித்துரைத்த
கலைஞா னத்தைத் தமிழ்வல்லார்
கொண்டா சரிக்க இயற்றமிழால்
கூறி விட்டோம் தொன்மையதாய்
உண்டாம் பொருளே உரைத்ததல்லால்
புதிதா யொன்றும் உரைத்திலமால்.

முன்னுளில் வாச்சாயனபகவான், பழைய முனியான கொக்கோகன் ஆகியோர் ஆராய்ந்து வடமொழியிலே இந்தக் காம நூலைச் சுருக்கிச் சொல்லின ரல்லவா? அக் கலைஞானத்தைத் தமிழ் வல்லோரும் அறிந்துகொண்டு அநுபவிக்கும் படியாக, இயற்றமிழால் நாம் கூறினேம். பழைமையாக உண்டான பொருளை அப்படியப்படியே உரைத்திருக்கிருேமே யல்லாமல் யாமாகப் புதிதாக வொன்றும் சேர்த்து உரைக்கவில்லை.

3. நூலின் பயன்

13. பத்தி செய் சமயபேதப்
பகுதிக்கும் பொதுவாய் நிற்கும்
புத்தெனும் நரகை நீக்கிப்
பொலிவுறு வீட்டை நல்கும்,
உத்தமா னந்த ஞான
உருவெடுத்து இலகா நிற்கும்,
சத்தியம் இகத்திற் பேறு
தருவது இல்வாழ்க்கை என்பார்.

பத்தி செய்கின்ற பல்வேறு சமயவாதிகளுக்கும் பொதுவான அறவொழுக்கமாக விளக்குவது எது; புத்திரப் பேறு இல்லாத பேரிருளை நீக்கி ஒளி மிகுந்த வீட்டைத் தருவது எது; உத்தமமான ஆனந்தம் ஞானம் ஆகியவை உருவு எடுத்து விளங்கி ஒளிவீச நிற்கும் சத்திய வாழ்வாக அமைவது எது; இவ்வுலகிலேயே பேறுகள் அனைத்தையும் தருவதும் எது; அத்தகையது இல்லற வாழ்க்கையான ஆண் பெண் இருவரின் இணைந்த வாழ்க்கையே யாகும் என்று சான்றோர் அனைவரும் கூறுவர்.

14. மின்னல் அழியும் இல்வாழ்வு
மேவும் மாந்தர் தமக்குறுதி
மன்னி வைகுங் காலத்து
மருவு விடையம் ஐந்தினுக்கும்
துன்னுஞ் சுகத்தைப் பெற் றுள்ளம்
சுகிக்கச் சுகிக்கும் பேரின்பக்
கன்னல் வில்லி கலையுணர்ந்து
கலந்து காலம் கழிப்பதுவே.

மின்னலைப்போல ஒளியோடு தோன்றினாலும், விரைவிலேயே அழிவெய்வதுதான் இல்வாழ்வு என்பதை உணர்ந்து அதனை ஏற்கின்ற மாந்தர்கள், தமக்குள்ள உடல் வலுப் பெருகியிருக்கும் காலத்திலேயே ஐம்புல இன்பமும் ஆரத் துய்த்துச் சுகம் பெற்றுக், கரும்பு வில்லியின் கலையான மதன நூலை உணர்ந்து கூடிச் சுகித்து வாழ உதவுவதே இந்நூலின் பயனாகும். (கரும்பு வில்லி-மதனன்.)

15. இந்தப் பனுவலாற் பயனேது
என்ன வினவில் இசையாத
கொந்திற் சிறந்த குழலாரைக்
கூடல் கூடும் மனைவியரைச்*
சிந்தைவிரும்பச் செய்வித்தல்
விரும்பி னுரைச் சிலைக்காமன்
அந்தப் புரத்தில் இரதியென
அடைந்து சுகமுற்றி ருப்பதுவே.

இந்த நூலால் விளையும் பயன் என்ன என்று வினவினால், மலர்க் கொத்து அணிந்த கூந்தலுடைய நாயகி, தன்னோடு ஒத்து இசையாத காலத்து அவளை இசைவித்துக் கூடலும், இசைந்து அவ்வாறு கூடும் மனைவிக்குக் கலவியிலே விருப்பம் ஏற்படுமாறு செய்வித்தலும்; அவ்வாறு விருப்பம் கொண்ட

* மடவியரை என்பதும் பாடம்.

அவளை, மதனன் இரதியின் அந்தப் புரத்திலே அவளோடுங் கூடிச் சுகித்திருப்பது போலக் கூடிச் சுகித்து இருவரும் இன்புற்று இருப்பது ஆகும்.

16. பரந்த சாதி, குணம், தெய்வப்
பயிர்ச்சி, சேட்டை, சுபாவ, மின்பத்
தரங்கள், கொள்கை, இங்கிதமே
முதலாந் தகுதி அறியாதார்
சுருங்கு மருங்கு லார்கலவி
துய்த்துக் காம சுகமறிதல்
குரங்கு நறுமா தளங்கனியைச்
சுவைத்துச் சாரம் குடிப்பதுவே.

பத்மினி முதலாகிய நால்வகைச் சாதியும், அவைகளுக்குரிய குணமும், தத்துவப் பயிர்ச்சியும், அங்க சேட்டை, சுபாவம், இன்பமிலை, கொள்கை, இங்கிதம் ஆகிய எட்டுவகைகளையும் பற்றிய செய்திகளை அறியாமல், மெல்லிடை மகளிரைக் கூடிச் சுகம் பெறவே முடியாது. அவ்வாறு அறியாமற் கூடுவதானது, குரங்கு மாதுளங் கனியைச் சுவைத்தும், அதன் சாரத்தை இன்னதென அறிவால் உணர்ந்து இன்புற இயலாத அறியாமை உடையதாவது போன்ற, வெறும் புலனின்ப அனுபவமே யாகும்.

4. சாதி லட்சணம்

17. பத்மினி, சித்தினி, பகர்ந்த சங்கினி,
இதமுறும் அத்தினி, என்னும் நால்வருள்,
முதலவள் உத்தமி, மற்றை மூவரும்
அதிகமற்று அவரவர் அடைவில் தாழ்வரே.

பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என நான்கு சாதியினராவர் மாதர்கள். இந் நால்வருள் பத்மினி உத்தமமாவாள். மற்றைய மூவரில், முறையே பத்மினிக்குச் சித்தினி தாழ்ந்தவள்; சித்தினிக்குச் சங்கினி தாழ்ந்தவள் என்று அறிதல் வேண்டும்.

1. பத்மினி சாதிப் பெண்

18. செண்பக மலர் எனச்
சிவந்த மேனியாள்
பண்படு சொல்லினள்
பகரில் பொய் சொலாள்
விண் படர் நறுமணம்
வீசு மெய்யினள்
கண்படாக் கானமான்
அனைய காட்சியாள்

செண்பக மலரினைப் போன்ற வண்ணமும், இசை யொலி அனைய இனிமையான சொல்லும், பேச்சிலே பொய் விரவாத வாய்மையும் எங்கும் பரவும் நறிய மண்ம் கமழும் உடலும், வலையிற் சிக்காத காட்டு மானை ஒத்து மிரண்டோடும் கண் பார்வையும்,

[வலைப்படாத கானமான் பார்வையிலே அதன் இயல்பான மருட்சி தோன்றும். செண்பக மலர் நிறம் உடையவள் பத்மினியினுள்ளும் உயர்வு உடையவள் ஆவள்.]

19. பூவன மென்மயிர்
குழைந்த பொற்பினள்,
கூவிளம் பழமிரண்டு
அனைய கொங்கையாள்,
தூவிதழ்ப் பங்கய
வாசம் தோன்றிட
ஓவறு சுரதநீர் உலவும்
வாசத்தாள்

மலரிதழினும் மென்மையான மயிர்கள் குழைந்து அழகுடன் ஒளிரும் கூந்தலும், வில்வப்பழங்கள் இரண்டு போன்ற திரண்ட தனங்களும், தூய்மையான இதழ்களும், தாமரை மலரின் தண்மையான மணம் கமழ்கின்ற சுரதநீர் இடையறுது பரவியிருக்கின்ற குறியும்,

20. உற்பலம் போலவும்
ஒளிரும் மேனியாள்,
பொற்புறு குரவரைப்
புனித வேதரைப்

பற்பல தேவரைப்
பணிந்து போற்றுவாள்,
ஏற்படு தாமரை
இதழின் அல்குலாள்.

(பத்மினி சாதியிலும் மத்திமமான சிலர்) நீலோற்பல மலர் போன்று வண்ணம் ஒளிர்கின்ற மேனியும், அறிவழகு உடையாரான பெரியோரையும், தூய்மையான வேதம் உணர்ந்தவரையும், பற்பல தேவர்களையும் தொழுது போற்றும் இயல்பும், அழகான தாமரை இதழ்போன்ற அல்குலும்,

21. எள்ளிளம் பூவென
இலங்கு நாசியாள்,
பிள்ளைவெள் அனமென
நடக்கும் பெற்றியாள்,
வெள்ளைமென் தூசும்வெண்
போதும் வேண்டு வாள்,
ஒள்ளிய தீஞ்சுவை
அற்ப உண்டியாள்,

எள்ளுச் செடியின் புத்தம் புது மலர் போன்று, நீண்ட கூரிய மூக்கும், நடை பழகும் பிள்ளைப் பருவத்து வெள்ளை யன்னம் போன்று தளர்ந்தசையும் நடையும், வெள்ளையான மெல்லாடை அணியும் பழக்கமும், வெண்மலர் சூடும் விருப்பமும், தூய இனிய சிற்றுணவும்,

22. நாணமும் மானமும்
நயந்த சிந்தையாள்,
பூணணி உடலநேர்ந்
துலவு பொற்பினள்,

காணரு செவ்வரி
கலந்த கண்ணினுள்,
வாணுதல் பதுமினி
யென்னு மங்கையே.

பிறர் காணத் தானே ஒதுங்கும் நாணமும், பழித்துப் பேசச் சிறிதேனும் இடந்தராது தற்பெருமையுடன் ஒழுகி வரும் மானவுணர்வும், நாயகனை விரும்புகின்ற உள்ளமும், அணி புனைந்த அழகிய உடலும், காண்பதற்கு அரியதான செவ்வரி படர்ந்த கண்களும், ஒளிரும் வாள்போன்று பளபளவென்ன ஒளி வீசும் நெற்றியும் உடையவரான பெண்கள் பத்மினி சாதி மாதர் ஆவர்.

2. சித்தினி சாதிப் பெண்

23. பிடியெனு நடையினுள்,
பெண்மை மிக்குளாள்,
கொடியென நுடங்கிய
கோல மேனியாள்,
புடைவன முலையினுள்,
பொற் குறங்கினுள,
கடிநறை கமழ் தரு
காம நீரினுள்

பிடியானை நடையும், பெண்மை இயல்புகள் மிகுதியாக உடைமையும், மென்கொடி போலத் தளர்ந்து துவளும் அழகிய மேனியும், புடைத்துப் பருத்த கொங்கைகளும், பொன்னொளி பரப்பும் அழகான தொடைகளும், நறிய தேன் மணம் வீசும் காமநீரும்;

24. வலம்புரிக் கழுத்தினுள்,
வளர் சகோரத்தின்
நலம்பெறு சொல்லினுள்,
நடன கீதத்தின்
இலங்குறு மனத்தினுள்,
இதழ் உயர்ந்துளாள்,
துலங்குறு குறில்நெடில்
அற்ற தோற்றத்தாள்,

வலம்புரிச் சங்கினைப் போன்ற கழுத்தும், சகோரப்பட்சியின் குரல் போன்ற நலந்தரும் குரலினிமையும், நடனம் இசை ஆகியவற்றில் ஈடுபாடு கொள்ளும் உள்ளமும், உயர்ந்த செவ்விய இதழ்களும், குட்டையாகவோ நெட்டையாகவோ இல்லாத நடுத்தரமான உயரமும்,

25. வட்டமாய் அகன்று,
மேல்வளர்ந்து மென்மையாய்
விட்டெறி மதனநீர்
மிகுந்து, ரோமம் பொன்
தட்டிலே கீரைவித்து
என்னத் தக்கதாம்
கட்டழகு அல்குலாள்,
கலந்த நோக்கினுள்,

வட்டமாய், அகன்று, மேல் வளர்ந்து, மென்மையாய்க், காமநீரின் வெளிப்பாடு மிகுந்து, பொன் தட்டிலே கீரை வித்துப் பரப்பினுல்போலக் கனிந்த பொன் வண்ணத்தினிடையே கருவண்ணம் கலந்து ஒளிரும் ரோமங்கள் மலிந்து, கட்டழகு நிறைந்த அல்குலும், கலந்த நோக்கும்

26. புறத்தொழில் கலவியில்
பொருந்து பண்பினுள்,
குறைத்திடும் உண்டியாள்,
இனிய கொள்ளுவாள்,
நிறைத்த சித்திரத்துகில்
நேயம் வைத்துளாள்,
திறத்த சித்தினி எனச்
செப்பும் மங்கையே.

புறத்தொழில் பலவுஞ் செய்து கூடுகின்ற இயற்கையில் விரும்பி ஈடுபாடு கொள்ளும் இயல்பும், சுருங்கிய உணவும், இனியவே விரும்பி உண்ணலும், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகளில் விருப்பமும் ஆகிய இலக்கணமுடையோர் எல்லாம் சித்தினிச்சாதி மாதர் ஆவர்.

3. சங்கினிச் சாதி மாதர்

27. நேர்மையும் பருமையும்
அற்று, நின்றதோர்
ஏர்பெறு சமமதாய்
இலங்கும் யாக்கையாள்,
பாரினில் அடியிடைப்
படிவம் நீண்டுளாள்,
சீருறு நரம்புயர்ந்து
இலங்கு செவ்வியாள்

மெலிவும் பருமனும் இல்லாத, நடுத்தரச் சம உருவாக, அழகுடன் விளங்குகிற மேனியும், பூமியிற் பதியும் காலடித்

தடங்கள் அகன்றிருக்க நடக்கும் நடையும், நரம்புகள் புடைத்து மேலே தோன்றும் வளமான உடல் தோற்றமும்,

28. கடிதடம் கருமயிர்
நிறைந்த காட்சியாள்,
உடைதரு காமநீர்
உவர்ப்பு நாறியே
மிடிபெறக் குறைந்துளாள்,
வெதும்பு மேனியாள்,
அடிசிலூண் சமம்பெற
அருந்து பான்மையாள்,

கருமயிர் அடர்ந்த கடிதடமும், உவர்ப்பு நாறுங் காமநீர் குறைவாகச் சுரத்தலும், கதகதப்பான மேனியும், சமைத்த உணவினை அளவோடு உண்ணும் இயல்பும்,

29. செம்மலர் மாலையைச்,
சிவந்த ஆடையைத்
தம்மனங் கொள்ளுவாள்,
தகவில் கோபத்தாள்,
வெம்மைசெய் நகக்குறி
மிகவும் வேண்டுவாள்,
பொய்ம்மையுங் குறளையும்
பொருந்து நாவினுள்,

செவ்வண்ண மலர் மாலையிலும் செந்நிற ஆடையிலும் விருப்பமும், அடங்காத சினமும், கலவிக் காலத்திலே நோவு தரும் நகக்குறிகளை மிக விரும்பலும், பொய்ம்மையும் கோட் சொல்லலும் உடைய நாவும்,

30. வஞ்சக மனத்தினள்,
வளரும் பித்தத்தாள்,
வெஞ்சினக் கழுதைபோல்
வெடித்த சொல்லினுள்,
அஞ்சலில் மனத்தினுள்,
அறத்தை ஓம்பிடாள்
தஞ்சமில் சங்கினி
என்னும் தையலே.

வஞ்சகமான மனமும், பித்தநீர் பெருகிய உடலும், கடுஞ் சினக்கழுதையின் கத்துதலைப்போல உரத்த கடுஞ் சொல்லும், அஞ்சா நெஞ்சமும், சமூகத்தின் மரபுகளைப் பேணுத ஒழுக்கமும் உடைய மாதர் எல்லாம் பேதைமையற்ற சங்கினிச் சாதி மாதர் ஆவர்.

4. அத்தினிச் சாதி மாதர்

31. உதறிய நடையினுள்,
உயர்ந்து கோடியே
விதறிய நெடுவிரல்
மேவு காலினுள்,
குதறிய சொல்லினுள்,
குறுங் கழுத்தினுள்,
சிதறிய செம்மயிர்
சேர்ந்த சென்னியாள்,

கால் உதறி நடக்கும் நடையும், மேலுயர்ந்தும் வளைந்தும் தடித்தும் நீண்ட விரல்களோடு கூடிய கால்களும், குளறிக்

குளறிப் பேசும் பேச்சும், குட்டையான கழுத்தும், செம்பட்டை மயிரோடு பரந்த கூந்தலும்,

32. தீவினைத் தொழில்களே
செய்யுஞ் செய்கையாள்,
மேவுகற் ருழைபோல்
நாறும் மேனியாள்,
நாவினில் எரிப்பொடு
துவர்ப்பு நச்சுவாள்,
பாவையர் வெறுக்கொள
உண்ணும் பண்பினுள்,

பாவத்தொழில்களே செய்யும் இயல்பும், கற்ருழையின் வெறிகாற்றம் நாறும் உடலும், எரிப்பும் துவர்ப்பும் விரும்பும் இயல்பும், சிறுக உண்ணும் பிற பாவையரெல்லாம் அஞ்சுமாறு அளவுக்கு மீறித் தின்னும் பெருந்தீவனமும்,

33. பருமயிர் நெருங்கி
உள்ளகன்று பண்புறு
கரிமதம் நாறிய
காமநீர் வறண்டு
அருமணி மேருநீண்டு
அகன்ற அல்குலாள்,
பெருமயிர்த் தூலமாய்ப்
பிறங்கு மேனியாள்,

தடிப்பான மயிர்கள் நெருங்கி அடர்ந்தும், உட்புறம் அகன்றும், யானையின் மதநீர்போல நாற்றம் கொண்ட காமநீர் வறட்சி உடையதாயும், நீண்டும் அகன்று மிருக்கும் அரிய மணி

மேருவுடன் கூடியதுமான அல்குலும், தடித்த மயிர் கத்தை கத்தையாக விளங்கும் உடலும்,

34. துடித்துயர் இதழினுள்
துணிந்து நாணத்தை
விடுத்தவள், ஆடவர்
மேவு போதெலாம்
படத்தகும் பாடெலாம்
படுத்தும் பண்பினுள்,
எடுத்த பேர் அத்தினி
என்னும் மங்கையே.

தடித்துத் துடித்து உயர்ந்த உதடுகளும், நாணத்தைத் துணிந்து அறவே விட்டுவிட்ட நிலையும், ஆடவர் ஆசையுடன் சேரும்பொழுதெல்லாம் அவரைப் படாதபாடுபடுத்தி வருத்தும் குணமும் உடைய மாதரை அத்தினி சாதி மாதர் என்பர்.

இந்த நால்வகை மாதரையும் கூடுங் காலமும், அவரவர்க் கேற்ற கரணமும்.

35. நால்வகைச் சாதியாம்
நங்கை மார்கள்தம்
சீலமும், விருப்பமும்,
குறியும், செய்கையும்,
வாலிதின் உரைத்தனம்;
மருவு காலமும்
மேல்வரு கரணமும்
விளம்பு வாமரோ.

நான்குவகைச் சாதிப் பெண்களின் ஒழுக்கமும், விருப்பமும், அங்க அடையாளங்களும், அவர்கள் செய்கைகளும் விளக்கிச் சொன்னோம். இனி, அவர்களை மருவுதற்குத் தக்கதான காலமும், அவரவர்க்கு உகந்த காம சேட்டைகளும் நிலைகளுமான கரணங்களும் கூறுவோம்.

5. திதியும் யாமமும்

பதுமினியை மருவும் திதியும் பொழுதும்

36. முந்திய பதுமினி
தனைமுயங்கிட
நந்தவில் திதியில்
எத்திதியும் நன்றென்பர்;
புந்திசெய் காலமாம்
புலரி மாலை கூர்
சந்தியென் றிரண்டினும்
தழுவல் ஆகுமால்.

நால்வகைச் சாதி மாதரில், முதலாவதாகக் கூறிய பதுமினியைக் கூடுவதற்கு, நலமான பதினைந்து திதிகளுமே ஏற்றவை தாம். அத் திதிகளில், அறிவு தெளிந்திருக்கும் புலர்காலையும், கதிரவன் மறைந்துகொண்டிருக்கும் அந்தி வேளையும் ஏற்ற நேரங்களாகும்.

சித்தினியை மருவும் திதியும் பொழுதும்

37. வயங்கிய சித்தினி
மருவு காலங்கள்
முயங்கிய தசமியும்
ஒழிந்த பஞ்சமி

தயங்கிய துதியை
அஷ்டமி சதுர்த்தி மற்று
இயங்கு துவாதசி
சஷ்டி என்பவே.

சித்தினிச் சாதி மாதரை மருவுவதற்கு ஏற்ற திதிகள் தசமி, பஞ்சமி, துவிதியை, அஷ்டமி, சதுர்த்தி, துவாதசி, சஷ்டி ஆகிய ஏழும் ஆகும்.

38. காலையின் முன்வரு
கடிய யாமமும்,
மாலையின் முன்னுற
மருவும் யாமும்,
கோலிடும் இவளுக்காம்;
குலவு சங்கினிக்கு
ஏலுறு காலம் மேல்
எடுத்து இயம்புவாம்.

அந்நாட்களில், பொழுது விடிவதற்கு முன்னதான இரவின் கடைசிச் சாமமும், மாலை நேரத்தை அடுத்து வரும் இரவின் முதற் சாமமும் சித்தினியை மருவ ஏற்ற நேரங்களாகும். இனிச், சங்கினிக்கு ஏற்ற திதியும் நேரமும் சொல்வோம்.

சங்கினியை மருவும் திதியும் பொழுதும்

39. பொருந்திய பிரதமை
புகழ்திர யோதசி
திருந்தும் ஏகாதசி
திரிதியை யாம்திதி

வரும்பகல் கங்குலின்
மருவும் மூன்றதாய்
இருந்திடும் சாமங்கள்
இவளுக் கென்பவே.

சங்கினி சாதி மாதரோடு கூடுவதற்கு ஏற்றவை, பிரதமை, திரயோதசி, ஏகாதசி, திரிதியை ஆகிய நான்கு திதிகளாகும். இத் திதி நாட்களின் பகல் இரவு மூன்றும் சாமங்கள் இவட்கு ஏற்றதாகும்.

அத்தினியை மருவும் திதியும் பொழுதும்

40. மதிமுக அத்தினி
மருவு காலங்கள்
விதிபெறு பக்கங்கள்
விளம்பும் போதினில்
திதியினில் சத்தமி,
சிறந்த நல்லுவா,
புதியதோர் சதுர்த்தசி,
நவமி, பூரணை.

சந்திரவதனியாகிய அத்தினி சாதி மாதினைச் சேர்வதற்கான காலங்கள் முதலியவற்றைச் சொல்வோமானால், திதிகளில் சப்தமி, அமாவாசை, சதுர்த்தசி, நவமி, பூரணை ஆகியவை ஏற்றதாகும்.

அத்தினிக்குக் காலமும் நால்வர்க்குக் கரணமும்

41. கங்குலில் பகற் காலத்தில்
கருதிய இரண்டாஞ் சாமம்

அங்கவை, நிற்க; மற்றை
அனைவர்க்கும் கரணம் கூறில்
பங்கயா சனத்தி னோடு,
நாகரம், வேணுதாரம்,
அங்குறிற் கந்தசானு
புளகமென் றடைவிற் சொல்வார்.

மேலே சொல்லப்பட்ட ஐந்து திதி நாட்களிலும், இரவிலும் பகலிலும் இரண்டாஞ் சாமங்கள் அத்தினி சாதியினரைக் கூடு வதற்கு ஏற்ற காலங்களாம்.

இனி, அனைவருக்கும் உரிய கரணங்கள் எவையென்றால், பத்மினிக்குப் பத்மாசனமும், சித்தினிக்கு நாகரமும், சங்கி னிக்கு வேணுவிதாரிகமும், அத்தினிக்கு கந்தசானுவும் ஆகும். (இவற்றின் விளக்கங்கள் கரணலட்சணத்தில் காண்க)

6. வசீகர மருந்து

சித்தினிக்கும் சங்கினிக்கும்

42. கதலியின் கிழங்குச் சாற்றில்
சாதிக்காய் கலந்து கூட்டல்
இதமுறு சித்தினிக்காம்;
யானையை வணங்கிச் சாற்றில்
பதமுறு கூவிளத்தின்
பழத்தினை அரைத்துக் கூட்டல்
சுதமதி முகத்தின் தூய
சங்கினிக் கென்றுசொல்வார்.

சாதிக்காயை வாழைக் கிழங்கின் சாறு வார்த்து நன்றாக அரைத்து உருண்டை செய்து, உமிழ் நீரிலே நனைத்துத், தாம்

பூலத்துடன் சித்தினிக்குக் கொடுக்க அவள் தன் நாயகனுக்கு வசியமாவாள்.

வில்வப் பழத்தை ஓடு போக்கி, யானை வணங்கிப் பூண் டின் சாறிட்டு அரைத்து, உருண்டை செய்து, உமிழ் நீரில் நனைத் துச் சங்கினிக்குத் தாம்பூலத்துடன் தர அவள் நாயகனுக்கு வசியமாவாள்.

அத்தினிக்கு வசீகர மருந்து

43. வனைமதி நெடுமா டத்தின்
வைகிய புருவின்பிச்சும்
கனைவரி வண்டுஞ் சுட்டுக்
கொசுகின்தேன் கலந்துகூட்டல்
நினைதரும் அத்தி னிக்கு
நிகழ்த்துபாக் கிலையினோடும்
இனியமந் திரத்தி னோடும்
இவைசெயின் இனியதன்றே.

மாடப்புருவின் பிச்சு, நீரிலே சுழலுகின்ற வரி வண்டு, இரண்டையும் சுட்டுக், கொசுகின் தேன் கலந்து அரைத்து உருண்டை செய்து, வியர்வையிலே நனைத்துத், தாம்பூலத்துடன் கொடுத்தல் வேண்டும். இவ்வகை மருந்துகளுடன் அவரவர்க் குரிய மந்திரத்தையும் தியானம் செய்ய வேண்டும்.

[மந்திரங்கள் கொக்கோக நுட்பத்தில் காணலாம்.]

44. தாயமாம் பதுமினிக்குத்
தகவுறு மருந்தொன் றில்லை;
ஏயுறு மற்றை மூவர்
இசைத்திடு மருந்தி னாலும்

நேயமந் திரத்தி னுலும்
நிலவுறு கரணத் தாலும்
ஓய்வறு வசியம் உண்டாய்ச்
சேர்வ ரென்றேதி னுரே.

பதுமினி உத்தமி யாதலால், அவளை வசியம் செய்ய மருந்தும் மந்திரமும் ஏதுங் கிடையாது; மதன கலை நுட்பம் உணர்ந்து நடக்க அவள் நாயகனுக்கு வசியமாவாள். மற்றைய மூவரும், மருந்தினுலும் தக்க மந்திரத்தினுலும், அவரவர்க்கேற்றவாறு செய்யுங் கரணத்தாலும் வசியமாகி, என்றும் நீங்காது இணைந்து தம் நாயகருடன் இன்புற்று இருப்பர் என்பர் அறிவுடையோர்.

[வசியம்—ஈடுவகை, மந்திரம் என இரண்டாகும். இதன் விளக்கம் எல்லாம் கொக்கோக நுட்பத்துள் காணலாம்.]

5. அமுத நிலைகள்

1. மதனவேள் துதி

45. அஞ்சி லோதியர்,
ஆடன்மத் தோளியர்,
வஞ்ச மற்று
மருவுதல் செய்திட,
வெஞ்ச மின்றி
இளையவர் யாவரும்
பஞ்ச பாணன்
பதத்தை வணங்குவாம்.

ஐவேறு வகையாகப் புனையும் கூந்தலும், மூங்கிலனைய தோள்களும் உடையவரான இளமங்கையர், தம் மனத்திலே வஞ்சகமின்றித், தத்தம் நாயகருடன் மனம் ஒத்துக் கலந்து கூடி மகிழும் பொருட்டுக், கொஞ்சமும் தயங்காமல், இளையோர் யாவரும், பஞ்சபாணனுன மதனவேளின் திருவடிகளைப் போற்றுவோமாக.

[தாமரை, நீலம், அசோகம், முல்லை, மா—இவ்வைந்து மலர்களும் மன்மதனின் பஞ்ச பாணங்கள்.]

2. அமுத நிலைகள் பதினைந்து

46. பெருவிரல் புறந்தா ளோடு
பெரும்பர டணி முழந்தாள்
மருவிய குய்யம் உந்தி
மார்பு மென் முலை கைம்மூலம்
திருவளர் கழுத்தி னேடு
கபோலம் வாய் செங்கண் நெற்றி
பொருவரும் உச்சி யென்றே
புகன்றமு வைந்தி டத்தில்.

அமுதநிலை ஸ்தானங்கள் பதினைந்தாகும்; அவை, பெருவிரல், புறந்தாள், பரடு, முழந்தாள், அல்குல், நாபி, மார்பு, கொங்கை, கைம்மூலம்(தோள்), கழுத்து, கன்னம், வாய், கண், நெற்றி, உச்சி. இவற்றிலே அமுதம் நிற்கும். இவற்றிலே செய்யும் தொழில்களால் நாயகியர்க்கு இன்ப வேட்கை கிளர்ந்து பெருகும்.

3. அமுதத்தின் ஏற்றமும் இறக்கமும்

47. இடப்புற முதலா யேறும்
வளர்பிறைக் கென்ன லாகும்;
தடுப்பரும் வலப்பக் கத்திற்
றேயபிறை தனிற்றாழ் வுற்று
அடுக்குற விறங்கு மாதர்க்
கமுதென வரைவர்; பின்னர்
எடுத்ததோர் விடமதென்பர்
அமுதினுக் கேழாந் தானம்.

வளர்பிறைப் பிரதமை முதல் பௌர்ணமி வரையிலும், இடதுகாற் பெருவிரலிலிருந்து உச்சி வரைக்கும் ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வொரு அமுத நிலை ஸ்தானமாக மாதர் உடலிலே அமுதம் ஏறி நிற்கும். தேய்பிறைப் பிரதமை முதல் அமாவாசை வரை வலது உச்சியிலிருந்து வலதுகால் பெருவிரல் வரை அவ்வாறே அமுதம் படிப்படியாக இறங்கி நிற்கும். அமுதம் நிற்கும் ஸ்தானத்திற்கு ஏழாவது ஸ்தானத்திலே விஷம் நிற்கும்; அங்கே எவ்விதத் தொழிலும் அன்று செய்தலாகாது.

4. அமுத நிலை ஸ்தானங்களில் செய்வதற்கு உரிய தொழில்கள்

48. உச்சியில் மயிரைப் பற்றி
நகத்தினல் ஊன்றிக் கோதல்,
கைச்சிலை நெற்றி மைக்கண்
கனியெனச் சுவைத்து நீவல்,
நச்சிய இதழை யுண்டு
நாவினிற் பல்லால் ஊன்றல்
பச்சிளங் கபோலம் தேமாம்
பழமெனும் படி சுவைத்தல்

உச்சியில், மயிரைப்பற்றிப் பின்னுக வாங்கி, நகத்தினல் ஊன்றிக் கோதுதல்; நெற்றி கண் இரண்டையும் கனிபோலச் சுவைத்து நாவினல் நெருடுதல்; வாயிதழ்களைச் சுவைத்தல்; நாவினில் பல்லால் அழுத்துதல்; அழகிய கன்னங்களை மாம்பழஞ் சுவைப்பது போலச் சுவைத்தல்;

49. கழுத்துடன் கைம்மூ லங்கள்
கனியெனச் சுவைத்துப் பல்லால்
அழுத்திவல் லுகிரால் ஊன்றல்
அணிமுலை குழையப் பற்றிக்

கொழுத்தகண் நெருடல் நெஞ்சில்
கூருகிர் ஊன்றிக் கவ்வி
முழுத்த தாடனமோ டங்கைத்
தாடனம் முறையிற் செய்தல்.

கழுத்திலும் தோள்களிலும் கனிபோலச் சுவைத்துப் பல்லால் அழுத்தி நகக்குறிகள் பதியுமாறு ஊன்றுதல்; அழகிய தனங்களை அவை குழையுமாறு பற்றி, அவற்றின் கொழுத்த காம்புகளை நெருடுதல்; நெஞ்சில் கூரிய நகத்தை ஊன்றிக் கவ்வுதல்; உள்ளங்கை புறங்கைத் தாடனங்கள் செய்தல்;

(தாடனம்-தட்டுதல்).

50. நலம் பெறு நாபி தன்னை
நாவினல் விரலாற் சுற்றல்
பலம் பெறும் அல்குல் தன்னில்
கரிகர லீலை பண்ணிப்
பொலம்பெறு மணி சுவைத்தல்
கைம் முழந்தாள் புறந்தாள்
கலம்புனை பரடு காலின்
விரல் கையாற் பிசைந்துகோடல்.

நன்மை பெறுவதான நாபியினிடத்து நாவாலும் விரலாலும் சுழற்றுதல்; இன்பந் தருகின்ற அல்குலில் கரிகரலீலை செய்து ஆங்குள்ள அழகிய மணியினைச் சுவைத்தல்; கை, முழந்தாள், புறந்தாள், பரடு, காலின் பெருவிரல் ஆகியவற்றைக் கையாற் பிசைதலும் பற்றுதலும்;

51. மைந்தர்இக் கலை அறிந்து
மகளிரைப் புணர்வா ராகில்
இந்துவின் கிரணம் பாய
இளகிநீ ரொழுகி நிற்கும்
சந்திர காந்தப் பாவை
தனையொத்து வசம தாகிச்
சிந்தைஉள் உருகிக் காமத்
திருநதி பெருக்கு வாரே.

இத்தகைய மதனகலை நுட்பம் அறிந்து, அமுத நிலைகளுக்குரிய தொழில்கள் செய்து, தத்தம் நாயகியரோடு சேர்வாராஞல், சந்திரன் ஒளி பாய இளகி நீர் ஒழுக நிற்கும் சந்திர காந்தப் பாவையைப்போல, அந்நாயகியரானவர் தம் நாயகர் வசமாகிச், சிந்தை உள் உருகிப், பரவசப்பட்டுக் காமத்திருநதியாகிய காமநீரைப் பெருக்குவர்.

6. பஞ்சபாணம்

52. ஆன ஏகாரம்
ஐகாரம் தன்னுடன்,
வானுயர் அ-இ-உ
என்னும் மந்திரம்,
தானலர்க் கணைகளாத்
தனது கண்ணிணை
ஊனமில் வில்லதா
உவந்து பாவித்தே,

இதுவரை கூறிய புறத்தொழில்களன்றியும் ஏ,ஐ,அ,இ,உ என்னும் ஐந்தெழுத்தாகிய மந்திரங்களை மலர்க்கணைகளாகவும், தத்தம் கண்களைக் கரும்பு வில்லாகவும், தம்மை மதனனுகவும், தம் நாயகியரை இரதியாகவும் பாவனை செய்துகொண்டு,

53. ஒண்டொடி மகளிர்தம்
உரத்தில் கொங்கையில்
விண்டமைக் கண்களில்
விரும்பு முச்சியில்
எண்தரு நிதம்பத்தில்
இலக்க தாமெனக்

கொண் டெய்யின் மதனனீர்
கொழிக்கும் மாதர்க்கே.

ஒளி பொருந்திய வளையணிந்த மகளிர்தம் மார்பு, தனங்கள், கண், உச்சி, அல்குல் ஆகிய ஸ்தானங்களைக் குறியாக வைத்து, ஒவ்வொரு ஸ்தானத்துக்கும் மேற்குறித்த ஐந்து எழுத்துக்களை முறையே கண்ணுல் எழுதி எய்தால், அவர்கள்பால் மதனநீர் பெருகும் என்பர்.

ஐங்கணை எய்யும் இடங்கள்

54. நெஞ்சி லரவிந்தம்
நீள்சூதம் கொங்கைதனில்
துஞ்சும் விழியில்
அசோகமலர்—வஞ்சியர்தம்
சென்னியிலே முல்லை
திகழ்நீலம் அல்குலிலே
அன்னவேள் எய்யும்
இயல்பாம்

மதனவேள் மாதர்பால் ஐங்கணை ஏவும் முறை யாவன:- நெஞ்சிலே தாமரை மலர், கொங்கைகளில் மாமலர்; விழிகளில் அசோக மலர்; உச்சியில் முல்லை மலர்; அல்குலிலே நீலோற்பல மலர் என்பதாம்.

இதேபோல மந்திரங்களான ஐந்தெழுத்துக்களையும் மலராக உருவகம் செய்து நாயகரும் தத்தம் நாயகியர்பால் கண்ணேக்கால் முறையே எய்தல் பலன் தரும் என்பர்.

மாரன் கணைகளின் விளைவு

55. நினைக்கும் அரவிந்தம்;
நீள்பசலை மாம்பூ;
அணைத்திடருண் டாக்கும்
அசோகம்—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டும்,
மாதே! முழுநீலம்
கொல்லும்; மதனம்பின்
குணம்.

மதனபாணங்களாகிய ஐந்து கணைகளாலும் எய்யப் பெற்றவர்க்கு நேர்வன பற்றியது இது: தாமரை எண்ணி உருகச் செய்யும்; மாம்பூ மேனியிற் பசலை யுண்டாக்கும்; அசோகம் கண் கலங்கி நீர் சோர்ந்து வருந்தச் செய்யும்; முல்லை வேதனை தாளாது படுத்த படுக்கையாகி விடச் செய்யும்; நீலோற்பலமோ உயிர்ப்படங்கினாற் போலத் தம் நிலையிழந்து மயங்கிக் கிடக்கச் செய்யும்.

7 திதியும் கூட்டமும்

1. பிரதமை திதியில்

56. முற்பிர தமைக்குக் கழுத்தணைத்து
உச்சி மோந்து இதழ் பருகிப் பல்லூன்றிப்
பொற்புறு கபோலம் சுவைத்து வள்ளுகிரால்
புளகெழ இருவிலாப் புறத்தும்
பிற்புறத் தினிலும் ஒலியெழ வாங்கிப்
பெருகிய நிதம்பத்தில் உகிரால்
சிற்பமா யெழுத மந்தசீர்க்காரம்
வஞ்சியர் செய்துடன் புணர்வார்.

முதலாவதாகிய, பிரதமை நாளில் நாயகியைக் கூடும் போது, நாயகன் தன் கையால் நாயகியின் கழுத்தை அணைத்து, உச்சியை மோந்து, இதழினைப் பருகிப் பல் ஊன்றி, அழகு நிலவும் கன்னங்களைச் சுவைத்து, உடல் புளகிக்குமாறு இரு விலாப் புறத்தும், முதுகிலும் ஓசை எழ மெல்லெனத் தட்டி, நகங்களினால் நிதம்பத் தட்டிலே சித்திரம் எழுதுவதுபோல வரைந்தால், நாயகியானவள் மந்த சீர்க்காரம் செய்து, ஒத்த போகநிலை வரப்பெற்றவளாகி, நாயகனுடன் மனம் ஒத்துக் கலந்து கூடி இன்புறுவாள்.

[மந்த சீர்க்காரம் என்பது ஒத்த போக நிலை எய்திய நாயகியர் தம் இன்ப மயக்கத்தால் அவர் வாயினின்று காம பரவசத்தோடு எழும் மெல்லிய 'இச்இச்' எனும் ஒலியாகும்].

2. துதியை நாளில்

57. துதியையில் இருகை அணைத்து வார்முலையைத்
தொட்டுவள் ளுகிர்க்குறி காட்டி,
அதிவித நயனம் கனிந்தவா யமிர்தம்
அழகிய கபோலம்வாய் சுவைத்திட்டு
இதமுறுமினிய வாகு மூலங்கள்
இரண்டினும் மிகவிளை யாடி,
மதிநுதன் மடவார் இரதியாய்த் தாமும்
மதனனுய் அன்புறப் புணர்வார்.

துதியைத் திதியிலே, நாயகியைத் தம் இருகைகளாலும் இறுகக் கட்டி அணைத்துக், கொங்கைகளைத் தொட்டுக் கூறிய நகக் குறிகளை அங்கே அழுத்திப், பலவாறு மருளும் கண்கள், கனிந்த வாயமிர்தம், அழகிய கன்னங்கள் ஆகிய இவற்றை வாயால் சுவைத்து; இதமான இனிய தோள்களிரண்டிலும் அதிகமாகப் புறத்தொழில் செய்து விளையாடினுல்; பிறை நுதன் மாதர் தம்மை ரதியாகவும் தம் நாயகரை மதனனுகவும் உள் ளத்திலே கொண்டு, அன்போடு, காம பரவசராய்ச், சேர்ந்து மகிழ்வார்கள்.

3. திரிதியை நாளில்

58. மாசறு மூன்றும் திதியினில் ஒருகை
மணிக்கழுத் திறுகுறத் தழுவித்
தூசுலாம் மருங்குல் ஒருகையால் தழுவித்
துணைமுலை அங்கை மூலத்தும்

ஓசையா லுடலம் புளகெழ ஆங்கு
ஒள்ளுகிர்க் குறிபல காட்டிப்
பாசிழை யல்குன் மடந்தையர் களிப்பப்
பவளவாய் பருகுதல் முறையே.

குற்றமற்றம் மூன்றும் திதியினில், ஒரு கையால் நாயகியின் மணிபோலுங் கழுத்தினை இறுக்கமுறத் தழுவி, மற்றொரு கையால் ஆடை தவழும் மெல்லிய இடையை அணைத்து, இரு கொங்கைகளிலும் தோள்களிலும் ஓசை யுண்டாகவும், உட லானது புளகிக்குமாறும் தாடனம் செய்து, நகக் குறிகள் பல வும் அழுத்திப், பசிய மேகலை யணிந்த மடந்தையர் இன்புறுமாறு பவளவா யிதழ்களில் அமுதபானமுஞ் செய்து கூடுதல் முறை யாகும்.

4. சதுர்த்தி நாளில்

59. சதுர்த்தியின் மகளிர் முலைமுக டமுந்தத்
தழுவிவாய் பல்லுறச் சுவைத்துக்
கதித்திடுவேழப் புழைக்கையில் திரண்ட
கவானிலும் அங்கை மூலத்தும்
புதுக்களிவிளைய நகைவிளை யாடிப்
புளகெழச் சுரதநீர் வெள்ளம்
குதித்தொரு நதியிற் பரவிடஇயற்றிக்
கூடுவர்ஆடவர் குறித்தே.

சதுர்த்தித் திதியிலே, மகளிரின் கொங்கை முகங்கள் அழுந்துமாறு தழுவி, வாயினிற் பற்குறி பதிய அதனை இறுகப் பற்றிச் சுவைத்து, பருத்த யானைத் துதிக்கை போலும் திரண்ட தொடைகளிலும், தோள்களிலும் புதிய இன்பம் விளையுமாறும் உடலெலாம் புளகமுண்டாகுமாறும் மகிழ்வுடன் தொட்டு

விளையாடிச் சுரத நீரானது வெள்ளம்போற் குதித்து நதிபோலப் பெருகிப் பரவச் செய்து, ஆடவர் தம் நாயகியரைக் கருத்துடன் கூடுவர்.

5, 6. பஞ்சமி-சஷ்டி திதிகளில்

60. பஞ்சமிதன்னில் வலக்கையான் மயிரைப்
பற்றியே செவ்வாய் அமுதுண்டு
நெஞ்சகங் குழைய முலேமுகம் சுவைத்து
நீவியே புணர்ந்து; சஷ்டிக்கு
வஞ்சிநுண் இடையார் வாயமுதுண்டு
வளரல்குல் ஒருவிரல் புகுத்தி
கஞ்சமென்மலர்போல் நாபியிற் புளகங்
காட்டியே இனிதினில் கலப்பார்.

பஞ்சமித் திதியிலே, ஆடவர் தம் நாயகியரது கூந்தலை வலது கையினுற் பிடித்துப், பின்னுக வளைத்துப் பற்றிச், செவ்வாய் இதழ் அமுதம் உண்டு, நெஞ்சகம் குழையுமாறு முலை முகங்களைச் சுவைத்து, நாவினுல் வருடிப் புணர்வர்.

சஷ்டித் திதியில், வஞ்சிக்கொடி போன்ற நுண்ணிடையாரின் வாயமுதம் உண்டு, அல்குலிலே ஒரு விரலைப் புகுத்திக், கரிகர லீலைகள் செய்து, தாமரை மென்மலர் போன்ற நாபியினிடத்துப் புளகமுண்டாகும்படி அதற்குரிய தொழிலைச் செய்து, இன்பமுடன் கூடுவர்.

7. சத்தமியில்

61. சத்தமிதன்னில் மகளிர்தம் நிதம்பத்
தட்டினில் விரற்கொடு சுற்றிப்

புத்தமு தனைய வாயிதழ் அருந்திப்
பூகமென் கழுத்திரு புறத்தும்
முத்தணி யுரத்தும் இருகபோலத்தும்
உகைக்கவள் ளுகிர்க்குறி எழுதிச்
சித்தமங் கழியப் புணர்ந்திடில் காமத்
திருநதி யுவட்டெழுந் திடுமே.

சத்தமி நாளிலே, மகளிர்தம் நிதம்பத் தட்டினில் விரலைக் கொண்டு சுழற்றிப், புத்தமுதம் போன்ற வாயூறல் அருந்திப், கமுகை யொத்த மென்கழுத்தின் இருபுறங்களிலும், முத்தாரம் அணியும் மார்பிலும், இரு கன்னங்களிலும் அரும்பு போன்று நகக்குறி எழுதி, உள்ளம் பரவசமாகும்படி செய்து, புணர்ந்திட அவர்க்குக் காமநீர் வெள்ளம்போலப் பெருகும்.

8. அஷ்டமியில்

62. அட்டமி தன்னில் விட்டு விட்டந்த
ஆயிழை மணிக்கழுத் தணைத்து
வட்டவார் முலையைப் புளகெழப் பிணித்து
வாயினுன் முலேயடி சுவைத்துப்
பட்டடை பதியு நாபியை நீவிப்
பவளவாய் பற்படப் பருகித்
தட்டுயர் நிதம்பத் தூருமூ லத்துந்
தையலர் சுகமுறப் புணர்வார்

அஷ்டமியில், ஆயிழையாரின் மணிக்கழுத்தை விட்டு விட்டு அணைத்துக், கச்சணிந்த கொங்கைகளை உடல் புளகிக்குமாறு பற்றி, முலேயடிகளைச் சுவைத்து, பட்டாடை பதியும் உந்திக் கமலத்தை நீவிப், பவளம் போன்ற வாயிதழ்களிலே பற்குறி

பதியச் சுவைத்து இதழமுதுண்டு, பொன்தட்டுப்போலும் உயர்ந் திருக்கிற அல்குல் தட்டிலும் அடித்தொடைகளிலும் கையால் தடவிச் சுகம் பெறுமாறு செய்து கூடுவர்.

9. 10. நவமி தசமித் திதிகளில்

63. நவமியிற்புல்லி யிதழமு துண்டு
நாபியை விரலினுற் சுற்றிக்
குவிமுலே பிணித்து நிதம்பத்தை நீவிக்
குடைந்துமே சேர்வர்; தசமிக்குக்
கவினுதல் சுவைத்து மிடற்றுஉள் ளழுத்திக்
கடிதட முலே கவான் முதுகு
துவளிடஇயற்றிப் புளகெழ நீவித்
தோகையர்க்கு ஆனந்தம் விளேப்பார்.

நவமித் திதி நாளில், நாயகியைத் தழுவி, இதழ் அமுதம் உண்டு, நாபியைச் சுழற்றி, குவிந்த கொங்கைகளே இறுகப்பற்றி, அல்குலேத் தடவிக் குடைந்து பின் சேர்வர்.

தசமித் திதியில், அழகு நெற்றியைச் சுவைத்துக், கழுத்தை நகம் பதியுமாறு அங்கையால் தழுவி; நகம் அழுத்திக், கடிதடம், கொங்கை, தொடை, முதுகு முதலியவற்றிலே கைத்தாடனங் கள் செய்து, நாயகிக்குப் புளகமுண்டாக்கிப் புணர்ந்து இன்பம் விளேவிப்பார்கள்.

11. ஏகாதசியில்

64. ஏத்தியஏகா தசியினில் நகத்தால்
எழுதியே கழுத்துற அணேத்துப்
பூத்தசெங் குமுத வாய்முறை பருகிப்
புதுநகை யிடையிடைப் பெருகக்

கோத்தமுத்தார மார்பிடைப் பலகாற்
குவிகரத் தாடனம் பண்ணிக்
காத்த மேகலேயை அகற்றிவண் மனேயிற்
காமநீர் பெருக்குவர் கரத்தால்.

ஏகாதசியில், நாயகியின் கழுத்தை இறுக அணேத்து நகக் குறி பதித்து, மலர்ந்த செங்குமுத வாயிதழ் அமுதை முறையா கப் பருகிப், புது மகிழ்வு இடையிடையே பெருகுமாறு முத்தார மார்பில் பல முறை குவிகரத் தாடனம் செய்து, இடையைச் சூழ்ந்திருக்கும் மேகலேயை நெகிழ்த்திக், கடிதடத்திலே கரிகர லீலே செய்து காமநீர் பெருக்கிக் கூடுவர்.

[குவிகரம்-கை குவித்து உள்ளங்கையால் ஓசையெழத் தட்டுதல்].

12. துவாதசியில்

65. துவாதசி தன்னில் குழைந்திடப் புல்லிக்,
கபோலத்தைச் சுவைத்து, நேத்திரங்கள்
அவாவொடு பதற மோந்து சீர்க்காரம்
அரும்பிட இதழிற்பல் லூன்றி
உவாமதி வதனங் குறுவியர் வரும்ப
அனலிடு மெழுகென உடலம்
கவானடிமூலம் கரைந்தொன்றி யுருகக்
கயற்கணர் முயக்கிடைக் கலப்பார்.

துவாதசித் திதியிலே, நாயகியர் உடல் குழையுமாறு இறுகத் தழுவிக், கன்னஞ் சுவைத்து, ஆசையுடன் கண்கள் துடித்துப் பதறுமாறு மோந்து, சீர்க்கார ஒலி உண்டாகுமாறு இதழிலே பல்லூன்றி, முழு நிலவனைய அவள் திரு வதனத்தில்

குறுவியர்வு அரும்ப, உடலும் அடித்தொடையும் தோள்களும் ஒன்ருெடொன்று இன்பவாதையால் கரைந்து ஒன்றி உருகும் வண்ணம் தழுவிப் புணர்வர்.

13, 14. திரயோதசி - சதுர்த்தசிகளில்

66. கூறியதிரயோ தசியினில் கபோலம்
குதட்டியே பருகிக் கண்டத்தில்
ஊறுகைந் நகத்தால் இயற்றி சீர்க்காரம்
உதித்திடப் புணர்வர்;மேற் றிதியில்
ஏறிய விழியை நாவினுனீவி
இருகை மூலத்து வள் ளுகிரால்
கீறியே கரத்தால் கரிகரலீலை
கிளர் நிதம்பத்தினிற் செய்வார்

திரயோதசியில், கன்னத்தை வாயாற் குதட்டிப் பருகிக், கழுத்தில் கூரிய நகத்தால் நகக்குறிகள் பதித்துச், சீர்க்காரம் உண்டாகும் வண்ணம் செய்து புணர்வர்.

சதுர்த்தசியில், கண்களை நாவால் தடவி, இருதோள் களிலும் நகத்திஞற் கீறி, கிளர்ச்சியுடைய நிதம்பத்தில் கை விரலாற் கரிகர லீலைகள் செய்து புணர்வர்.

15. பூரணை-அமாவாசை நாட்களில்

67. ஈருவாவிற்கும் சங்கமே யனைய
எழிற்கழுத் துகிற்குறி காட்டி
மாரஞலயத்தை விரலிஞற் சுற்றி
வனமுலை பிடித்துக் கண் நெருடி

ஆரவேதழுவி ஒழுகுகா மத்தின்
அருவிநீர் பாய்ந் தினிதோட
வார்பொரு முலையார் தம்முடன்
புணர்வார் மதனநூல் மதித்தஆடவரே.

பௌர்ணமி, அமாவாசை என்ற இரு உவா நாட்களிலும், சங்கம்போன்ற அழகிய கழுத்திலே நகக்குறி காட்டி, மாரன் ஆலயத்தை விரலிஞல் சுழற்றி, அழகிய கொங்கைகளைப் பிடித்து, அவற்றின் கண்களை நெருடி, ஆசைதீரத் தழுவி, ஒழுக்கெடுக்குங் காமநீர் அருவியாகப் பாய்ந்து இனிதாய் ஓடக், கச்சொடு பொருதும் தனபாரம் உடைய தத்தம் நாயகியருடன் சேர்வர். இவ்வாறு மதனநூல் கற்று, அதனை மதித்து நடக்கும் ஆடவர் ஒவ்வொரு திதிக்கும் ஏற்பப் புறத்தொழில்கள் ஆற்றியே தம் நாயகியரைக் கூடுவர்.

[இரண்டு பட்சங்களுக்கும் திதி முப்பது எனினும், பெண்கள் ருதுவான நாளையே முதற் பட்சப் பிரதமையாக்கிக் கொள்ளல் காமநூல் மரபு. தேகக் கூறுக்குத் தக்கபடி பெண்கள் ரஜஸ்வலையாகும் (தூரமாகும்) காலம் 25 முதல் 35 நாள் வரை மாறுபடுவதால், இந்நாட்களின் மொத்த நாழிகைகளைக் கணக்கிட்டு முப்பதால் வகுத்து வருவதே ஒரு திதிக்காலம் எனக் கொள்ளுதல் வேண்டும். பஞ்சாங்கத் திதிநாள் வேறு; இது வேறு என்று அறிந்து மேற்கொள்க.]

இன்பம் இன்பம்!

68. அளவரும் இன்பம் நல்கும்
அணங்கஞர் இன்பம் நிற்க;
உளம்அறி வின்மை யாலே
உண்டு பேரின்பம் என்பார்

குளமுறு புனல தென்னக்
கானலைக் குறித்துக் கங்கை
வளமுறு புனல் கவிழ்த்து
மாய்வுறு தன்மை யோரே.

அணங்கு போன்ற நாயகியர் அளவற்ற இன்பம் தருபவர்கள். அந்த இன்பம் கிடைக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இருந்தும் உள்ளத்தில் அறியாமை கொண்டு சிலர் பேரின்பம் என்ற வேறு ஒன்று உண்டு என்கின்றனர்.

நலந்தரும் பருகுநீர் வைத்திருக்கிருன் ஒருவன். கானல் பறக்கும் வெளியிலே செல்லும்போது வேட்கை அதிகமாகிறது. எதிரே கானல் வெளியை நீர் நிறைந்த குளம் என்று அறியாமையால் எண்ணிக், கையிலிருந்த நீரையும் கீழே கவிழ்த்துவிட்டு அதைநோக்கி ஓடுகிருன். உள்ள நீரும் இழந்து அங்கே கானலையே கண்டு ஏமாறுகிருன். அவனைப் போன்ற அறியாமை உடையவரே மேற்கூறியவாறு பேரின்பம் உண்டு எனச் சொல்பவரும்.

8. மூவகை மாதரும் ஆடவரும்

நீளமும் ஆழமும்

69. ஆண்குறி நீளமும் அரிவை தன்குறி
மாண்புறு ஆழமும் வகுத்துக் கூறிடில்
காண்தகும் ஆறும்பின் கணித்த வொன்பதும்
வேண்டும் ஈராறுமாம் விரற்க ணக்கினே.

ஆண்குறி நீளமும், பெண்குறி ஆழமும் முறையே வகுத்துக் கூறப் புகுந்தால், ஆறு, ஒன்பது, பன்னிரண்டு விரல்கள் அளவினதாக அவை மூவகைப் படும்.

மூவகையினர்

70. மூவகை ஆடவர், முயலொடு, ஏறு, பின்
வாவிடு பரிஎன்பர்; மாதர் மூவகை
தாவிய மானெடு, தகுதி சால்பரி
ஓவறு பிடியென உரைக்கும் ஆகமம்.

ஆடவர் மூவகையினர்: முயல், ஏறு, குதிரை என்பன அவை. பெண்களும் மூவகையினர்:மான், குதிரை, யானை என்பன அவை:

[குறி அளவுக்குத் தக்கபடி பிரித்த பிரிவு இது.
இதற்கு விவரம்]

விரல் அளவு*	ஆண்	பெண்
6	முயல் சாதி	பெண்மான் சாதி
9	ரிஷபச் சாதி	பெட்டைக் குதிரைச் சாதி
12	குதிரைச் சாதி	பிடியானைச் சாதி

சமரதச் சேர்க்கை

71. மானெடு குறுமுயல் மருவல், பெட்டையாம்
ஊனமில் பரியுடன் இடபம் ஒன்றுதல்
கான்வரு பிடியுடன் பரிகலந் திடல்
ஆனதோர் சமரதம் ஆகும் மூன்றுமே.

மான் சாதி நாயகியோடு முயற் சாதி நாயகன் கூடுதல்; குதிரைச் சாதி மனைவியுடன் காளைச் சாதிக் கணவன் சேர்தல்; பிடியானைச் சாதி மகளிருடன் குதிரைச் சாதி ஆடவர் கலத்தல்; இவை மூன்றும் சமரதம் எனப்படும்; அதாவது, ஒத்த இன்பம் இருவர்க்கும் தரும் சேர்க்கை என்பது கருத்து.

உச்சச் சேர்க்கை

72. இயம்பிய மானுடன் இடபம் ஒன்றினும்
பயன்படு வடவையைப் பரிக லக்கினும்
வயம்பெறு தலைவனுக் கதிகம் வந்ததால்
நயம்பெறும் உச்சமமாம் இரண்டும் நாடினே!

* இந்த விரற்கடை அளவுகளை ஆண் குறிக்கு உரிய நீளமாகவும், பெண் குறிக்கு உரிய ஆழமாகவும் கொள்க.

மான் சாதிப் பெண்ணுடன் காளைச்சாதி ஆணும், குதிரைச் சாதிப் பெண்ணுடன் குதிரைச் சாதி ஆணும் கூடுதல் உச்சப் புணர்ச்சி எனப்படும். இங்கே பெண்குறி ஆழத்தினும், ஆண் குறியினது நீளம் மூன்று விரல் அதிகமாதலால் உச்சம் எனப் பட்டது.

நீசச் சேர்க்கைகள்

73. வடவையும் முயலுமாய் மருவு மாயினும்
பிடியுடன் இடபந்தான் பெரிது கூடினும்
துடியிடை மகளிர்பால் அதிகம் தோன்றலால்
அடைவற நீசமென் றிரண்டு மாகுமே

பெட்டைக் குதிரைச் சாதிப் பெண்ணுடன், முயற் சாதி ஆண்மகன் கூடினாலும், பிடியானைச் சாதி மாதருடன், காளைச் சாதி ஆண் கூடினாலும், இவ்விரு வகைகளிலும் பெண் குறியின் ஆழம் மூன்று விரற்கடை ஆண்குறி நீளத்தைவிட அதிகமாவதால் நீசம் ஆகும்.

அதிஉச்சம் அதிநீசம்

74. உழையொடு பரியொன்றின் அதிக உச்சமாம்
தழைசெவிப் பிடியொடு முயலுஞ் சார்ந்திடில்
விழைவற அதிநீசம் என்ன வேதமும்
பழையநன் னூல்களும் பகரும் என்பதே.

மான்சாதி மாதுடன், குதிரைச் சாதியாண் சேர்வது அதியுச்சம் ஆகும். பெண் யானைச் சாதிப் பெண்ணுடன், முயல் சாதி ஆடவன் சேர்வது அதிநீசம் எனப்படும். நீள ஆழம் மிகவும் வேறுபடுவதனால் இவற்றை அதி உச்சம் அதிநீசம் என்றனர். பழைய காம வேதங்களும் பிற நூல்களும் கூறுவது இது.

ஏற்றத் தாழ்வுகள்

75. இத்தனை ஓதிய அளவைக்கு ஏற்றிட
முத்திசேர் இன்பமும் மூன்று என்றேமால்;
சித்தசன் ஆகமத் திட்ப நுட்பமாம்
உத்தமம் மத்திமம் அதமம் ஓதுவாம்.

இங்ஙனமாகக் குறிகளின் அளவுக்கேற்பச் சீவன் முத்தராகக் காதலர் தமக்குள்கூடி அனுபவிக்கும் இன்பமும் மூன்று விதம் என்றேம். அவை திட்ப நுட்பஞ் செறிந்த உத்தமம், மத்திமம், அதமம் என்பன என்று மதன நூல்கள் கூறும்.

76. உரைத்திடு சமரதம் மூன்றும் உத்தமம்;
இசைத்திடும் உச்சங்கள் இரண்டும் மத்திமம்,
வரைத்திடும் நீசங்கள் இரண்டும் மற்றென்றாய்
விரித்திடும் அதிநீசம் மிகுந்த உச்சமே.

முன்சொன்ன சமரதப் புணர்ச்சி மூன்றும் உத்தமம்; உச்சப் புணர்ச்சி இரண்டும் மத்திமம்; அதிநீச அதியுச்சப் புணர்ச்சிகள் நான்கும் அதமம் ஆகும்.

77. அறைந்த இந்நான்குமே அதமமாம் என்ப;
குறைந்திடும் நீசமென் றுரைப்பது, ஆண்குறி
குறைந்ததால் மாதரைக் கூடல் இன்பமாய்
நிறைந்தவர் தினவரு நிலையின் என்பவே.

மேலே சொன்ன, நான்கு அதமங்களிலும், நீசத்தினும் உச்சமாவது ஒருவாறு பாதகமில்லை எனலாம். நீசத்தில் ஆண் குறியின் நீளம் பெண்குறி ஆழத்திலும் மிகுதியும் குறைவாயிருப்பதால், அம்மாதருக்குக் காமத்தினவு சற்றும் நீங்காததலின், ஒவ்வாதது எனக்கருதி ஒதுக்கப்படுதல் வேண்டும்.

நீசத்தின் நிலைகேடு

78. கொழுங்கயல் கண்ணினார்தம்
குறியும்தன் குறியுமோர்ந்து
வழங்கிய நீசமான
விதத்தினின் மருவிச் சேரல்
பழங்கவ டதனைக் கொண்டு
பாரகழ்ந் தடியிற் றாழ்ந்த
கிழங்கது கல்லுந் தன்மை
என்னவே கிளக்க லாமால்.

கொழுத்த கயல்மீன் போலும் கண்ணினையுடைய மாதர்களின், குறியாளமும் தன் குறி நீளமும் அறிந்து, சமரதப் புணர்ச்சியில் ஈடுபடுவதே ஆடவர்க்கும் இன்பமாகும். அன்றிப் பெண் குறி ஆழ்ந்திருக்கிறபோது குறைந்த நீளமுள்ள குறியுடைய ஆடவன் சேர்வது எதுபோல்வதெனில், மிக்க ஆழத்துக் கிழங்கை வலியற்ற பழங்கோலாற் கல்லி எடுக்க முயன்றிடும் அறியாமை போல்வதே யென்று சொல்லலாம்.

உச்சமும் தீதே

79. உச்சமுந் தீதென் றேதல்
யாதெனில், ஓவ மன்னார்
இச்சைகூர் நிதம்ப மாழம்
இன்மையாற் குறிநீ ளத்தாற்
குச்சித நோவு கூர்ந்து
கொழுவிய சுகவி ரோதம்
நிச்சய மாக உண்டாய்ப்
பரிவுற்று நிற்ப ரன்றே.

உச்சமும் தீது என்பது ஏனெனில், பாவையர் பெண்குறியினது ஆழம் குறைந்து, ஆடவர் குறி நீளம் அதிகமா யிருப்பதால், சேர்க்கைக் காலத்தில் பெண்குறியானது நோவுற்றுச் சுகத்துக்குப் பதிலாக அம் மாதர்க்கு நோவு உண்டாவதனுல் என்க.

இதனுல், இந்த அளவெல்லாம் ஒத்தது அறிந்தே திருமண வாழ்வில் நாயக நாயகியராகப் பிணைத்தல் நன்ருகும்.

9. போகமும் இன்பமும்

காமத்தினவு

80. கொந்தவிழ் குழலி ஞர்தம்
குய்யத்தின் நுண்ணி தாக
மந்தமாம் தினவுண் டாக்கி
மத்திமத் தினவுண் டாக்கிச்
சிந்தையில் அதம மான
தினவையும் மிகவுண் டாக்கி
வந்துயர் புழுக்க ளெல்லாம்
குருதியின் வடிவாய் நிற்கும்.

கொத்துக் கொத்தாக மலரணிந்த கூந்தலினரான பெண்களின் குறியினது உட்பகுதியில், நுண்ணிய செந்நிறப் புழுக்கள் குருதியோடு சேர்ந்து மந்தம், மத்திமம், அதமம் என்ற மூவகைத் தினவுகளையும் சதா உண்டாக்கிக் கொண்டேயிருக்கும்.

குறிப்பு:— காமத்தினவு என்பது புழுக்கடி போன்றது எனக் குறிப்பதற்காகவே புழுக்கள் என்கிருர். புழுவேதும் இருப்பதாக மயங்குதல் கூடாது.

தினவு நீங்காது

81. கொழுவிய நிதம்பம் தன்னில்
தினவினல் குறுகு றென்னும்
புழுவெலாம் கணவன் கூடிப்
புணர்ச்சிசெய் திடுங்கா லத்தில்
நழுவியே தினவு கெட்டு
நற்பெரும் சுகத்தை நல்கும்
வழுவிய கலவி தன்னில்
விளைபுழு மாய்ந்தி டாவே.

இவ்வாறு நிதம்பத்தின் உள்ளே தினவெடுக்கச் செய்யும் புழுக்கள் எல்லாம், கணவரோடு கூடிப் புணர்ச்சி செய்து இன்புறுங் காலத்தில் நழுவி அழிந்துபோக, அதனல் அத் தினவுகள் நீங்கி, அவள் சிறந்த பேரின்பத்தை அடைவாள். பெண்ணுக்குத் திருப்தி ஏற்படாத பயனற்ற பொருந்தாக் கலவி களினல் இப்புழுக்கள் மறையாவாதலின் அதனல் நன்மை ஏதும் இல்லை என்க.

முந்தினும் பிந்தினும் கேடுதான்

82. நன்னுதல் போக முந்த
நயந்துபின் புணர்வானுகில்
முன்னமே சுகத்தை நல்கி
முழுதும்பின் துன்பம் நல்கும்
மின்னவட்கு ஒத்துப் போகம்
இயற்றிடு மென்னில் தானே
பின்னைமற் றதனில் வேறு
பேரின்ப வாழ்வொன் றுண்டோ?

நாயகன் நாயகியைக் கூடும்போது, அவள் போகம் முந்த வும், தன் போகவும் பிந்தவும் நேருமாறு சேர்வானுகில், அச் சமயத்தில், ஏதோ இன்பம் போன்று இருந்தாலும், நாளடை வில் அதனல் வருத்தமே பெருகும். அவ்வாறன்றி, நாயக நாயகியர் இருவரும்,' ஒரே காலத்தில் தமக்குப் போகம் நிகழு மாறு சமபோக நிலையினராகிச் சுகித்தால், அதனினும் மேலான பேரின்ப வாழ்வு வேறெதுவும் இல்லை என்பதறிக.

ஒத்த போகத்தின் சிறப்பு

83. இருவரும் ஒத்துப் போகம்
இயற்றிடுங் கலவி தன்னில்
அரிவைகண் ணிணையயர்ந் திட்டு
அரைபட மொழிகள் தேய
முரிதரு புருவங் கோட
மோகன அழுகை தோன்றப்
பரவச முற்று வீழ்ந்து
பல்பல்காற் றழுவிக் கொள்வாள்.

இருவரும் ஒத்துப், போகம் நிகழ்த்தும் கலவிக் காலத்திலே, நாயகியானவள் ஆனந்த பரவசமாகிக், கண்ணிணைகள் பாதி மூடியும் பாதி திறந்தும் மயங்கிச் சோரவும், பேச்சுக்கள் நிலை தடுமாறிக் குளறவும், புருவங்கள் நெறிந்து வளையவும், மோகன அழுகை (சிணுக்கம்) தோன்றப், பரவசப்பட்டுத், தன் நாயகன் மேல் தானுகவே வீழ்ந்து வீழ்ந்து பல தடவை ஆசையோடு அவனை அணைத்துக் கொள்ளுவாள். இதுவே பெறற்கரிய பேரின்பம் ஆகும்.

சேர்க்கைக் காலம் மூன்று

84. போகத்தின் இறுதி யாகப்
புணர்ந்திடுங் காலங் கூறின்

ஊகித்த அற்ப காலம்
உவந்தமத் திபமாம் காலம்
மோகித்த அதிக காலம்
என்றிவை மூன்றும் இன்பப்
பாகொத்த சொல்லி ஞர்க்கும்
தலைவர்க்கும் பகர்ந்த தாமே.

நாயகனும் நாயகியும் தம்முள் மனம் ஒத்துக்கலந்து கூடும் போது, இறுதியாகப் போகம் விடுகிற வரையில் உள்ள காலம் சேர்க்கைக காலமாகும். அற்ப காலம், மத்திம காலம், அதிகக் காலம் என்று, அது சேர்க்கை நீடும் கால அளவை யொட்டிக் கணித்துக் கூறப்படும். இது தலைவன் தலைவியாகிய இருவர்க்கும் பொருந்தும்.

சேர்க்கை வேகங்கள் மூன்று

85. இணங்கிய மந்த வேகம்
எழில்கொள்மத் திமமாம் வேகம்
முணங்கிய சண்ட வேகம்
எனு மூன்று பிரிவுண் டாகும்
மணங்கெழு கால மூன்றும்
மற்றைய வேக மூன்றும்
பிணங்கிய குறிகள் தம்மால்
இருவர்க்கும் பிரித்துப் பாரே.

போக காலம் மூன்றுவகைப்படுதலைப் போலக், கூடுகின்ற நாயக நாயகியரின் போக வேகமும், மந்த வேகம், மத்திம வேகம், சண்ட வேகம் என மூன்றுகப் பகுத்து உரைக்கப்படும். இம் மூன்று வகைக் காலமும் வேகமும் நாயக நாயகியரின்

குறிகளது அளவோடு சேர்த்துப் பல பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்க வேண்டுவனவாகும்.

மந்தவேக நாயகியைக் கூடும் விதம்

86. கோவை வாயமுத முண்டு
குழையவே புல்லி மோந்து
நாவினுல் முலையை யுண்டு
நயந்ததா டனமும் செய்து
நீவியை நெகிழ்த்தி மெல்ல
நிதம்பத்தைக் கனியப் பண்ணி
மேவியே புணர வேண்டும்
மந்தமாம் வேகத்தார்க்கே.

மந்த வேகம் உடையவரான தன் நாயகியைக் கூடும்போது, நாயகன் கவனிக்க வேண்டிய தொழில் முறைகள்: கொவ்வைக் கனி போன்ற அவளது வாயிதழ் சுவைத்து, இதழமுதம் உண்ணல்; அவள் குழையுமாறு இறுகத் தழுவல்; உச்சியை மோந்து நாவினுல் தனத்தைச் சுவைத்து இதமாகத் தட்டுதல்; சேலை முடிப்பை நெகிழ்த்தி மெதுவாக நிதம்பத்திலே காமஞ் சுரந்து கனியுமாறு புறத் தொழில் செய்தல்; இதன்பின் கூடுதல்.

மத்திம வேகப் பெண்ணைக் கூடுதல்

87. புகை மலர்க் குழலைப் பற்றிப்
புளகெழ இறுகப் புல்லி
நகை யெழ இதழை யுண்டு
நகஞ்சில முலையிற் கோட்டி

அகமகிழ் தாடனங்கள்
அரியசும் பனங்கள் செய்து
வகைபெறப் புணரல் வேண்டும்
மத்திம வேகத் தார்க்கே.

நாயகி மத்திம வேகம் உடையவளாயிருந்தால், நாயகன் அவளைக் கூடும் முறைகள்:— உடல் புளகிக்குமாறு இறுக உடலுடன் உடல் சேரத் தழுவல்; அகிற்புகை கமழும் மலர்க் கூந்தலைப் பற்றிப் பின்னுகைத் தலையை வளைத்துப் பற்குறிகள் தோன்ற இதழமுதம் உண்ணல்; தனங்களில் நகக்குறி தோன்ற அழுத்திப் பற்றுதல்; தாடன வகைகளும் சும்பன வகைகளும் அறிந்து செய்தல்; முதலியவையாம். இவற்றால் அவள் உள்ளம் களிதுள்ளுமாறு செய்து, பின்னர் முறையாகச் சேர்தல் வேண்டும்.

சண்ட வேக நாயகியைக் கூடும் விதம்

88. தொண்டைவாய் அமுதம் உண்டு
சோதிப்பற் குறிகள் காட்டிப்
பண்டுள தாட னங்கள்
அகங்கைத் தாடனங்கள் பண்ணி
விண்டவள் ளுகிரால் பல்லால்
விளங்கமார் பகத்திற் கோட்டித்
தண்டியே புணரல் வேண்டுஞ்
சண்ட வே கத்தி னூர்க்கே.

சண்டவேகமுடைய தன் நாயகியைக் கூடும் நாயகன் சேர்க்கைக் காலத்திலே செய்யவேண்டுவன:— கொவ்வைக் கனிவாயின் இதழ் அமுதம் உண்ணல்; இதழ்களிலே பற்குறி பதியுமாறு அழுத்திச் சுவைத்தல்; புறங்கைத் தாடனம், அகங்கைத் தாடனம் முதலியவை முறையாகச் செய்தல்; நகக் குறிகளும் பற்குறிகளும் மார்பகத்தில் பதித்தல்; முதலியனவாம். இத்துடன் இருவரும் தத்தம் உடலிருகக் கட்டித் தழுவிச் சேர்தல் வேண்டும்.

பொருந்தாத திருமணம்

89. இவ்வண்ணஞ் சண்ட வேகத்து
இயற்கையில் புணர்ந்திட் டாலும்
கைவண்ணத் தெடுத்துச் சொன்ன
புறத்தொழில் காட்டி னாலும்
செவ்வண்ண உருவி னூர்க்கு
மோகமும் தினவும் தீரா
அவ்வண்ண மாத ரார்க்கும்
அடுத்தஆட வர்க்கு மாமே.

சண்ட வேகமுடைய நாயகியரை மந்த மத்திம வேகமுடைய நாயகர் அதற்குரிய புறத்தொழில்கள் அனைத்தும் வழுவாமற் செய்து கூடினாலும், அதனால் அவர்க்குப் போகமும் விடாது, காமத்தினவும் நீங்காது; ஆதலால், அத்தகையோர்க்கு ஏற்ற சண்டவேகமுடைய ஆடவரே அவரை மணந்து கூடுதல் பொருத்தமாகும்; பிறர் அவரை மணப்பது தவறு.

சேர்க்கை வகை இருபத்தேழு

90. பழுதறு மளவை மூன்றும்
பற்றிய காலம் மூன்றும்
மொழிவரு வேகம் மூன்றும்
ஒவ்வொன்று மும்மூன் றாகக்

கொழுவிய கலவிக் கான
கொத்திணைப் பிரகா சிக்கின்
முழுதுணர் புலவர் சங்கை
மூவொன்ப தென்றே சொல்வார்.

குற்றமற்ற விரலளவைகள் மூன்றும்; போக காலம் மூன்றும், வேகம் மூன்றும்; ஆகிய இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒன்பதாகச் சேர்தற்கான முறைகளைத் தொகைப்படுத்தி, அவை மொத்தம் இருபத்தேழு என்பர், மதனநூலின் தத்துவம் உணர்ந்த அறிஞர்கள்.

உத்தமம் மத்திமம் அதமம்

91. விதித்திடும் அளவை
வேகமிம் மூன்றும் ஒக்கின்
மதித்தஉத் தமமென் ருகும்
அதிகமா மாறு பாட்டின்
உதித்ததே அதம மாகும்
ஒன்ருெத்தங் கொன்ருெவ் வாமல்
கதித்திடும் கலப்பாய் வந்தால்
மத்திம மென்று காணே

அளவும், காலமும், வேகமும், மதனநூல் விதித்தவாறு கூடும் நாயக நாயகரிடையே ஒத்திருந்தால், அது உத்தமக் கலவியாகும்; ஒன்றுக்கொன்று முழுவதுமே மாறுபட்டிருந்தால் அதமக் கலவியாகும்; ஒன்று ஒத்ததாயும் ஒன்று ஒவ்வாமலும் இருக்கும் இருவர் கூடுவது மத்திமக் கலவியாகும்.

10 மூவகைச் சாதிகள்

92. மானே முதலா மூவகை யாய்
மருவு மாத ரிலக்கணமும்
கானுர் முயலே முதலாகக்
கணவர் மூவர் இலக்கணமும்
நானு விதமாய் அனங்கவேள்
நல்லா கமத்திற் சொன்னவழி
யானுல் உணரும் உணர்வு டை யோர்
அறியச் சாதி உரைத்திடுவோம்.

மான் முதலாக, பெட்டைக் குதிரை, பிடியானை எனப் படும் மூவகை நாயகியரின் இலக்கணமும்; முயல் முதலாக ரிஷபம், குதிரை என்று கூறப்படும் மூவகை நாயகரின் இலக்கணமும், பலவகையாக மதனநூலிற் கூறியபடியே அமைந்துள்ள இயல்புகளை யாம் உரைக்கின்ருேம்; உணரும் அறிவுடையோர் அறிந்து பயன் பெறுக.

மான்சாதி மாதர்கள்

93. சுருண்ட நெரித்த குழலாளைத்
தொண்டை யனைய வாயாளை
மருண்ட பிணைபோல் விழியாளை
வனச மலர்போற் பதத்தாளை

வெருண்ட பிடிபோல் நடையாளை
மின்போல் நுடங்கும் இடையாளைத்
தெருண்ட முனிவர் மால்கொள்ள
அகன்ற அல்குல் தேராளை.

சுருண்டு அடர்ந்த கூந்தலும், கொவ்வைக் கனியனைய வாயிதழ்களும், மருண்ட பெண்மானின் கண்கள்போல் மருட்சி நிலவும் விழிகளும், தாமரை மலரிதழ் போன்ற மெல்லிய பாதங்களும், வெருட்சி கொண்ட பிடியானையின் நடைபோன்ற நடையும், மின்னல் கொடி போலத் துவள்கின்ற இடையும், தெளிந்த முனிவரும், கண்டால் மயங்குமாறு அகன்ற அல்குல் தேரும்,

94. கலவித் தொழிலின் முதியாளைக்
காமசலம் பூ மணத்தாளைக்
குலவு கரியின் புழைக்கை யெனக்
குழைந்து பருத்த தொடையாளை
இலகி உயர்ந்த தனத்தாளை
இகலிற் பொறுமை உடையாளை
நிலையிற் குறைந்த சினத்தாளை
நெடுகிக் கவினும் கழுத்தாளை.

கலவித் தொழிலின் முறையறிந்து முதிர்ந்த தேர்ச்சியும், தாமரைப்பூ வாடை வீசுங் காம நீரும், யானைத் துதிக்கைபோலக் குழைவுடன் பருத்த தொடைகளும், அழகிய பருத்த தனங் களும், கருத்து மாறுபட்டவிடத்தும் பொறுமையும், நிலையாத இளங் கோபமும், நீண்டு அழகுடன் விளங்கும் கழுத்தும்,

95. கூறுங் குதலை மொழியாளைக்
குறைந்த உண்டி உடையாளை

நாறும் மலர்செண் பகம்போல
நலங்கூர் மேனி உடையாளை
ஆறு விரலின் இடைதாழ்ந்த
குய்யத் தாளை அறைந்தவற்றில்
வீறு மடமான் சாதியென
மதனு கமங்கள் விளம்பிடுமால்.

பேசுங்காலத்தே மழலை மொழியால் குளறிக்குளறிப் பேசும் இயல்பும், குறைவான உணவினை உண்ணும் வழக்கமும், வாச மான செண்பகப் புதுமலர்போல அழகு வண்ணம் ஒளிரும் மேனியும், ஆறு விரலுக்கும் அதிகமில்லாத ஆழமுடைய பெண் குறியும் உடைய மாதரை, மடமான் சாதியினர் என மதன நூல்கள் வகுத்துக் கூறும்.

பெட்டைக் குதிரைச் சாதிப் பெண்

96. தாழ்ந்தும் உயர்ந்தும் இருக்குமுச்சித்
தலையி னுளைச் சலசமென
ஆழ்ந்து மதர்த்த விழியாளை
மயிர்கள் பருத்து மிகநீண்ட
சூழ்ந்த மாலைக் குழலாளைத்
தூலவதனம் நீண்டாளைப்
போழ்ந்த வெண்பல் செய்யவிதழ்
உயர்ந்து நீண்டு பொலிவாளை

குவிந்து உயர்ந்து இருக்கின்ற உச்சந்தலையும், தாமரை மலர்போல ஆழ்ந்து மருட்சியுடனிருக்கும் விழிகளும், மயிர்கள் தடித்து மிக நீண்ட கூந்தலும், பருத்து நீண்ட முகமும், இடை வெளியோடிருக்கின்ற வெண்மையான பல் வரிசைகளும், சிவந்து உயர்ந்து நெடிதான இதழ்களும்,

97. பெருத்துப் பணைத்த தனத்தாளைப்
பெரிய தோள்கள் உடையாளை
வருத்தி யொடுங்கும் வயிற்றுளை
மலர்த்தா மரைபோல் கரத்தாளை
கருத்தில் அடக்கம் இல்லாளைக்
களத்தில் குளறும் மொழியாளைப்
பருத்த நிதம்பத் தட்டாளைப்
பணைத்துத் திரண்ட குறங்காளை

பெருத்தும் பணைத்தும் இருக்கும் தனங்களும், பெரிய தோள்களும், வருத்தி ஒடுங்கிய வயிறும், தாமரை மலர்போன்ற கைகளும், அடக்கம் இல்லாத உள்ளமும், தொண்டைக் குள்ளாகவே குளறிப் பேசும் இயல்பும், பருத்த தேர்த்தட்டுப் போன்ற நிதம்பத்தட்டும், பணைத்துத் திரண்ட தொண்டைகளும்,

98. அன்னம் என்னும் நடையாளை
ஆழ்ந்த உந்திச் சுழியாளை
மன்னில் ஊணில் உறக்கத்தில்
மகிழ்ச்சி கூறும் மனத்தாளைத்
தன்னை மருவும் கணவன்பால்
தணவாச் சிந்தை உடையாளைத்
துன்னிக் குதிக்கும் மதனசலம்
சொரியப் புலவு கமழ்வாளை

அன்னமோ என மயங்கும் தளர்நடையும், ஆழ்ந்த உந்திச் சுழியும், உண்ணும் உணவிலும் உறக்கத்திலும் இன்பங் கொள்ளும் மனமும், தன் நாயகனிடத்தில் நீங்காத அன்புச் சிந்தை

யும், புலால் நாறித் துள்ளிக் குதித்துவரும் மிகுதியான காம நீரும்,

99. ஊட்டும் குலிசச் செம்பஞ்சின்
ஒளிபோல் திகழும் பதத்தாளைத்
தீட்டும் பசும்பொன் நிறத்தாளைச்
சிந்தை வெறுப்புத் தீராளைக்
கூட்டும் விரல் ஒன்பதிற் றுழ்ந்த
குய்யத் தாளைக் குறியினுல்
நாட்டும் வடவைச் சாதியென
ஞால மெல்லாம் உரைத்திடுமே.

சிந்துரம் ஊட்டிய செம்பஞ்சுக் குழம்பெனத் திகழும் பாதங்களும், பசும்பொன் மேனியும், வெறுப்புத் தீராத நெஞ்சகமும், ஒன்பது விரலுக்கு மேற்போகாத ஆழமுடைய கடிதடமும் உடைய மாதரை உலகினரெல்லாம் பெட்டைக் குதிரைச் சாதி என்று கூறுவர்.

100. நெற்றி கபோலம் செவிநாசி
நிலையிற் பருத்த உருவாளை
உற்ற கரந்தான் இருதோள்கள்
உருவிற் குறுகிப் பருத்தாளைத்
துற்றுப் பருத்த கழுத்தாளைத்
துலங்கி நீங்கற் பல்லாளைக்
கற்றைக் குழல்கள் அறச்சுருண்டு
கருமை இன்றிச் சிவந்தாளை

* இதனை விருப்பு எனக்கொண்டு காம விருப்பம் எளிதில் தீராதவள் என்பார் பிறர்.

நெற்றி, கன்னங்கள், காதுகள், மூக்கு ஆகியவை மிதமின் றிப் பருத்திருக்கும் உருவமும், குறுகிப் பருத்த கைகளும் தோள் களும், விம்மிப் பருத்த கழுத்தும், ஒளியோடு இடை வெளிப் பாடு உள்ள பல் வரிசைகளும், கற்றையாக மிகவுஞ் சுருண்டு கருமையின்றிச் செம்பட்டை பாய்ந்த கூந்தலும்,

101. இரவும் பகலும் கலவியிலே
எழுச்சி கொள்ளும் மனத்தாளைப்
பரவு களிறு பிளிறுதல் போல்
பகரும் மொழிகள் உடையாளை
விரிவு தோன்றி அறப்பருத்து
வீழ்ந்து நாலும் உதட்டாளைப்
புரியுங் களிப்பால் கர்வித்துப்
பூசல் மிகவும் விளைப்பாளை

இரவும், பகலும் நாயகனோடு கூடுவதிலே விருப்பங்கொள் ளும் நெஞ்சமும், களிற்றியானை பிளிறுவது போன்ற பேச்சும், அகன்று தடித்துத் தொங்கும் உதடுகளும், சேர்க்கைக் காலத்தே கணவன் செய்யும் களிப்புத்தரும் புறத்தொழில் களால் கர்வங்கொண்டு மிகுந்த பூசல் விளைக்கும் இயல்பும்,

102. கறுத்த ஒளிபோய்ப் புற்கென்ற
கண்ணி னுளைக் காமசலம்
வெறுத்த மதத்தின் நாற்றமென
மிகவும் நாற்றம் உடையாளைச்
செறுத்த பாவம் அடக்க மதாய்த்
தினமுஞ் செய்து முடிப்பாளைப்
பொறுத்த முறைமை இல்லாமல்
எவர்கூ டிடினும் புணர்வாளை

கருமைஒளி குன்றி உட்குழிந்து மங்கிய கண்களும், யானை மதம்போல் நாறும் காமநீரும், செய்யலாகாதெனத் தடுத்த பாவச் செய்கைகளை மறைவாகத் தினமும் செய்து திரியும் தன்மையும், பொறுத்தம் முறைமைகள் இன்றி எவரொருவர் தம்மை மணந்து கூடினும் அவரோடு கலக்கமின்றிச் சேரும் இயல்பும்,

103. குடியின் ஒழுக்கம் சொன்னாலும்
கொள்ளா தாளை மயிர் பிடித்துத்
தடிகொண் டிறுக்கி யடித்தாலும்
சற்றும் அடங்காத் தரத்தாளை
நெடிய விரல்கள் பனிரண்டில்
தாழ்ந்த நிதம்ப நிலையாளைப்
பிடிவெங் கரியின் சாதியெனப்
பெரியோர் எவரும் பேசுவரால்.

பிறந்த குடியின் நடைமுறை ஒழுக்க விதிகளைப் பிறர் எடுத்துக் கூறினும் ஏற்று அதன்படி நடக்காத நிலையும், கூந்த லைப் பற்றி இழுத்துத் தடிகொண்டு நன்ருகப் புடைத்தாலும் சற்றும் தன் தீய சுபாவம் அடங்காத முரண்டும், ஒன்பதுக்கு மேல் பனிரண்டு விரல் ஆழமுள்ள குறியும் உடையவளைப் பிடிச்சாதிப் பெண் என்று பெரியோர் கூறுவர்.

முயல் சாதி ஆடவன் இலக்கணம்

104. செய்ய அரியாய்க் கண்ணனைச்
சிறந்த வெண்பற் சிரியானை
மைதீர் மதிபோன் முகத்தானை
வனச மலர்போல் கரத்தானைத்

துய்ய வாய்மை உடையாளைத்
துலங்கிப் பருத்த கழுத்தானை
வெய்ய அடிசில் அற்பமதாய்
விரும்பி நுகரும் வேட்கையனே.

செவ்வரி பரந்த கண்களும், வெண்மையான அரிசிமுளை போன்ற பற்களும், குற்றமற்ற முழுமதி போன்ற முகமும், தாமரை மலர்போன்ற கைகளும், தூய்மையான வாய்மையே உரைக்கும் பண்பும், துலக்கமாகப் பருத்து விளங்கும் கழுத்தும், சூடான உணவு சிறுக உண்ணலும்,

105. புனித ஒழுக்கம் உடையானைப்
புல்லும் அற்பப் புணர்ச்சியனைத்
தனிசேர் மலரின் நறுமணம்போல்
நாறுந் தாது உடையானை
இனிதின் ஆறு விரல்நீளம்
எடுத்த கோசம் உடையானை
மனிதர் தம்மின் முயற்சாதி
இவனே என்னும் மதனூலே.

தூய நல்லொழுக்கமும், அற்பகாலச் சேர்க்கை இயல்பும், தாமரை மலரினைப் போன்று நாறுந் தாதுவும், ஆறுவிரல் நீள முள்ள ஆண்குறியும் உடையவனை முயற்சாதி ஆடவன் என மதனநூல்கள் கூறுகின்றன.

காளைச்சாதி ஆடவன்

106. நெற்றி அகன்று தலையுயர்ந்து
நெடிதாய் அதரம் பருத்தானைத்

துற்றுப் பருத்த செவியானைத்
துலங்கிப் பருத்த கழுத்தானை
மற்றக் கமடம் போலுயர்ந்து
வட்டமான வயிற்றானை
பெற்ற தூல உடலானைப்
பெருத்துப் பணைத்த புயத்தானை

அகன்ற நெற்றியும், உயர்ந்த தலையும், நீண்டு பருத்த இதழ்களும், தடித்துப் பருத்த காதுகளும், சதைத்துப் பருத்து விளங்கும் கழுத்தும், ஆமை முதுகுபோல் உயர்ந்து வட்டமா யிருக்கின்ற வயிற்றுப் புறமும், தூலமான சரீரமும், பெருத்துப் பணைத்த தோள்களும்,

107. சேந்த அரிபாய் கண்ணனைச்
செய்ய அகங்கை உடையானைச்
சாந்த மான குணத்தானைத்
தந்தா வளத்தின் நடையானை
மாந்த ரிடத்தில் பொறையானை
மழைபோல் வளங்கும் கொடையானைப்
பாந்தள் போலத் துயில்வானைப்
பகரிற் பொருத பசியானை

செவ்வரி படர்ந்த கண்களும், செக்கச் சிவந்த உள்ளங் கைகளும், சாந்தமான குணமும், மதயானை போன்ற நடையும், மனிதரிடத்திலே பொறுமை காட்டும் மனஇயல்பும், மேகம் போலப் பாரபட்சமின்றி அனைவருக்கும் ஒரு நீராக வழங்கும் கொடைக்குணமும், பாம்பின் உறக்கம்போன்று நெட்டுயிர்த்து உறங்கும் இயல்பும், பசியைச் சற்று நேரமும் பொறுக்க இயலாத தன்மையும்,

108\. ஒழுகும் தாது சுண்ணும்பின்
உவர்ப்பு நாற்றம் உடையானைப்
பழகுங் கபம்மே விட்டிருக்கும்
பண்பி ணனைப் பருவிரல்கள்
எழுதுங் கணக்கில் ஒன்பதாய்
எடுத்த கோசம் உடையானை
முழுதும் இடபச் சாதியென
முன்னூல் எல்லாம் மொழிந்திடுமே.

சுண்ணும்பு போன்ற உவர் நாற்றம் உடைய தாதுவும், கபம் மிகுந்த சிலேத்தும சரீரமும், பருத்த விரல்களும், ஒன்பது விரல் நீளக் குறியும் உடையவனை ஆடவரிற் காளைச்சாதியான் என்று முந்திய காமநூல்கள் கூறும்.

குதிரைச்சாதி ஆடவன்

109\. செவியும் முகமும் மணிமிடறும்
செய்ய இதழும் வெண்பல்லும்
புவியின் ஒல்கி நீண்டிருக்கும்
பொறபி ணனை மிகநீண்டு
கவியும் மயிர்கள் உடையானைக்
கபடம் மிகுந்த மனத்தானைச்
சவியொன் றின்றி விரல்நகங்கள்
தாள்கள் நீண்ட தரத்தானை

காதுகளும், முகமும், கழுத்தும், இதழ்களும் செம்மையானவை யாகவும்; வெண்மையான பல் நேர்ந்து நீண்டதாயும்; நீண்டு கவியும் தலைமயிரும்; அதிகமான கபடம் உள்ள மனமும்; அழகின்றி நீண்ட விரல்களும்; நகங்களும், கால்களும்;

110\. உறக்கம் பெரிதும் உடையானை
உருண்ட வட்ட விழியானைப்
பிறக்கும் தாது முடைநாறிப்
பெருத்து வடியும் தரத்தானை
நிறக்கும் கோசம் பனிரண்டு
விரல்கள் நீளம் உடையானைச்
சிறக்கும் குதிரைச் சாதியெனத்
தேர்ந்த புலவர் செப்புவரால்.

அதிகநேரம் தூங்கும் இயல்பும், உருண்டு வட்ட வடிவாய் அமைந்த கண்களும், முடைநாற்றம் பொருந்தி மிகுதியாகப் பெருகுகின்ற தாதும், பனிரண்டு விரற்கடை நீளக் கோசமும் உடையவன் குதிரைச்சாதி யாடவன் எனக் காமநூல் கற்றறிந்த புலவோர் செப்புவர்.

குணமும் குறியும் பொருத்தமும்

111\. உத்தம குணங்க ளாயின்
உயர்விரல் நாலைந் தாகும்
மத்திம குணங்கள் ஏழுஎட்டு
ஒன்பதாம் வகுக்குங் காலைப்
பத்துடன் ஒன்றி ரண்டாம்
பண்பிலாக் குணங்க ளாகும்
இத்துணைக் குறியின் நீளம்
என்றனர் நூல்வல் லோரே.

நான்கு, ஐந்து, ஆறு விரல் நீளக் குறியினர் உத்தம குணத்தர்; ஏழு எட்டு, ஒன்பது விரல் நீளக் குறியுடையோர் மத்திம குணத்தர்; பத்து, பதினொன்று, பனிரண்டு விரல் நீளக்

கோசமுடையோர் அதம குணத்தர் என்பர் காமநூல் வல்லார்.

112. இப்படிப் பிரித்துச் சொன்ன
இலக்கணம் கலந்து வந்தால்
எப்படி என்னல் வேண்டா;
ஏற்றமாம் இலக்க ணந்தான்
மைப்படி கண்ணி னுரை
மைந்தரைக் குறித்து நோக்கித்
தப்பற விசாரித் தின்ன
சாதியென் றறிந்து கொள்ளே.

இவ்வாறு, ஆண் பெண்பாலரைப் பிரித்துப் பிரித்துச் சொல்லிய இலக்கணங்கள் ஒன்றேடொன்று கலந்து வந்தால், எப்படி அறிவது என்று திகைத்தல் வேண்டாம்; அவ்வவரைக் குறிப்பாக நன்கு பார்த்தும், விசாரித்து உண்மைகளைக் கேட்டும் இன்ன சாதி என்றறிந்து, அதற்கேற்ப அவரை இல்வாழ்வில் மணம் சேர்த்தலே சிறந்த தாம்பத்யமாகும்.

11. வயதும் பருவமும்

உலகத்தின் மூலகாரணன்

113. மூவகைக் கடவுள் தேவர்
முத்தொழில் அதற்கு முன்னர்
ஆவது படைப்பே என்பர்
அப்படைப் புதிக்கப் பண்ணும்
தேவனைத் தொழில் மூன்றிற்கும்
மூலமாய்ச் சித்தத் துள்ளே
யாவரு மயமாய்த் தோன்றும்
கடவுளைப் பணிதல் செய்வாம்.

அயன், அரி, அரன் என்பார் மூவகைத் தேவர். அவர் செய்யும் படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய முத்தொழிலினுள்ளும் படைத்தலே முந்தினது என்பார்கள். அவ்வாறு அவனும் தன் படைப்பினைச் செய்வதற்கு மூலகாரணமான இச்சையை உதிக்கச் செய்கிற தேவன் மன்மதனே. ஆதலால், அவனே அம் முத்தொழிற்கும் மூலகாரணனாகி, அனைவர் உள்ளத்தும் அருவுருவாக நின்று இயக்குபவன். அவனை நாமும் மனங் கலந்து வணங்குவோமாக.

படைத்தல் நிகழாதபோது காத்தலும் அழித்தலும் நிகழ் வதற்கு ஏதுவில்லை. அத்தொழிலும் நிகழக் காரணமாய் நின்று இயக்குபவன் மதனன் என்று அறிதல் வேண்டும்.

நான்கு பருவங்கள்

114. திருத்தகு வாலை, மற்றைத்
தருணி,சீர் பேரி ளம்பெண்,
உரைத்தஇம் மூவ ருக்கும்
ஓதிய ஆண்டு கூறின்
அருத்திய எண்ணி ரண்டு,
முப்பது, ஐம்பத் தைந்தாம்,
விருத்தையவ் வைம்பத் தைந்தின்
மேற்பட்டாள் என்று கொள்ளே.

வயதினை ஒட்டிப் பெண்களை நான்கு பிரிவினராகப் பிரிப்பார்கள். அவை, பதினாறு வயது வரை வாலை; பதினாறுக்கு மேல் முப்பது வரை தருணி; முப்பதுக்குமேல் ஐம்பத்தைந்து வரை பேரிளம் பெண்; ஐம்பத்தைந்துக்குமேல் விருத்தை என்பனவாம்.

முதன் மூவருக்கும் காலம்

115. கூதிரும் வேனிற் போதும்
குலவிடு வாலைக் காகும்
மாதுபின் பனியும் முன்னைப்
பனியுமே தருணிக் காகும்
பேதமில் கார்கா லத்தோ
டிளவேனில் இவையி ரண்டும்
தீதிலாப் பேரிளம் பெண்
தனக்காகும் சேருங் காலை.

வாலை வயது நாயகியரைக் கூடுவதற்கு உரிய காலங்கள் ஐப்பசி கார்த்திகையாகிய கூதிர்க்காலமும், ஆனி ஆடியாகிய வேனிற் காலமும் ஆகும்; தருணிப் பருவத்து நாயகியரைச் சேர்வதற்கு ஏற்ற காலம் மார்கழி தை ஆகிய முன்பனிக்காலமும், மாசி பங்குனியாகிய பின் பனிக் காலமும் ஆகும்; பேரிளம்பெண் பருவத்து மனைவியரைக் கூடுங்காலம் ஆவணி புரட்டாசியாகிய கார்காலமும், சித்திரை வைகாசியாகிய இளவேனில் காலமும் ஆகும்.

சேர்க்கையும் பயனும்

116. முதியளாம் விருத்தை தன்னை
முயக்கின்நோ யுண்டாம் அந்த
மதிநுதல் வாலை தன்னை
மருவிடில் வலுவுண் டாகும்
இதமுறச் சொன்ன மற்றை
இருவரை மருவி னோர்கள்
விதமுறு சுகத்தைமேவி
மிகுகளிப் பெய்து வாரே.

விருத்தையுடன் சேர்ந்தால் நோய் உண்டாகும். வாலையோடு சேர்ந்தால் வலுவுண்டாகும். தருணி, பேரிளம்பெண் இவரோடு கூடினால் விதவிதமான சுகபோகங்களை நுகர்ந்து மிகுதியான களிப்பு எய்தலாம்.

கனைச் சாதிப் பெண் இலக்கணம்

117. பருத்துடல் குறியா ளாயின்
பசும்பொன்னின் நிறத்தா ளாயின்

பொருந்துகையடியி ரண்டும்
பொலிவுற உயர்ந்தா ளாயின்
கருத்தது கலவி மேலே
கனிந்திட விருப்பா ளாயின்
தரித்தபேர் கனையென் றோதும்
தனிப்புழை சிறிய ளாமால்

பருத்த மேனியும், குட்டையான உடலும், பசும்பொன் நிறமும், உயர்ந்திருக்கிற இரு தோள்களும், கலவித் தொழிலின் மேல் கனிந்த இச்சையுடன் விளங்கும் விருப்பமும், குறுகிய புழையினையுடைய குறியும் உடையவளைக் கனை யென்று மதன ஆகமங்கள் கூறும்.

சிலதையின் இலக்கணம்

118. கருகிய நிறத்தா ளாயின்
காட்சியின் நெடியா ளாயின்
அருகிய மெய்யா ளாயின்
அடங்கிடா விரகி யாயின்
இருகையின் மூலந் தாழ்ந்தித்
டியல்புறக் குழிந்தா ளாயின்
பெருகிய புழைய ளாயின்
பேசலாம் சிலதை என்றே.

கருமையான நிறமும், நெட்டுவிட்டு வளர்ந்த ஒல்லியான சரீரமும், எளிதில் அடங்காத விரகமும், தாழ்ந்து குழிந்த தோள்களும், பெருகிய புழையினையுடைய குறியும் உடையவளாயிருந்தால் அவளைச் சிலதை என்று கூறுவர்.

கனை - சிலதையைச் சேர்தல்

119. புறத் தொழில் கலவி யாலே
பொருந்திய வாலை தன்னில்
சிறப்புறு கனையைப் புல்லிக்
கலவியிற் சேர்ந்து வாழ்வார்
உறுத்தகத் தொழிலி னாலே
உரியபே ரிளம்பெண் ணோடும்
குறிப்புறு சிலதை தன்னைக்
கூடியே முயங்க லாமால்

கனையாகிய நாயகியரை அவருடைய வாலைப் பருவத்திலே புறத்தொழில்கள் செய்து கலவி முறைகளின்படி தழுவிக் கூடி வாழ்வது நன்று. சிலதை யெனும் நாயகியரை அவருடைய பேரிளம் பெண் பருவத்தில் அகத்தொழில் முறைகளைச் செய்து கூடுதல் நன்று.

தருணியை மகிழ்வித்தல்

120. நலம்பெறு தருணி தன்னை
நகைபெறப் புணரும் போது
கலன்பல அணிக ளீந்து
கலைபல உவப்ப நல்கி
நிலம்புகழ் கலவி தன்னில்
நேரிழை நினைவிற் கேற்பப்
பலன்பெறப் புணர்வ னாகில்
பரிவுறு வாழ்வுண் டாமே.

நன்மைகள் பெறுதற்கு ஏற்றவளான, தருணிப் பருவ நாயகியுடன் சேரும்போது, அவளது மனம் மகிழுமாறு விதவித மான ஆபரணங்களையும் ஆடைகளையும் கொடுத்து, உலகினிலே சிறப்புடையதான கலவியிலே, அவள் உள்ளம் விரும்புவதற்கு ஏற்ற பலன்களை எல்லாம் அவள் பெறுமாறு, அகத்தொழில் புறத்தொழில் முதலானவை செய்து சேர, அவளும் நாயக னிடத்து நீங்காத அன்புடையவளாக வாழ்வாள்.

12. உவப்புடன் சேர்தல்

வாலைவயது நாயகியை மகிழ்வித்தல்

121, இளங்கொடி வாலை தன்னை
இதமுறப் புணரும் போது
வளம்பெறு மாலை சாந்தம்
மணத்ததாம் பூலம் நல்கி
விளங்கிய கனிக ளோடு
விரும்புசிற் றுண்டி யூட்டி
உளங்கனிந் திடவே சேரின்
உவந்தவள் விருப்ப மாவாள்.

வாலைப்பருவத்து நாயகியை இதமாகப் புணரும்போது, நறுமண மலர்மாலை யணிவித்துச், சந்தனம் பூசி, மணமுடன் கூடிய தாம்பூலம் கொடுத்து, இனிய கனிவகைகளும் அவள் விரும்பும் சிற்றுண்டிகளும் அவளுக்கு ஊட்டி, அவள் மனங் கனியுமாறு செய்து சேர்ந்தால், அவளும் அக்கலவியில் மகிழ்ச்சி யடைந்து, தன் நாயகன்மீது ஆசையுடையவளாக விளங்குவாள்.

பேரிளம்பெண் - விருத்தை

122. உரியபே ரிளம் பெண் தன்னை
உவந்த லீ லைகளி னேடு

மருவிடில் இச்சை கொள்வாள்
வளம்பெற விருத்தைக் கன்பாய்
பரிவின்நன் மொழிகள் பேசிப்
பழமை பாராட்டி மெல்லத்
திறமுறப் புல்லிப் புல்லிச்
சேர்ந்திடில் இச்சை வைப்பாள்.

பேரிளம் பருவப் பெண்ணை அவளது நாயகனுனவன் அவள் விருப்பத்திற்கேற்ற லீலைகளைச் செய்து மருவினல், அவளும் அந் நாயகன் மீது ஆசையோடிருப்பாள். விருத்தையை அன்புடன் புகழ்ந்து பேசிப், பழைய கால இன்ப வாழ்வை நயமாக எடுத்து உரைத்து, மெல்ல, அணைத்து அணைத்து மருவினுல் அவளும் தன் நாயகன்பால் இச்சை உடையவளாக விளங்குவாள்.

சுபாவமும் பெண்களும்

சிலேத்துமம் மிகுந்த நாயகி

123. காயமேற் கபமி குந்த
காரிகை இயல்பு கூறில்
தூயவென் புடன ரம்பு
தோன்ருது குளிர்ந் திருக்கும்
நேயநன் மொழிக ளுள்ளாள்
நிறைந்தகாற் பரடி ரண்டும்
ஆயிரும் புவியிற் ருேயும்
பதத்தினின் மலிந்தி டாளே.

உடலில் கபம் மிகுந்த நாயகியினுடைய இயல்புகளைக் கூறப் புகுந்தால், எலும்பும் நரம்பும் மேனியிலே புடைத்துத் தோன்ருத தண்ணென்ற உடலும், அன்பும் நல்ல வார்த்தை

களும் விரும்பும் இயல்பும், இரு பாதங்களும் தராசுத் தட்டுப் போலச் சமமாகப் பூமியிற் பதியும் தன்மையும் உடையவள் என்று அறிக.

பித்த–வாத குண நாயகியர்

124. என்புடன் நரம்புந் தோன்றி
எழின்மேனி வெதும்பிக் காட்டின்
முன்புறு பித்த முற்ற
மொய்குழல் என்று கொள்க;
அன்புறு மென்மைத் தன்மை
அணங்களுள் உடலிற் ருேன்றின்
வன்புறு மொழிகள் பேசின்
வாதத்தாள் என்று கொள்ளே.

எலும்பும் நரம்பும் உடலின் மேல் புடைத்துத் தோன்ற, அழகிய மேனி வெம்மையுடன் இருப்பவள் பித்த குணம் உடையவள் ஆவாள்.

மென்மையான ஸ்தூல சரீரமும், கடுகடுவென்று பேசும் இயல்பும் உடையவள், வாத குணப் பெண் ஆவாள்.

சிலேத்தும குண நாயகி

125. முத்தென வெளுத்து நன்காம்
முறுவல்உற் றிடும் எயிற்ருள்,
சித்தத்தின் இரக்கம் உள்ளாள்
திறமுறும் அன்பு வைப்பாள்

கைத்தலந் தீண்டின் நொய்தாக்
கனிந்திடும் அல்குல் தேராள்
உத்தமப் பச்சை மேனி
உடையவள் கபத்தின் மாதே.

வெண்முத்தோ எனும்படியான பற்கள்; முறுவலித்தால் நன்மை தரும் பல்வரிசைகள்; உள்ளத்தில் இரக்க குணம்; நாயகன்பால் மாருத அன்புடைமை; கையால் தொடும் அளவிலேயே கனிந்து சுரதநீர் பொழியும் அல்குல் தேர்; உத்தமமான பசுமை நிறம்; ஆகியவை உள்ளவள் சிலேத்தும குண மாது ஆவாள்.

பித்த குண மாது

126. கனகமொத் திடுநி றத்தாள்
காயமேல் வியர்வு தோன்றி
முனேமடக் குமரி ஒப்பாள்
முனிவுநட் பிரண்டும் இல்லாள்
பனிதரு தன்மை யன்றி
வெம்மையில் பழகாள் குய்யத்(து)
அனுதினம் வெம்மை உள்ளாள்
அறைந்திடு பித்தத் தாளே.

பொன்போன்ற ஒளிர் நிறமும், வேர்வை தோன்றி அதனுல் முனே மடங்கிய கத்தாழை போன்று நாறும் உடல் நாற்றமும், பகைமை நட்புடைமை என்ற இரண்டு விதமான இயல்பும் அறவே இல்லாத தன்மையும், பனி மாதிரிக் குளிர்ச்சி மிகுந்த பொருள்களை யன்றிச் சூடானவற்றை விரும்பாத இயல்பும், வெம்மையுடனிருக்கும் நிதம்பமும் உள்ளவள் பித்த உடம்பு உடையவள் ஆவாள்.

வாத குண மாது

127. கோடிய நிட் டூரமான
குணத்தினுள் கரிய மெய்யாள்
நடையினில் திரிதல் அல்லால்
நலம்பெற இருக்க எண்ணுள்
புடைவிலா விரிய உண்பாள்
பொருவரும் எருமை நாப்போல்
கடினமா நிதம்பத் தட்டாள்
கணித்த வாதத்தி னுளே.

கொடிய வலுச்சண்டை வளர்க்கும் குணமும், கரிய நிறத் தேகமும், நடந்து திரிவதே யன்றி நலம் பெற இருக்க எண்ணுத இயல்பும், விலாப் புடைத்து விரியப் பேருண் உண்ணும் தன்மையும், எருமை நாக்குப்போலத் தடித்த நிதம்பத் தட்டும் உடையவள் வாத குணப் பெண்ணுவாள்.

கால அளவும் அன்பும்

128. புணர்ச்சியில் குறைந்த காலம்
புணர்ந்தமத் திமமாங் காலம்
உணர்ந்திடும் அதிக காலம்
என்னவே ஓதுங் காலம்
கணித்திடும் ஆசை மானம்
பெரிதுமத் திமம்கண் டாய்ந்தே
அணிந்திடு சிறிது மூன்றும்
அடைவினிற் கண்டு கொள்ளே.

சிலேத்தும குண மாது தந்நாயகனுடன் கூடுவதில் அற்ப காலமும், அவன்பால் அன்பும், மானத்தைப் பெரிதாக எண்ணும் பண்பும் உடையவள்; மத்திம காலமும் மத்திம அன்பும் அபிமானமும் உடையவள் பித்தகுணப் பெண்; அதிக காலமும் குறைந்த அன்பும் அபிமானமும் உடையவள் பித்தகுணப் பெண்.

கனவு காண்கிற வகை

129. கனவினிற் காணும் வண்ணம்
கபத்தினுள் கமல வாவி
புனையிழைப் பித்த மாது
பொங்கழல் அழன்று பற்றல்
வினைவழு வாத மாது
விண்ணிடைப் பறந்து சேரல்
எனவிவர் மூவ ருக்கும்
இவ்வகை யாகும் அன்றே

கனவினிலே தாமரைத் தடாகம் முதலியவை தோன்றக் காணல் சிலேத்தும குணப் பெண்ணிற்கும், நெருப்பு அழன்று பற்றி எரிவதுபோலக் காணல் பித்த மாதர்க்கும், வானத்தில் பறந்து சேர்வது போற்காணல் வாதகுணமாதர்க்கும் இயல்பாகும்.

13. பத்துச் சத்துவங்கள்

130. இமையவர் மாந்தர் நாகர்
இயக்கர் காந்தருவர் வன்பேய்
அமையுறும் அசுரர் காகம்
குரங்கொடு கழுதை என்னச்
சமைவுறு சத்து வங்கள்
பத்தெனச் சாற்றி முன்னுள்
அமைவுறு நந்தி சொன்ன
இலட்சணம் கட்டு ரைப்பாம்.

தேவர், மானிடர், நாகர், இயக்கர், காந்தருவர், பைசாசர், அசுரர், காகர், வானரர், கர்த்தபர் என்று மாதரிடையே பத்துவகைச் சத்துவம் உடையோர் உண்டென நந்தி பகவான் சொன்ன இலட்சணங்களை இனி எடுத்துச் சொல்வோம்.

1. தேவசத்துவப் பெண்

131. புனித மேனியள்,
பூமணம் வீசுவாள்,
இனிய வாய்மையள்,
இன்ப முகத்தினுள்,

சனமி குத்தவள்,
தன்பொருள் மிக்கவள்,
வனிதை நாணுடைத்
தெய்வ மடந்தையே.

தூய்மையான மேனியும், உடலத்தில் தாமரை மலரின் நறு மணம் வீசுதலும், இனிய பேசலும், வாய்மையான சொல்லும், இன்பம் அலர்ந்து ஒளிரும் முகமும், மிகுதியான உறவினர் கூட்டமும், திரண்ட செல்வமும், நாணமும் உடையவள் தேவசத்துவப் பெண் ஆவாள்.

2. மானிட சத்துவப் பெண்

132. இரக்கம் உற்றவள்
யாரையும் போற்றுவாள்
வரத்தின் முந்து
விரத மனம் கொள்ளுவாள்
புரக்கும் பூசுரர்
சொற்குணம் போற்றுவாள்
உரைக்கும் மானிடத்
தையலென் றோதுவாம்.

உயிர்களிடத்தில் அருள் கொள்ளுதலான இரக்கமும், எவரையும் போற்றி உரைத்துப் பேசுகின்ற மனப்பாங்கும், நன்மை விளைவிக்கும் விரதங்களைக் கடைப்பிடித்தலும், உயர்ந் தோர் சொற்களின் பண்பு உணர்ந்து அவற்றை ஏற்று வாழ்த லும் உடையவள் மானிடப் பெண் ஆவாள்.

3. நாக சத்துவப் பெண்

133. உறக்கம் மிக்கவள்
நெட்டுயிர்ப் போங்குவாள்
மிறைத்துச் சோம்பிக்
கொட்டாவி விடுக்குவாள்
இறைக்கணும் வைகல்
இன்றிச் சுழலுவாள்
சிறக்கும் நாகர்தம்
சேயிழை என்பவே.

மிகுதியான தூக்கமும், அடிக்கடி ஓங்கி எழும் பெரு மூச்சும், சோம்பல் முறித்துக் கொட்டாவி விடுதலும், கணப் போதாகிலும் ஓரிடத்தில் இருத்தலின்றிச் சுற்றிச் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் இயல்பும் உடையவள் நாகசத்துவப் பெண்.

4. இயக்க சத்துவப் பெண்

134. வனத்தினில் ஆற்றினில்
மலைகுகை வேலையில்
இனத்தொ டும்விளை
யாடுதற் கெண்ணுவாள்
சினத்தின் மிக்கவள்
தீர்ந்திடு நாணத்தாள்
இனித்த சொல்லின்
இயக்க மடந்தையே.

வனம், ஆறு, மலை, குகை, கடற்கரை ஆகிய இடங்களில் தன்னொத்த பாங்கிமாரோடு கூடி விளையாடுவதிலே விருப்பம்

உடையவள்; மிகுதியான சினமும், அறவே நாணம் இல்லாமையும் உடையவள் இய்க்க சத்துவப் பெண் ஆவாள்.

5. காந்தர்வ சத்துவப் பெண்

135. நானஞ் சாந்தம்
நறும்புகை இச்சையாள்
மேனியிற் கலன்
சந்ததம் விரும்புவாள்
ஈன மாமுனிவு
அற்றவள் ஏழ் இசைக்
கானம் வல்லவள்
காந்தர்வ மங்கையே.

கஸ்தூரி சந்தனம் அகிற்புகை முதலிய நறுமணப் பொருள்களை விரும்புபவள்; எந்நேரமும் மேனியில் அணிகலன்கள் பூண ஆசை உடையவள்; சினம் இல்லாதவள், ஏழ்இசைக் கானத்தில் வல்லவள்; காந்தர்வ மங்கை ஆவாள்.

[ஏழிசையாவன : ச, ரி, க, ம, ப, த, நி யாகும். இவற்றின் விளக்கம் சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவம், நிஷாதம் என்பன. தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பர்.]

6. பிசாசு சத்துவப் பெண்

136. உள்ளம் நாணிலள்
உண்டி மிகுத்தவள்
கள்ளொ டூனிற்
களிக்கும் மனத்தினள்

கொள்ளை வெம்மை
குலவிடு மேனியள்
பள்ளி கொள்ளாள்
பிசாசு மடந்தையே.

உள்ளத்திலே நாணம் என்பதே இல்லாதவள், உணவு அதிகமாக உண்பவள்; கள்ளும் மாமிசமும் தின்று அதனுல் களிக்கும் மனத்தினள்; மிகுந்த வெண்மையான சரீரமும், சயனத்தில் அமர்ந்தும் உறங்கும் விருப்பமில்லாதவள் பசாச மடந்தை யாவாள்.

7. அசுர சத்துவப் பெண்

137. எழுந்து சீறி
எரியெழ நோக்குவாள்
செழும் தனங்கள்
விகடச் சிறப்பினுள்
விழுந்து பற்றி
மிகுசண்ட வேகத்தின்
அழுந்தப் புல்லும்
அசுர மடந்தையே.

எழுகின்ற கோபத்தினுல் சீறிக் கண்களிலே நெருப்பு எழப் பார்க்கும் பார்வையும், ஒன்றுக்கு மற்றென்று ஒவ்வாது அமைந்த தனங்களும், நாயகனைப் பற்றி அவன் மேல் விழுந்து அவனை இறுகத் தழுவி, மிகவும் சண்டவேகத்துடன் சேரும் இயல்பும் உடையவள் அசுரசத்துவப் பெண் ஆவாள்.

8. காக சத்துவப் பெண்

138. சுழன்று நோக்கும்
துணைநெடும் கண்ணினள்
அழன்று எழும்பும்
அரும்பசித் தீயினள்
குழன்ற கூந்தலாள்
கூறும் பயத்தினள்
கழன்ற அன்பினள்
காக மடந்தையே.

நான்கு திசைகளிலும் கண்களைச் சுழற்றிச் சுழற்றி ஓரக் கண்ணால் பார்க்கும் நீண்ட இருகருவிழிகளும், தீப்போலப்பற்றி எழுகின்ற கொடிய பசியும், சுருண்ட கூந்தலும், மிகவும் அச்சம் உடைய மனமும், நிலையான அன்பற்ற உள்ளமும் உடையவள் காக மடந்தையாவாள்.

9. குரங்கு சத்துவப் பெண்

139. வெருவு நோக்கினள்,
வெண்பல் உகிரினல்
உருகும் அன்பர்மேல்
ஊறு படுத்துவாள்
பரிவில் யார்கணும்
பற்றற்ற சிந்தையாள்
வரிவளை க்கைக்
குரங்கு மடந்தையே.

யாவரையும் பயமுறுத்தத் தக்க கடூரமான பார்வையும், தன் வெண்மையான பல்லினலும் நகங்களாலும் தன்னெடு சேரும் தன் நாயகன்மேல் ஊறுபடுத்தித் தழுவும் குணமும், எவரிடத்தும் அன்பிலாத தன்மையும், எதிலும் பற்றற்ற சிந்தையும் உடையவள் குரங்கு சத்துவ மடந்தையாவாள்.

10. கர்த்தப சத்துவப் பெண்

140. மிண்டு பேசும்
வெடித்த குரலினள்
கொண்ட கேள்வனைப்
பற்றிக் குடங்கையால்
தண்டி மோதி
அடித்துத் தழுவுவாள்
கண்டு கூறும்
கழுதை மடந்தையே.

அகங்காரத்தால் பேசுகின்ற வெடுக்கென்ற கனைத்த குரலும், தழுவும் நாயகனைத் தானே முந்திப் பற்றி உள்ளங் கையால் மோதியும் அடித்தும் தாடனஞ் செய்து தழுவிக்கூடும் இயல்பும் உடையவள் கழுதைச் சாதிப் பெண் ஆவாள்.

14. நால்வகைப் மாதர்

1. மானிடப் பெண் இலட்சணம்

141. பகுதி நால்வகை
யாகப் பகர்ந்ததில்
மகித லத்தின்
மனிதப் பகுதியாள்
விகுதி யின்றி
இதயமும் மென்சொலும்
அதிகம் அற்ற
தொழிலும் ஒன்ருவளே.

பத்துச் சத்துவங்களையும் மானிடம், காந்தர்வம், இயக்கம், பைசாசம் என நான்காகப் பகுத்து அவற்றுள் மானிடப் பகுதி நாயகியரின் இலக்கணம் கூறுகிருர் ஆசிரியர்.

விரோதம் கொள்ளுதல் இல்லாமல் ஒன்றுபட்ட நெஞ்சமும், மென்சொல்லும். மிதமான சேர்க்கைத் தொழிலும் உடையவளாக மானிடப் பெண் இருப்பாள்.

2. காந்தர்வப் பகுதிப் பெண்

142. பண்ணின் யாழோர்
பகுதியின் பைந்தொடி

வண்ண மாலை
கலவை அணிபவள்
தண்ணரு மலர்
வாவியில் தானெய்தி
நண்ணி யேவிளை
யாடல் நயக்குமால்

காந்தர்வப் பகுதிப் பெண்ணானவள், வண்ண மலர் மாலையும் களப கஸ்தூரியும் அணிகின்ற இயல்பும், குளிர்ந்த தாமரைத் தடாகம் சென்று அங்கே நீர் விளையாட்டில் ஈடுபடுவதில் விருப்பமும் உடையவளாவள்.

3. இயக்கப் பகுதிப் பெண்

143. ஓது இயக்கப் பகுதியின் ஒண்தொடி
பீதியின்றி மனநிலை பெற்றவள்
காதல் கூரக் களித்துத் திரிபவள்
ஈதல் சற்றும் இலாதவள் என்பவே.

இயக்கப் பகுதிக்குரிய பெண்ணானவள் பயந்த சுபாவமின்றித் தைரியம் நிறைந்த மனமும், காதலின்பத்தில் ஆசைமிகுந்து தன் நாயகனுடன் களித்துத் திரிதலும், எள்ளளவும் ஈகை இல்லாத இயல்பும் உடையவள்.

4. பசாசப் பகுதிப் பெண்

144. வெய்ய பேயின்
பகுதியின் மெல்லியள்
பொய் உரைப்பவள்
கங்குல் புணர்பவள்

நொய்ய மிச்சில்
நுகர விரும்புவாள்
வைய முற்றும்
பழித்திட வாழ்வளே.

பைசாசப் பகுதிப் பெண் பொய் பேசும் இயல்பும், இருண்ட வேளையிற்கூடும் விருப்பமும், அருவருப்பு இல்லாமல் நாயகனின் எச்சிலைப் புசிக்கும் விருப்பமும் உடையவளாக, உலகமெல்லாம் பழித்துப் பேசும் வகையிலே, ஈனமாக வாழ்வாள்.

அளவையின் முதன்மை

145. உளமகிழ் சாதி காலம்
உரியதோர் அவத்தை வேகம்
வளமிகு தத்து வம்பின்
வரும்பிர கிருதி வண்ணம்
தளர்வறு பகுதி என்னச்
சாற்றிய இவற்றுள் எல்லாம்
அளவையே முதன்மை என்ன
அறைந்திடும் மதன நூலே.

சாதி, காலம், அவத்தை, வேகம், தத்துவம், பிரகிருதி, வண்ணம், பகுதி, அளவை எனக் கலவிக் கலையில் கவனிக்க வேண்டிய ஒன்பது அம்சங்களிலும், அளவையாகிய குறிகளின் விரல் நீள ஆழமே மிகவும் முதன்மையானது என மதனுகமம் கூறுகின்றது.

15. அன்பும் தகுதியும்

தலைசிறந்த பெண்கள்

146. சாதியில் வடவை தானும்
சத்துவத் தியாழின் மாதும்
ஓதிய நிறத்தின் பச்சை
உருவமும் பகுதி தன்னில்
மேதகு கபமும் மிக்காள்
மெல்லியல் உருவின் மிக்காள்
தீதறும் இளமை மிக்காள்
சேர்ந்திடில் சுவர்க்கம் உண்டே.

சாதியிலே பெட்டைக் குதிரைச் சாதியும், சத்துவத்திலே காந்தர்வமும், வண்ணத்திலே பசுமையும், பகுதியில் சிலேத்தும சரீரமும், உருவத்திலே உயரமும், இளமை மிகுந்த வாலை தருணி என்னும் பருவமும் உள்ள தம் நாயகியருடன் சேர்பவர் சுவர்க்க போகத்தை அநுபவித்து ஆனந்தம் அடைவார்கள்

விரும்பத்தகாத மகளிர்

147. இச்சையின் ஒழுகி நிற்பாள்
ஈன்றவள் இல்லில் வாழ்வாள்

அச்சமொன் றின்றியேகி
அணிவிழாத் தானே காண்பாள்
நச்சிடும் இளைஞர் கூட்டம்
நயந்துதன் கேள்வன் இன்றி
மச்சுறு வேற்றூர் வாழ்வாள்
வழியில்லா வழியில் செல்வாள்.

தன் இச்சை எதுவானுலும் பிறர் பேச்சுக்குச் செவி சாய்க்காது தன்னிச்சைப்படியே நடக்கும் பிடிமுரண்டும், தான்பிறந்த தாய் வீட்டிலேயே எந்நாளும் வாழும் இயல்பும், சற்றேனும் அச்சமின்றித் தனியே சென்று திருவிழாக் காணலும், தன்னை விரும்பும் இளைஞர் கூட்டத்தைத் தானும் விரும்பித் திரிதலும், மணமான பின்னர், கணவனைப் பிரிந்து வேற்றூர் சென்று தனியே வாழ்தலும், நல்வழி மறந்து தீயவழிகளில் நடத்தலும் உடையவள் விரும்பத் தகாத பெண் ஆவாள்.

வீட்டிற்குத் தகுதியற்றவள்

148. குடிநெறி பிழைத்து வாழ்வாள்
கூட்டத்தில் இணங்கி வாழாள்
கடிமணம் செய்த காளை
விருத்தனுய்க் கலவி யற்றுப்
படைமதன் கணையால் வாதைப்
படுபவள் பிறபர்த் தாவின்
அடைவுகேட் டுள்ளம் வைப்பாள்
அகத்தினில் இருக்கக் கூற்றே.

குடியொழுக்கம் தவறி வாழ்பவள்; உறவினரோடு மனங் கலந்து வாழாதவள்; மணந்தவன் வயதானவனுகிக் கலவித் திறன் அற்றுப்போயிருக்க, அதனுல் தன் காம இச்சை தீராது மிகுதியாக வாதைப்படும் இளம் பருவத்தினள்; பிற ஆடவரின் சிறப்பியல்புகளைக் கேட்டு அவற்றின்பால் உள்ளம் வைப்பவள்; இத்தகையோரை வீட்டில் உடன்கொண்டு வாழ்தல் அக்கணவருக்கு நமனுடன் கூடி வாழ்வது போல்வதாகும்.

பெண்கள் விரும்பாத ஆடவர்

149. வறியவன்; பொறையொன் றில்லான்
வடிவிலன்; அழுக்கு மெய்யன்
வெறிமலர் அணிகள் பூணின்
வெகுளுவான்; கலவி விட்டான்
குறியொடு குறிகள் ஒவ்வான்
பொய்க்குற்றம் கூட்டிச் சொல்வான்
அறியவேற் றூரில் வாழ்வான்
அணங்கனுர் விருப்பம் அற்றுன்.

வறுமையும், பொறுமை இல்லாமையும், அழகான தோற்றமின்மையும், அழுக்குப்படிந்த சரீரமும், நாயகி மண மலர் அணிகள் சூடினுல் கோபித்தலும், கலவித் தொழிலில் விருப்பம் இல்லாமையும், பெண்குறியின் ஆழத்திற்கு ஒத்த ஆண்குறி இல்லாமையும், நாயகியினிடத்துப் பொய்யான பல குற்றங்களைக் கற்பித்துக் கூறுதலும், அவள் அறியும்படியாக அவளை ஒதுக்கிவிட்டு அயலூரிற் சென்று வேறொரு பெண்ணுடன் கூடி வாழ்தலும், பெண்களை விரும்பும் சுபாவம் அற்றிருத்தலும் உடைய ஆடவரைப் பெண்கள் ஒரு நாளும் விரும்ப மாட்டார்கள்.

அன்பு தோன்றும் வகை

150. அன்புநால் வகையிற் றேன்றும்
அனுதினம் பழக்கத் தாலும்
முன்புறும் இருவர் தங்கண்
முழுமணப் பொருத்தத் தாலும்
இன்புற நோக்கு கின்ற
இதயத்தின் உண்மை யாலும்
அன்புறப் புணர்த லாலும்
என்றனர் வையத் தாரோ.

நாயகி நாயகன் என்னும் மணந்த இருவரிடையேயும் நான்கு வகைகளால் அன்பானது தோன்றி வளரும். அவை: (1) நாள்தோறும் இடைவிடாது கூடிப் பழகும் பழக்கத்தால்; (2) திருமண வாழ்விற் சேர்ந்து வாழ்வதற்குரிய மணப் பொருத்தம் இருவரிடமும் இருத்தலால்; (3) உள்ளத்தில் ஒருவர் மற்றவரிடம் தூய்மையான காதல் கொண்டு ஒருவரை யொருவர் இனிமையாகத நோக்குகின்ற நோக்கத்தால்; (4) நாயகனுக்கு ஏற்ப நாயகியும் நாயகிக்கு ஏற்ப நாயகனும் ஒத்த போகம் உடையவராக இருவர் அவாவும் நிறைவேறுமாறு கூடுதலால்; என வையத்தார் கூறுவர்.

உள்ளன்பு உடைய நாயகி

151. விரும்பியே பலகால் நோக்கல்;
மெல்லவே ஒக்க நோக்கில்
அரும்பிள முறுவல் செய்தல்;
குறிப்பின்உள் அன்பு காட்டல்;

நிரம்பநெட் டுயிர்ப்புச் செய்தல்;
நின்றபாங் கியரைப் புல்லல்;
தரம்பெறு குழவி பற்றித்
தழுவிவாய் முத்தம் உண்ணல்;

நாயகன் பேரில் விருப்பம் உடையவளாக அவனையே பல முறை பார்த்தல்; அப்படிப் பார்க்கும்போது அவனைப்போலவே அவனும் பார்க்க இருவர் கண் பார்வையும் சந்தித்தால் இள முறுவல் அரும்ப நிற்றல்; குறிப்புக்களால் நாயகன் உணரு மாறு தான் அவன் மேற்கொண்ட உள்ளன்பைக் காட்டுதல்; நிரம்பவும் பெருமூச்சு விடுதல்; கணவன் காணத் தன் அருகில் நிற்கும் தோழியரைத் தழுவிக்கொள்ளல், அருகிலுள்ள குழந் தையை எடுத்து அணைத்து முத்தமிட்டுக் கொஞ்சுதல்;

152. பிறரொடு மொழியு மாபோல்
குறிப்புரை பிறக்கப் பேசல்;
முறுவலோ டிதழ் அதுக்கி
முனிவுபோல் தலைய சைத்தல்,
இறைதனை அகன்று போயின்
எழுந்துபொய்த் தும்மல் தும்மல்;
நிறையவே அன்பி னேரைத்
தானுமே நெருங்கிக் காட்டல்,

பிறரோடு பேசுவதைப் போலத், தன் தலைவன் தன் குறிப்பை உணருமாறு பேசுதல்; புன்னகையோடு உதட்டை மடக்கி ஊடிச், சினங்கொண்டவள் போலக் கணவன்பால் தலை யசைத்துப் பொய்க் கோபம் காட்டல்; நாயகன் தன்னைவிட்டுப் பிரிந்து போகும்போது அவன் போவது தடைப்படுமாறு எழுந்து பொய்த் தும்மல் தும்முதல்; அவன் நிறைய அன்பு கொண்டவரிடம் தானும் நெருக்கமுடன் அன்பு காட்டி வாழ்தல்;

153. தொழில்களைப் புகழ்தல்; சொல்லும்
சொற்களை விரும்பிக் கேட்டல்;
விழைவுடன் வேறு வேறு
கருமத்தின் மேவுவாள் போல்
குழைவுடன் அவன்பால் சேரல்;
கூசுவாள் போல நிற்றல்
உழைபெரு கண்ணி னார்தம்
உள்ளன்பு குறிக்கும் காலே.

தலைவன் செய்யும் தொழில்களைப் புகழ்தல்; அவன் சொல்லும் சொற்களை விருப்பமுடன் கேட்டல்; அவன்பால் அன்புடன், வேறு வேறு காரியமாகச் செல்பவள்போலக் காட்டிக் குழைவுடன் அவனருகே அடிக்கடி செல்லுதல்; கூச்சப்படுபவள் போலத் தன்னைக் கணவன் நெருங்கும்போது ஒதுங்கி நிற்றல்; ஆகிய இயல்புகள் மடமான் நோக்குடைய கண்ணினார் தம் உள்ளன்பை நாயகர்க்கு வெளிப்படுத்தும் குறிப்புக்களாம்.

அன்பிலாத மனைவி

154. உள்ளம் ஒத்து ஒக்க நோக்காள்;
உரைத்தற்கு எதிரொன் றோதாள்;
தள்ளரும் அவனுக் கன்பர்
தம்மொடு கலகம் செய்வாள்;
கள்ளமாய் அவனும் கூடில்
கருத்துளே வருத்த மாவாள்;
மெள்ளவே அவனும் நீங்கில்
இன்புற்று வீற்றிருப்பாள்;

உள்ளமும் பார்வையும் ஒத்து இணைந்திருக்கப் பாராது கரவாக நோக்கல்; அவன் ஏதேனும் கேட்டால் அக் கேள்விக்குத் தக்க பதில் உரையாதிருத்தல்; அவனால் ஒதுக்க முடியாத அரிய அன்பர்களிடத்தில் வேண்டுமென்றே கலகம் செய்தல்; அவன் விரும்பிச் சேர்ந்தாலும் உள்ளத்திலே கள்ளம்கொண்டவளாக, அவனோடு உளங் கலந்து இன்புறாது வருத்தம் கொள்ளல்; அவன் தன்னைவிட்டு நீங்கினால் 'விட்டது தொல்லை' என இன்புற்று இருத்தல்;

155. வலிதினில் அவனே பற்றி
வாயமு துண்டா னாகில்
ஒலிவளைக் கையி னாலே
உகுத்துவாய் துடைத்தே நிற்பள்;
மெலிவுற அணிகள், ஆடை
வேண்டுவ அளித்தா னேனும்
பொலிவுற மகிழ்ச்சி செய்யாள்;
பொறுமையால் இகழ்ச்சி செய்வாள்;

தானாகவே வலிய அவளைப்பற்றி வாயமுது உண்டான் என்றாலும், அப்போதும் அன்பிலாது, வளை முழங்கும் கைகளால் அவனை ஒதுக்கி, அவன் அதரம்பட்ட தன் வாயையும் துடைத்து ஒதுங்கி நிற்றல்; சுமை தாங்காது உடல் மெலியுமளவு ஆபரணங்களும், அவளுக்கு விருப்பமான ஆடைகளும், நாயகன் கொடுத்தான் எனினும், அதனால் களிப்புற்று மகிழ்ச்சி செய்யாமை; கணவனின் சிறப்புக்கள் கண்டு பொறுமையால் அவனையே இகழ்ந்து பேசுதல்;

156. தழுவிய கேள்வன் கையைச்
சர்ப்பம்என் றஞ்சி நிற்பாள்;

பழுதற அவனைக் காணில்
பகைஞரைப் போலப் பார்ப்பாள்;
விழைவுடன் பிறர்கொண் டாடும்
விளையாட்டில் விருப்பம் வைப்பாள்;
முழுதும்மெய்ந் நோவுண் டென்று
மொழிந்து பொய்ஆணை சொல்வாள்;

தன்னை விருப்பமுறத் தழுவி நிற்கும் நாயகனின் கைகளைச் சர்ப்பம் சுற்றுவதாக எண்ணி, நடு நடுங்கி வெறுத்து அஞ்சி நிற்றல்; அவனை நேருக்கு நேர் காணும்பொழுது, பகைஞரைக் காண்பதுபோல வெறுப்புடன் பார்த்தல்; பிற ஆடவர்கள் விரும்பிக் கொண்டாடும் ஆடல்பாடல்களிலே விருப்பம் வைத்தல்; நாயகன் ஆசையோடு கலவிக்கு விரும்பும் பொழுது உடல் முழுதும் தனக்கு நோவு என்று சொல்லிப் பொய்யாக ஆணை யிடுதல்;

157. தலைவனுக்கு முன்உறங்கல்; பிறகு காட்டல்;
தான்பெமூச் செறிதல்முழங்
கையாற் றள்ளல்;
கலைகொடு மெம்மூடல், சந்தோஷஞ் சொல்லில்
கலவிக்கு வேறொருவர் இலையோ என்றல்;
இலைபிளவு தின்னுமல் எறிந்து போடல்;
இதமிலாப் பிழைவசனம்
எடுத்துச் சாற்றல்;
புலவியின்றி அழுதல் இவை எல்லாம்
வேண்டாப் புரவலனைச்
சேருமின்னுள் புரிவளாமே.

நாயகன் கலவியை எதிர்பார்த்து அருகே விழித்திருக்கும் போது அவனுக்கு முன்னர் தான் அதை பாராட்டாது உறங்கி விடுதல்; அவன் அணைப்பிற்கு விரும்பாது முதுகு காட்டிப் படுத்தல்; ஏதோ ஆற்றாமை மிகுந்தவளைப்போல அடிக்கடி பெருமூச்சு எரிதல்; தழுவும் தன் நாயகனைத் தன் முழங்கையால் ஒதுக்கித் தள்ளுதல்; கலை ஒதுக்கி அவன் புறத்தொழில்களில் ஈடுபட, அதற்கு இடந்தராது அதனை நன்றாக இழுத்துத் தன் உடலைப் போர்த்துக் கொள்ளல்; கலவிக்கு அவன் முற்பட, 'ஏன் என்னையே தொந்தரவு செய்கிறீர்; வேறொருத்தி உமக்கு அகப்படவில்லையோ?' என இகழ்ந்து பேசல்; நாயகன் அன்புடன் தரும் தாம்பூலத்தை அவன்பாலுள்ள வெறுப்பால் அவனெதிரேயே எறிந்து போடுதல்; கொஞ்சமும் இதமின்றித் தப்பான சொற்களால் சரமாரியாகக் கணவனைப் பேசி ஏசல்; ஊடுதலுக்குக் காரணமில்லாத போதும் வேண்டுமென்றே கூடற் காலத்தில் அழுதுகொண்டிருத்தல்; இவை எல்லாம் தான் விரும்பாத ஒருவனை வலுக் கட்டாயத்தால் மணக்க நேரும் நாயகியின் செயல்கள் என்பர்.

சேர்க்கை விரும்பாத பெண்கள்

158. நெடுவழியில் நடந்துஎய்த்தாள்
தனக்கும், உள்ளம் நினைவுஅறவே
மதுவுண்டாள் தனக்கும், சால
நடனம்செய் திளைத்திருந்தாள் தனக்கும், தூய
நாலாம்நீ ராடி வந்தாள் தனக்கும், தீய
விடவரிய வெப்புற்றாள் தனக்கும்,
அந்த வெம்பிணி போய் மூழ்கி வந்தாள்
தனக்கும், மூந்திப்
படுசூலால் அயர்வுற்றாள் தனக்கும் என்றும்
பதறாது சுரதநீர் பகருங் காலே.

நெடுந்தொலைவு நடந்து களைத்துப் போனவளுக்கும், சுய நினைவு அற்றுப்போகும் அளவு மதுபானம் செய்தவளுக்கும், நெடுநேரம் நடனமாடிக் களைத்துப்போய் இருப்பவளுக்கும், வீட்டுக்கு விலக்கமாகி நாலா நாள் நீராடி வந்தவளுக்கும், தீமை விளைப்பதும் எளிதில் விடாததுமான வெப்பு நோய் உற்றவளுக்கும், அந்தக் காய்ச்சல் நலமாகி முழுகி வந்தவளுக்கும், கர்ப்பச் சிதைவினால் தளர்வுற்றவளுக்கும் அக்காலங்களில் ஒருநாளும் சுரதநீர் பெருகாது; ஆதலால் அவளைச் சேர்தல் கூடாது.

159. மற்றொருவன் தோள்நசையால் பொருந்தாதூடி
வருத்தியவன் தனைப்புணரும்
மடநல் லாட்கும்,
அற்றையினில் வயிறிழிந்தாள் தனக்கும்,
ஒன்றாய் அங்கவனை
முன்பறியாது அணைகுவாட்கும்,
பற்றுமனச் சலிப்புடையாள் தனக்கும்,
மெத்தப் பசித்திருந்தாள்
தனக்கும், மிகவுண்டா ளுக்கும்,
குற்றமுடைக் குய்யத்தாள் தனக்கும்
என்றும் கொழுங்கலவி மதனசலம்
குதித்திடாதே

ஒருவனை விரும்பிக் காதலித்து வருகையில், அவனன்றி வேறொருவனை நாயகனாக அடைய, அவனோடு மனம் பொருந்தாது ஊடியிருப்பவளை அவன் வற்புறுத்திக்கூட, அவனோடு சேரும் அந்தப் பெண்ணிற்கும்; அன்றைய நாளில் வயிற்றுக் கழிச்சல் அதிகமாகப் போனவளுக்கும்; முன்பின் அறியாத நாயகனோடு முதல்நாள் கலவித் தொழிலில் ஈடுபடுபவளுக்கும்; வேறு காரணங்களால் பெரிதும் மனச்சலிப்பு அடைந்தவளுக்கும், மெத்தவும் பசியோடு இருப்பவளுக்கும்; விலாப் புடைக்கத் தின்றிருப்பவளுக்கும்; பெண்குறியிலே நோயுள்ளவளுக்கும் கலவியை இன்பமுறச் செய்கின்ற மதன நீரானது ஒருக்காலும் சுரக்காது. ஆதலால் அவர்களை அணைதல் வேண்டாம்.

16. நாடும் கூடலும்

உலகை வென்ற ஒருவன் !

160. விரிசிலை கரும்பு; வில்நாண்
வரிவண்டு; மலர்கள் வாளி
பரிசனம் மகளிர் கூட்டம்
பயில்குயில் ஊது காளம்
விரிகடல் முரசம்; தென்றல்
மேவுதேர்; வெற்றி வேந்தன்
உருவிலி; அவனே இந்த
உலகை வென்று ஒருவன் ஆனன்.

கரும்பைத் தன் வில்லாகவும், முரலும் வண்டுகளை அவ் வில்லின் நாணகவும், மலர்களை அவ் வில்லிலே பூட்டி எய்யும் அம்புகளாகவும், மகளிர் கூட்டத்தைத் தன் படைத்துணையாக வும், கூவுங் குயில் எக்காளம் ஊதப், பரந்த கடல் முரசம் முழங்கத், தென்றல் எனும் தேர்மேல் ஏறி, எக்காலத்தும் எங்க ணும் வெற்றிக்கொடி நாட்டிவரும் வேந்தனை மன்மதன், சொல்லப்போனல், ஓர் உருவம் அற்றவனேதான்; எனினும், அவனே இவ்வுலகத்து உயிரினம் அனைத்தையும், தன் ஆணைக் குள் அடங்குமாறு போரிட்டு வென்று, ஒருதனிச் செங்கோல் நடத்துபவனுகவும் விளங்குகின்ருன்; அவனை நாமும் போற்று வோமாக.

போககாலத்தின் இயல்பு

161. முந்தியே போக காலம்
மொய்குழ லார்க்கு நீடும்,
பிந்திய காலம் ஒன்றுக்
கொன்றுபின் குறைந்தே போகும்
மைந்தர்தம் போக காலம்
மாதர்க்கு மாறு பாடாய்
முந்தவே குறைந்து பின்னர்
முறைமுறை நீடி நிற்கும்.

புணர்ச்சித் தொழில் நீடிக்கும் காலமானது, நாளாக நாளாகப் பெண்களுக்குக் குறைந்துகொண்டே போகும்; அதா வது முதற் சேர்க்கையில் நீண்ட நேரத்துக்குப் பின்னரே போகம்விடும் மாதர்கள், பின்னர் நாளாவட்டத்தில் படிப்படி யாக விரைவிலே போகம்விடுபவராகி விடுவர் என்பது கருத்து. ஆனல், ஆண்களுக்கு முதற் சேர்க்கையில் விந்து விரைந்து வெளிப்படுதலும், பின்னர் நாளாக நாளாகத் தொடர்ந்த சேர்க்கைகளில் நெடு நேரத்திற்குப் பின்னரே வெளிப்படுதலும் இயல்பு; இதனல் ஆடவர் போககாலம் நாளாவட்டத்தில் அதிகமாகிக் கொண்டே போகும்.

நாயகியின் போககாலம் ஒத்திருக்க

162. ஆடவர் போகம் முந்தில்
அரிவையர்க் கதிகம் ஆகும்
கூடிய இருவ ருக்கும்
ஒத்துடன் போகம் வேண்டில்

ஏடவிழ் குழலி னுரைப்
புறத்தொழில் இதத்தி னாலே
பீடுறக் கனிவிப் பாரேற்
பெறும்போகம் ஒத்தி ருக்கும்.

இவ்வாறு நேருகின்ற காலமாறுபாட்டினால், ஆணுக்குப் போகம் முந்தும்போது பெண்ணுக்குப் பிந்தும் என்று அறியலாம். கூடும் இருவரும் ஒத்த போகம் உடையவராகக் கூடலே இன்பமாகும். அவ்வாறு சேர வேண்டுமானால், நாயகியை இதமாகப் புறத்தொழில்கள் செய்வதன்மூலம், செம்மையாகக் கனிவித்து, அதன் பின்னரே சேர்க்கையில் ஈடுபடல் வேண்டும். அப்போது, இருவரின் போககாலமும் ஒத்த இயல்பினதாகி, அதனால் இருவருக்கும் இன்பம் பெருகும்.

நாயகனின் போககாலம் ஒத்திருக்க

163. நிகழ்த்திடும் மருந்து ஒன்றின்றிப்
போகம் முன் நீடவேண்டில்,
சுகத்தினில் மனஞ்செல் லாமல்
வேறொரு நிகழ்ச்சி யாலே
அகத்தினை வேறே வைத்தங்
கறிவொடு திடத்தின் மேவிச்
சகத்தினிற் புணர வேண்டும்
தையலைப் பைய வென்பார்.

எந்தவிதமான மருந்தும் இல்லாமல், ஆடவன் தன்னுடைய போக காலத்தை நீட்டிக்க வேண்டுமானால், சேரும் வேளையில், மனத்தை அந்தச் சுகத்தின்பால் செலுத்தாது வேறொரு நிகழ்ச்சியிலே செலுத்தி, அறிவுடன் உணர்வை அடக்கி, நிதானமாகத் தன் நாயகியுடன் சேருதல் வேண்டும்.

17. பல நாட்டவர்க்கும்

164. பொது விதிக் கலவிகள்
புகன்றிட்டோம் இனி
அதி வித வளம்பெறும்
அளவில் தேயத்து
மதுமலர்க் குழலினார்
மனம் உவந்திட
இதமுறப் புணர்ந்திடும்
இயற்கை கூறுவாம்.

நாட்டிலே எல்லாப் பகுதிகளிலும் உள்ளநாயக நாயகியர் பொதுவாகக் கலந்து மகிழ்வது பற்றிச் சொன்னோம். இனித் தேசத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மாதர்கள் இன்பமுறுமாறு இதமாகச் சேர்வதற்குரிய சிறப்பான சில அம்சங்கள் இருப்பதனையும் எடுத்துக் கூறுவோம்.

1. மத்திமதேச நாயகியர்

165. மத்திம தேயத்து
வனிதை மார்நலம்
துய்த்திடு பொழுதினில்
சோதி வள்ளுகிர்

தைத்திடுங் குறிதந்தக்
குறிகள் தாம்பொருர்
வைத்த ஆலிங்கனப்
புணர்ப்பின் வைகுவார்.

மத்திம தேசத்து வனிதையர்கள், தம் நாயகரோடு நலம் துய்க்கின்ற பொழுது, அவர்பால் நகக்குறிகள் பற்குறிகள் செய்வதைப் பொறுக்கமாட்டார்கள்; பலவகையான ஆலிங்கனங்களும் செய்து கூடினுல் தம் கணவரோடு மனங்கலந்து சேர்ந்து இன்புற்றிருப்பார்கள். (மத்திம தேசமென்பது இப்போதுள்ள மத்தியப் பிரதேசப் பகுதியாகும்.)

2. அவந்தி தேச நாயகியர்

166. அவந்திமா நகரம் என்று
அறையும் தேயத்தார்
உவந்துமுன் உரைத்தவர்
தகுதி ஒப்பினும்
நவந்தரும் இச்சையின்
நாடிக் கூடுவர்
நிவந்ததோர் சித்திரக்
கரண ரீதியே.

அவந்தி தேசப் பெண்களும் முன்னுரைத்த மத்திம தேசப் பெண்களைப் போன்றவர்களே; தம் நாயகர் கூடுங்காலத்து நிகழ்த்தும் புதிய புதிய சித்திரக் கரணங்களால் நூதன இச்சைகள் உண்டாகித், தாமும் மனம் விரும்பிக் கூடுவர். (கரணம்—நிலைகள். அவந்தி என்பது உஜ்ஜயினிப் பகுதி)

3. மாளவம், ஆமிர தேச நாயகியர்

167. மாளவம் ஆமிரம்
என்னும் மாண்புடை
நீள்பெரும் தேயத்தார்
நெருங்கப் புல்லியே
கோளமைத் தாடனம்
குறித்துச் செய்திடில்
நாளுமே விரும்புவார்
வடுக்கள் நச்சிடார்.

மாளவம் ஆமிரம் ஆகிய பகுதியிலுள்ள பெண்கள், தத்தம் நாயகர் தம்மை உடல் அழுந்தத் தழுவுதலையும், பலமாகப் பல விதத் தாடனங்கள் செய்தலையும், சேர்க்கைக் காலத்தில் விரும்புவர்; மேனியில் வடுக்கள் எதுவும் செய்வதை அவர்கள் விரும்புவதில்லை. (ஆமிரம் என்பது குவாலியர் பிரதேசம்)

4. சிந்து—இராவதி தேச நாயகியர்

168. சிந்துவோ டிராவதி
என்னும் தேசத்தார்
சந்திர பாகையின்
தீரம் சார்ந்துளார்
வந்துபாய் யமுனையின்
மருவு தீரத்தார்
முந்திய குய்யசும்
பனத்தின் மோகிப்பர்.

சிந்து, இராவதி, சந்திரபாகை நதிதீரம், யமுனை நதிதீரம் முதலிய நாட்டுப் பகுதிகளிலுள்ள நாயகியர்கள் நிதம்ப

சும்பனத்திலே பெரிதும் விருப்பம் உடையவர்களாயிருப்பார்கள்.

5. இலாடம், கலிங்கப் பகுதி நாயகியர்

169. ஐவகை இலாடத்தின்
அருங் கலிங்கத்தின்
தையலார் நகக்குறி
தந்தத் தின்குறி
கையுறு தாடனம்
அகங்கைத் தாடனம்
பையவே செய்திடில்
அன்பு பற்றுவார்.

ஐவகைப்பட்ட இலாடதேசத்திலும் கலிங்க தேசத்திலும் உள்ள பெண்கள், நகக்குறி இனிமையான பற்குறி, பையச் செய்யும் புறங்கை அகங்கைக் தாடனங்கள் முதலியவை செய்து கூடும் தம் நாயகரோடு பெரிதும் மகிழ்ச்சியுடன் கலந்து இன்புறுவர்.

6. கருநடம், தெலுங்குப் பெண்கள்

170. கருநட நாரியர்
தெலுங்கக் கன்னியர்
இரவொடு பகலும்
ஊண் துயிலும் இன்றியே
மருவிடு கலவியில்
வைத்த சிந்தையார்

சுரத பாடவ கரணத்தில்
தோய் குவார்.

கருநாடக தேசத்துப் பெண்கள் தெலுங்கு, நாட்டுக் கன்னியர் ஆகியோர் இரவும் பகலும் உண்பதையும் உறங்குவதையுங் கூட மறந்து, தம் நாயகரோடு சேர்ந்து மகிழ்வதிலேயே செல்லும் சிந்தையுடையவர் என்பர். சுரத மிகுந்த பாடவ கரணத்திற் சேர்வதில் விருப்பமுடையவர் இவர்.

7. கோசல மாதர்

171. கோசல நாட்டுக்
கோதைமார்க்கு என்றும்
பாசிழை அல்குலில்
தினவு அபாரமாம்
கூசு தாடனத்துடன்
கபட கோசத்து
மாசறப் புணர்ந்திடின்
அன்பு பற்றுவார்.

கோசல நாட்டுக் கோதையர், எந்நாளும் அதிகமான காமத்தினவு உள்ளவராக இருப்பர். அதனால், அவர்கள் புளகமுற்றுக் கூச்சமுறும் வண்ணம், நாயகர் செய்யும் கடின தாடனங்களாலும், திறமையாகக் கோசலீலைகள் புரிந்து வன்மையாகச் சேரும் சேர்க்கையாலும் தம் நாயகரிடம் நீங்காத அன்பு கொள்வார்கள்.

8. மகராஷ்டிரப் பெண்கள்

172. பெரிய மராஷ்டகத்து
உள்ள பேதையர்

விரியவே சுரதநூல்
கற்று மேம்பட்டார்
வரையும் ஆடவர்
தமை மதித்திடார்
உரியதோர் கலவிகள்
செய்திடில் உவப்பரே.

பரந்த நாடான மகராஷ்டிர தேசப் பெண்கள், சுரத நூல்களை விரிவாகக் கற்று மேம்பாடு அடைந்தவர்களா யிருப்பர். ஆதலால், தம்மை வரைந்து கொள்ளும் அக் கலை அறியாத நாயகரை அவர் மதிப்பதில்லை. அவர்களுக்கு உரிய முறைகளை ஆய்ந்து அறிந்து திறமையுடன் நடந்தால் அவர்களும் உவந்து கூடுவார்கள்.

9. கேரளக் கன்னியர்

173. கேரள நாரியர்
புனிதக் கேண்மையர்,
சீர்பெறு கணவன்
மேம்பாட்டில் சிந்தையார்,
ஈர்நகக் குறிதந்தக்
குறிக்கு இணங்கிடார்,
மாரன் ஆலயஞ்சுவைத்து
அணையின் வாழ்வரே.

கேரள நாட்டுப் பெண்கள் தம் நாயகருடன் தூய்மையாகத் துணைமை பாராட்டும் இயல்பினர். அழகிய, தம் கணவருக்கு மேலாகத் தாம் இருந்து செய்யும் உபரி சுரத கரணத்திலே செல்லும் சிந்தை உடையவர்கள். நகக்குறி தந்தக் குறிக்கு

இவர்கள் இணங்குவதில்லை. மதன பீடத்தைச் சும்பனம் செய்து கூடினால், இன்பம் அடைவார்கள் என்பர்.

10. சோழ தேசத்து மாதர்

174. பொன்னி நாட்டு உறை
பூவைமார் சொலும்
நன்னய மொழிகளும்
நயப்பர் நாடியே
பன்னிய புறத்தொழில்
கலவி பண்ணியே
பின்னரிற் கூடிடில்
பெரிதும் உவப்பரே.

சோழ நாட்டுப் பூவையர்கள், உபசாரத்திலும் இன்மொழிகளிலும் வாஞ்சை உடையவர்கள். ஆதலால், பலவிதப் புறத்தொழில்களும் செய்து, பின்னரிருந்து கூடினால் பெரிதும் விருப்பமுடன் தம் நாயகரைக் கலந்து மகிழ்வர்.

11. பாண்டி நாட்டுப் பாவையர்

175. தென்தமிழ் நாட்டுச் சேயிழை நல்லார்,
திரள்தனம் இறுகுறத் தழுவிக்,
கன்றிட, இதய தாடனம் செய்து,
கவினிதழ் பற்படப் பருகி,
ஒன்றிய உகிரால் தனவடுக் காட்டி,
உறுவிரல் சுரத சும்பனத்தால்,
துன்றிய மதனத் திருநதி பெருக்கித்,
தோய்ந்திடில் மகிழ்ந்து தோய்குவரால்.

தென் தமிழ் நாட்டுப் பெண்களைத், திரண்ட தனங்கள் அழுந்துமாறு இறுகத் தழுவி, மார்பகத்தில் இதய தாடனம் செய்து, அழகிய அதரங்களிலே பற்குறிகள் பதியுமாறு இறுகச் சுவைத்து இதழமுதம் பருகிக், கொங்கைகளில் வடுவுண்டாகுமாறு நக்குறிகள் பதித்துக், கரிகர லீலையாலும் சும்பனத்தாலும் அவர்பால் சுரத நீர் பெருக்கெடுக்கச் செய்து கூடினால் மகிழ்வோடு தாமும் இசைந்து கூடி இன்புறுவார்கள்.

12. ஒட்டியம், இலங்கை, யவனம், வங்க மங்கையர்

176. ஒட்டியம் யவனம் வங்கம் என்று உரைக்கும்
ஒளிபெறும் தேயத்தின் மடவார்
மட்டறத் தழுவிச் சுரத சும்பனத்தால்
மருவுவர்; இலங்கையின் மடவார்
எட்டென உரைத்த புறத்தொழில் கலவிக்கு
இணக்கமாய் இரவுநன் பகலும்
விட்டுயர் காமத் திருவிழா நடத்தி
அகத்தொழிற் கலவி வேட் டிருப்பார்.

ஒட்டியம், யவனம், வங்கம் என்ற தேசப் பகுதியிலுள்ள பெண்கள் இறுகத் தழுவிச் சுரத சும்பனங்கள் செய்து கனிவித்துக் கூடினால் தாமும் மகிழ்வுடன் கூடுவார்கள்.

இலங்கை நாட்டு மடவார், எட்டுவகைப் புறத்தொழில்களும் செய்யக் கலவிக்கு இசைந்தவர்களாகி, இரவும் பகலும் காமத் திருவிழா நடத்தி, அகத்தொழிற் கலவி இயற்றுவதிலே ஆர்வம் உடையவரா யிருப்பர்.

[ஒட்டியம்-ஒரிசா, யவனம்-கிரேக்கம் முதலிய மேனாடுகள், வங்கம்-வங்காளம்.]

பல தேசப் பெண்டிரை மகிழ்வித்தல்

177. எண்ணரும்தேய மடந்தையர் இயல்பை
யாவரே யெடுத்தெடுத் துரைப்பார்;
நண்ணிய ஒழுக்கம் அவர் குறிப்பறிந்து
நாடியே புணர்வதே யல்லால்,
மண்ணுல கதனில் தேயத்தார் இயற்கை,
வேறு வேறாக வகுத்தனம் எனினும்
பண்ணிய மொழியார் சுபாவம் ஏன்று எடுத்த
பகுதியே பண்பு எனல் ஆமால்.

தேசங்கள் மிக மிகப் பலவாதலால், அங்கங்குள்ள மடந்தையரின் இயல்பை யாராலும் முறையாக எடுத்து உரைக்க இயலாது. இவர்க்கெல்லாம் பொதுவாக, நடக்குமுறை யாதென்றால், கூடும் நாயகியரின் குறிப்பினை அறிந்து, தாமும் விரும்பி அவரும் விரும்புமாறு கூடுவதே யாகும். உலகிலுள்ள தேசத்தார் இயற்கைகளைப் பல்வேறு வகையாக வகுத்திருந்தாலும், அவரவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை அறிந்து கூடுதலே நல்ல இன்பம் பெறுதற்குரிய வழியாகும்.

பெண்கள் வசமாதல்

178. களித்திடும் இன்பத் தாடனத் தாலே
கன்றிய இதயம், பற்குறி,
நெளித்திடு பிறைபோல் உகிர்வடு, அணியால்
நிறைந்த சிங்காரம துடைய
துளித்தலை மேகக் குழலினர் பயிர்ச்சி
சுபாவம் முற்றறிந்திலா ரேனும்,

அளித்திடு கலவி உச்சமா விடாமல்
அணவரேல் அவர் வசமாவர்.

இன்பம் மிகுவிக்கும் தாடனங்களாலே களிப்புற்றுக் கன்றிய இதயம், பற்குறி, பிறையனைய நகக்குறி, அணியால் புனைந்து அழகு படுத்தல், பெண்களோடு செய்யும் பயிர்ச்சிகள், அவர்கள் சுபாவம் முதலியன வெல்லாம் அறியாதவராயினும், தம் மனைவியின் போக காலத்துக்கு முந்தவே தமது போகத்தை ஒழுக விட்டு விடாது, சமமாக இருவருக்கும் நிகழுமாறு கூடினால், அவளும் இன்புற்று வசமாகி வாழ்வாள்.

காளையர் லட்சணம்

179. திருவும், செல்வமும்,
கல்வியும், செவ்விசேர்
உருவும், நல்ல
இளமையும் ஊக்கமும்,
தருவின் மிக்க
கொடையும், தகுதியும்,
பரவும் இன்சொலும்,
இங்கிதப் பார்வையும்.

புகழும், செல்வமும், கல்வியும், அழகமைந்த உருவமும், நல்ல கட்டான இளமையும், ஊக்கமும், கற்பகத் தருவினைப் போன்று மனைவி தன்னைக் கேட்பனவெல்லாம் மறுக்காது தரும் மனமும், பெருநிலையும், இன்சொல்லும், இங்கிதமான பார்வையும்,

180. அன்பும், மாத ரிடத்து அனுராகமும்
இன்பமும் மிக்க இடபத்தின் சாதியும்,

வன்பிலாதநற் கலவிவல் ஆண்மையும்
முன்புபெற் றுடையோன் முழுக் காளையே.

அன்பான நெஞ்சகமும், தன்னை மணந்த நாயகியினிடத்திலே இசைந்த காதலும், காளைச் சாதியும், மனைவிக்குத் துன்பந் தராது இன்பம் மிகுவித்துக் கலவித் தொழில் செய்கின்ற ஆண்மையும் பொருந்தப் பெற்றுள்ளவனே ஆண்களில் காளை போன்று பாராட்டத்தக்க சிறந்தவனாவன்.

18. கூடல்விழா ஏற்பாடு

181. நாடும் நாடுள்ள
நங்கையர் வண்ணமும்
பீடு சார்ந்த
கலவியும் பேசினோம்;
ஆடவர்க்கும் அரிவை
யர்க்கும் அன்பு
கூடிடுஞ் சுரத
ஆரம்பங் கூறுவாம்.

பல்வேறு வகையான நாடுகளும், அவ்வந் நாட்டிலுள்ள நங்கையரினை மகிழ்ந்து கூடும் தன்மையும், அவரவர்களுக்குத் தகுதியான முறைகளையும் பற்றி இதுவரை சொன்னோம். இனி, ஆடவர் அரிவையர் ஆகிய இருவர்க்குமே அன்பானது நாளுக்கு நாள் வளர்ந்து அதிகரிக்குமாறு செய்யும் 'சுரத ஆரம்பம்' பற்றிப் பேசுவோம்.

சேர்க்கைப் பள்ளி சேர்தல்

182. வெண் பளிங்கு
நிலாதவழ் மேனிலை
எண் பரித்த
எழுநிலை மாடத்தில்

கண் படுக்கும்
கதிரொளிக் கட்டிலில்
தண் படுக்கையில்
தண்மலர் தூவியே.

வெண் பளிங்குச் சலவைக் கல்லினால் இழைக்கப்பட்டதும், நிலாவொளி தவழ்கின்றதுமான, எழுநிலை மேன்மாடத்தில் கண்ணைப் பறிக்கப் பளபளவென ஒளிவீசும் கட்டிலின் மேல், விரித்துள்ள தண்மையான பஞ்சணையில், முல்லை முதலிய குளிர்ந்த மலர்களைத் தூவி,

183. தாமம் எங்கணும்
நாற்றித், தனிஅகில்
தூமம் இட்டுச்,
சுடர்விளக்கு ஏற்றி,
நாமவேள் திருநாள்
நடத்தப் பெறும்
காமசாலை கவின்
பெற மேவியே,

அக்கட்டிலைச் சூழ நாற்புறமும் மலர் மாலைகள் தொங்க விட்டு, அகில் புகை பரப்பிச், சுடர் விளக்கு ஏற்றி, மதன விழா நடத்துதற்கென்று அமைத்துள்ள இனிய அந்த அறையினுள், நாயக நாயகியர் இருவரும் தம்மை அழகுபடுத்திக் கொண்டு சென்று,

184. பரிசனத் தொழில்
பாவை நல்லார்களும்
உரிய பாங்கியரும்
உடன் சூழ்வரக்

கரியவார் குழலார்

வளைக்கை பற்றி

விரியு மாமலர்ப்

பாயலின் மேவியே.

ஏவல் தொழில் செய்யும் பெண்களும், உரிமையான பாங்கியரும் சூழ உடன் வருகின்ற, கருத்து நீண்ட கூந்தலின ளான, தலைவியினது வளை முழங்கும் கையினை நாயகன் பற்றி, இருவருமாக மலரணையினிடத்தே சேர்ந்து அமர்ந்து,

185. பாகு வெள்ளிலை

பாளிதத் தோடுமுன்

ஓகை கூர

நகைத்து உரையாடியே

ஆகம் முற்றும்

அரிய மணம் கமழ்

மாகநீர்ச் சாந்தம்

மான் மதம் பூசியே,

கற்பூரங் கலந்த தாம்பூலத்தை இருவரும் மாறி மாறி உண் டும், இருவருக்கும் மகிழ்ச்சி பெருகுமாறு சிரித்துச் சிரித்து வேடிக்கையாகப் பேசியும், உடல் முழுதும் அருமையான நன் மணம் கமழுமாறு சந்தனம் கஸ்தூரி முதலிய மணப்பொருள் களைப் பூசிக்கொண்டும்,

186. மாலை எய்த

மணங்கமழ் மல்லிகை

மாலை சூடி

மனம் புள கெய்திட

மாலை மெல்ல

எழுப்பி மலர்த் துழாய்

மாலை ஒத்து

மணவரை வைகியே.

அன்று மாலை வேளையிலேயே மலர்ந்த, நறுமணம் வீசும் மல்லிகை மாலைகளை இருவரும் ஒருவருக்கொருவர் அணிந்து, இங்கிதத்தால் இருவர் மனமும் புளகம் எய்துமாறு இருவர் உளத்தும் காம இச்சையை மெல்ல எழுப்பித், துளசி மாலை யணிந்த திருமாலும் அவர் நாயகியான திருமகளும் போன்று அம் மணவரையிலே மனங்கலந்து இருந்து கொண்டு,

2. தொடக்க விழா ஏற்பாடுகள்

187. மாறி மாறி

வனமுலைச் சாந்தமும்

தேறு தோள் வரைச்

சாந்தும் திமிர்ந்திடச்

சிறி யாழின்

நர்ம்புலாந் தீந்தொடை

ஊறு தேறல்சுவை

செவிக்கு ஊட்டியே

நாயகியின் மார்பகங்களிலே பூசிய சந்தனம் நாயகனின் தோளில் பதிவு பெறுமாறும், நாயகன் தோளிற் பூசிய சந்தனம் அவளது மார்பகங்களிற் பதியுமாறும், இருவரும் ஒருவரை யொருவர் மார்புடன் மார்பு இறுகத் தழுவிச், சிறந்த யாழின் நரம்புகளினிடையே உலவிவரும் இன்னிசையாகிய தேனின் சுவையைத் தம் இருவர் செவிகளுக்கும் நயமுற ஊட்டி,

188. கலவி கூர்தரு காதை நடத்தியே,
நிலவு காட்டி நெகிழும் முறுவலில்,
புலவி கூரப் பொருளுரை யாடியே,
பலவும் நன்னயச் சொற்கள் பயிற்றியே.

கலவித் தொழிலிலே ஆசை தருகின்ற இன்பக் கதைகள் பலவும் பேசி, அதனுல் ஆசை எழப்பெற்ற நாயகியினிடத்து முறுவல் நெகிழுமாறும், நாணத்தால் அவள் ஊடிப் பிணங்குமாறும் பொருள் கொண்ட கிளர்ச்சி உரைகளைப் பேசிப், பின் அவ்வூடல் தணியுமாறு நயந்த சொற்கள் பலவும் சொல்லி அவளை வேண்டி,

189. மேனி மேல் அணி விட்டு ஒளிவீசிட
ஆன பேரணி போக்கி, அரிவைக்கு
மான மேகலை நீக்கி, மருங்குல் நுண்
தானை ஓர் சுற்றளவை தரிப்பித்தே.

நாயகியினுடைய மேனியை அழகு செய்வதுடன் விட்டு விட்டு ஒளி வீசிக் கொண்டிருக்கும் ஆபரணச் சுமைகளத்தனையுங் களைந்து, அவளது இடையில் அணிந்துள்ள மேகலாபரணத்தை நீக்கி, அவளுடைய நுண்ணிய இடையில் ஒரு சுற்று மெல்லிய வஸ்திரம் மட்டுமே அணியச் செய்து,

190. மாடி ருந்த வனிதையர் யாவர்க்கும்
நாடுகக் கடை யால்விடை நல்கியே
கூடு காமக் கொழுகொம்பின் மேற்கொடி
ஓடி ஏறிய தென்ன உயரவே.

அதுவரையிலும் அருகிருந்த பாங்கியர் பரிசனரான யாவர்க்கும் நாயகன் தன் கடைக்கண் குறிப்பினல் விடை கொடுத்து அனுப்பிவிட்டுக், கொழு கொம்பின்மேற் கொடிதாவி ஏறிப் படர்வது போலக் காம இச்சையானது அதிகரித்துச் சுற்றி உயர,

191. ஆர்வமோடு அணைத்து, இடக் கையினுல்
வேரி மெல்லணை சாய்த்து,மென் கொங்கையும்
ஆர மார்பும் அணிதுகில் நீவியும்,
ஊருவும் தொடும் ஒண்வலக் கையினுல்.

ஆசையோடு நாயகியை வலக்கையால் அணைத்துக் கொண்டு, இடக்கையினுல் அவளை மணங்கமழும் மலரணையில் மெல்லச் சாய்த்து, அவளுடைய தனபாரங்களையும் மார்பையும் தடவி, அவளுடைய மெல்லிய ஆடையைத் தொட்டு ரஸிப்பது போல வலக்கையினுல் அவளது தொடைகளை மெல்லத் தொட்டு,

192. நேசமாகக் கவுளை நெரித்துத் தம்
வாசத் தம்பலம் வாயின் வழங்கியே
பூசுமேனி குழைந்து புளகு எழப்
பாசிலைச் சுருள் பாதி அருந்தியே

நாயகியின் கன்னத்தை நெரித்து தன் வாய்த் தாம்பூலத்தை அவள் வாயிலே வழங்கி, அவள் அழகிய மேனி குழைந்து புளகிக்கும் வண்ணம், அவள் வாயிலிருந்து அத் தாம்பூலத்திற் பாதியைத் தான் பெற்று அருந்தி,

193. நாணம் நீங்கி நகையும் எழாது எழ
வாள் நிலா நுதல் சரபம் வளைதர
ஆணி முத்தின் வியர்வும் அரும்பிடப்
பூண் அழுந்து புறத்தொழில் செய்தலே.

நாயகியின் இயல்பான நாணம் நீங்கிக் குறுநகை அவள் இதழ்க் கடையிலே தோன்றுமல் தோன்றி நெளிய, அவளுடைய ஒளி நிறைந்த நெற்றியும் புருவங்களும் சுருங்க, முத்துப் போல மேனியெங்கும் குறுவியர்வு துளிர்க்க, ஆலிங்கனம் முதலாகிய புறத் தொழில்களைச் செய்தல் வேண்டும்.

19. பொருத்தமற்ற தழுவல்

194. அப்புறத் தொழில் ஆலிங்கனம் ஆதியாம்,
செப்பும் ஆலிங் கனங்கள் இருதிறம்;
ஒப்பில் காமத்தில் ஒவ்வாதது ஓர்திறம்,
தப்பில் காமத்தைச் சார்ந்தது அங்கு ஓர்திறம்.

நாயகனும் நாயகியும் தம்மோடொத்துக் கலந்து இன்புற நிகழ்த்தும், அத்தகைய புறத்தொழில்கள், ஆலிங்கனம் முதலாகப் பலவாகும். அவற்றுள், ஆலிங்கனம் இருவகைப் படும். ஒருவகை, காதலராவார்க்குப் பொருந்தாத ஆலிங்கனம்; மற்றொரு வகை அவர்க்கு மகிழ்வு அளிப்பதைச் சார்ந்த ஆலிங்கனம்.

1. ஒவ்வாத ஆலிங்கனங்கள்

195. ஏகுவான் தன் எதிர்
வருவான் புயம்
ஓகை அகற்று ஒன்றுதல்
ஒன்று; தொழில் செய்வாள்
ஆகம் ஏதிலன்
ஆகத்து அறிவின்றி
மோகம் அற்று ஒன்றல்
மற்றுஒன்று; மொழியினே.

வழியோடு போய்க்கொண்டிருக்கும்போது, அதே வழியில் எதிரே வருபவன் தோளோடு இருவரும் எதிர்பாராது மோத நேர்வதால் ஏற்படுதல்போல்வது ஒன்று; ஏதாவது தொழில் செய்து கொண்டிருக்கும் போது, அருகிலிருக்கும் ஆடவன் உடலோடு, காம இச்சை ஏதும் இன்றி, அறியாது ஒருத்தியுடைய உடல்பட நேர்தல் போல்வது மற்றொன்று.

196. நெருங்கு சும்மை விழாவின் நெருக்கினில்
பரந்த நள்ளிருள் போதினில் பாவைதன்
மருங்குல் சாய்க்கும் வனமுலை மற்றவன்
ஒருங்கு தோளுடன் ஒன்றுவது ஒன்றரோ!

மிகுந்த வைபவத்தோடும் நடைபெறும் விழாவில், நள் இருட் காலத்தில், நெருக்கி வரும் கூட்டத்தின் இடையில், இடையைத் தளரச் செய்யும் நாயகியின் பணைத்த மார்பகங்கள் மற்றொருவன் தோளோடு எதிர்பாராது நேர்வது ஒருவகை.

197. இணைய தாய நெருக்கினில் ஈதன்றிக்
கணையுநீர் மிதவைக் கண் கலக்கத்தில்
பிணையோர் கேள்வனைப் பெய்வளை புல்லியே
நினைவில் போக்கற நிற்பது அங்கு ஒன்றரோ.

இப்படி இரவில் திருவிழாக் கூட்டத்திலும், இஃதல்லாமல் தோணி யேறி நதி கடக்கும்போது, உளத்திலே பயந்து மயக்கமுற்றுப் பக்கத்தில் இருக்கும் ஆடவன் மேல் தன் நிணைவற்றுச் சாய்ந்து நிற்றலும் போல்வன ஒவ்வாத ஆலிங்கனங்களாம்.

198. என்று சொல்லி இயம்பிய நால்வகை
மன்றலங் குழலார்க்கும் மணாளர்க்கும்
கன்று சிந்தையில் காதல் ஒன்று இன்றியும்
ஒன்றும் மேனி தழுவுதல் உற்றிடும்.

இவ்வாறு மேற்கூறிய நான்கு வகைகளிலும் ஆடவரும் மகளிரும், தம் உள்ளத்தில் காதல் ஏதும் இன்றி உடல்மட்டும் எதிர்பாராது தழுவ நேர்வதால், இவ்வை போல்வன காமச் சேர்க்கையிற் பொருந்தாத ஆலிங்கனங்கள் ஆகும். அதாவது இவற்ருல் அவர் உளம் வாடும் அல்லது ஏதும் நினையாதிருக் குமே யன்றி அங்கே காதல் எழாது என்பது கருத்து.

20. ஆலிங்கனம் எட்டு

காதலர்க்கு இசைந்தவை

199. ஆசை கூர்தரு ஆலிங்கன வகை
பேசில் ஓர்எட்டுப் பேதம் சொலப்படும்,
ஓசை பெற்ற தொழிலும் ஒவ்வொன்றிற்கும்
காசிலாத பெயரும் கழறு வாம்.

நாயக நாயகியர், தமக்குள் ஒருவர்பால் ஒருவருக்கு ஆசை பெருக்குமாறு செய்கின்ற புறத்தொழிலான ஆலிங்கன வகை கள் எட்டு விதமானவை யாகும். புகழ் பெற்ற அவற்றின் தொழில் முறைகளும், அவ் வொவ்வொரு தொழிற்குமான பெயரும் இனிச் சொல்லுவோம்.

1. கொடி சுற்றித் தழுவல்

200. ஒருகை ஆரத் தழுவி, ஒரு கையால்
அருகு நின்ற கொழுநன் அருங் கழுத்து
இறுகப் புல்லி அணைத்து, இதழ் உண்டிடல்
விரவு பொற்கொடி வேட்டிதம் என்பவே.

நாயகியானவள், தன் அருகிலே நிற்கும் தன் நாயகனைத், தன் ஒரு கையால் உடல் இறுகத் தழுவிக் கொண்டு, தன் மற்றொரு கையால் அவன் அழகிய கழுத்தை வளைத்து இறுக

அணைத்து, இதழ் அமுதம் உண்பது பொற்கொடி வேட்டித ஆலிங்கனம் எனப்படும். கொடியானது கொழுகொம்பைச் சுற்றித் தழுவிப் படர்வது போன்றது இதுவாதலால் இப் பெயர் பெற்றது என்பர்.

2. பனைமரம் ஏறல்

201. மற்றவன் தாளில் ஒருபதம் மிதித்து
மருங்கினில் ஒருபதம் வைத்துப்
பொற்றளிர்க் கரத்தால் மருங்குறத் தழுவி
ஒருகையால் புரவலன் தனது
முற்றெழில் புரியும் கழுத்துற அணைத்து
மூச்செறிந்து இதழ் அமுது உண்ணல்
பெற்றதிண் பனைசேர் மரத்தின் ஆரூடம்
என்னவே பேசுவர் பெரியோர்.

நாயகியானவள், தன் ஒரு பாதத்தால் தன் அருகே நிற்கும் நாயகனின் ஒரு பாதத்திலே மிதித்துக் கொண்டு, மற்றொரு பாதத்தை அவனுடைய தொடைகள் யாதாயினும் ஒன்றிலே ஏற்றி வைத்து, மிதித்து, ஒரு கையால் அவனது இடையை இறுகத் தழுவி, மற்றொரு கையால் அவன் கழுத்தினை அழுந்த அணைத்துப், பெருமூச்சு விட்ட வண்ணம், அவனது இதழமுதம் பருகுவது விருட்சாரூடம் எனப்படும் ஆலிங்கனமாகும். (விருட் சாரூடம் என்பது மரம் ஏறுதல் போன்றது).

3. எள் அரிசிக் கலவை

202. ஒருவரை ஒருவர் இறுகுறத் தழுவி,
மற்று ஒருவர் கைம்மீதினில் ஒருவர்
விரிமலர்க் கரத்தை இகல்வபோல் ஏற்றி
விரித்தமெல் அணைமிசைக் கிடந்தே

இருவர்தம் உடலும் ஒன்றியும் ஒன்று
இயற்கையில் இறுகுறத் தழுவல்
பரவிய திலதண்டுலம் என உரைப்பார்
பண்புறு மதனநூல் வல்லார்.

மலர் விரித்த மெல்லிய பஞ்சணையின்மேலே நாயக நாயகியர் இருவரும் படுத்துக்கொண்டு, ஒருவரையொருவர் மல்லுக் கட்டுவதுபோல ஒருவர் கைமேல் மற்றொருவர் கையினைப் பிணைத்து ஏற்றி, இருவர் உடலும் ஒன்றியும் ஒன்றாமலும் இருக்கும் நிலையிலே, இறுகத் தழுவிக் கிடத்தல் எள் அரிசிக் கலவை (திலதண்டுலம்) ஆலிங்கனமாகும்.

4. பால்நீர்க் கலவை

203. எதிர்முகமாகச் சயனித் திருந்தே,
இவள் குறங்கு அவன் குறங்குஏற்றிக்,
கதிர்முலை மார்பிற் புதைந்திட,
அன்பால் கணவனை இறுகுறத் தழுவி,
மதிநுதல் அரிவை உறுப்பும் நன் கொழுநன்
வனப்புறும் அங்கமும் ஒன்றல்,
கதிர்பெறு பாலும் நீரும் ஒன்றுன
கலப்புஎன உரைப்பர் கற்றுஉணர்ந்தார்.

நாயகனும் நாயகியும் தமக்குள் ஒருவருக்கொருவர் எதிர் முகமாகப் படுத்துக்கொள்ள, நாயகியானவள் தன் தொடையை அவன் தொடைமீது ஏற்றி, தன் மார்பகங்கள் அவன் மார்பினுள் புதைந்து விடுமோ என்னுமாறு, அன்போடு அவனை மார்பிறுகத் தழுவி, இருவர் உடல்களும் ஒன்றுடனொன்று கலந்து ஒன்றுகிவிட்டாற் போன்று இணைந்துமகிழ்தல் பால் நீர்க்கலவை எனும் ஆலிங்கனமாகும்.

5. முழுத்தொடை தழுவல்

6. குறிகூடும் தழுவல்

204. கனிந்திடுங் காமம் கண்டிடுவாள் தன்
கணவனை இணைமணித் தொடையால்
முனிந்தவள் போல முதுகுற நெருக்கல்
முழுத்தொடைத் தழுவல் என்ருகும்;
புணைந்த ஓவியத்தின் இருவரும் சகனம்
பொருந்தவே அணைந்து பாரர்ட்டல்
குனிந்தவில் தடக்கை மதனநூல் சகனம்
கூடும் ஆலிங் கனம் எனுமால்

காமநீர் கனிந்து பெருகிச் சேர்க்கைக்குத் தயாராகவுள்ள நாயகியானவள், தன் கணவனெடு கோபித்துக் கொண்டவளே போல ஊடித், தன் மணித் தொடைகள் இரண்டும் அவன் முதுகில் உராயுமாறு அவனை அதற்குள் இடைப்படுத்தி நெருக்குதல் முழுத்தொடைத் தழுவல் ஆகும்.

இதமுறத் தீட்டிய ஓவியங்களே போல, இருவரும் தம் குறிகள் ஒன்றுடன் ஒன்று பொருந்திய நிலையிலே இறுக அணைத்து அசையாது தழுவிக் கிடத்தல் சகனங் கூடும் ஆலிங்கனம் ஆகும்.

7. தனமுறத் தழுவல் 8. நெற்றி நெருக்கம்

205. பணைமுலை முகங்கள் கொழுநன் மார்பகம்
பதிந்து அடி வட்டத்தில் பரக்க
அணைமிசை அழுந்தத் தோய்ந்திடல் முலையா
லிங்கனம் என்பரால் அறிந்தோர்;

இணைவிழி நெற்றி ஒருபுறம் நாசி
எதிர்எதிர் நெருங்கிட அணைத்துக்
கணவனைத் தழுவல் நெற்றியின் ஆலிங்
கனம் எனஉரைப்பர் கற்று உணர்ந்தோர்

நாயகியினுடைய, பணைத்துப் பெருத்த தனங்களின் முகங்கள் நாயகனின் அகன்ற மார்பிலே அழுந்தப் பதிந்து, அதனுல் அக் கொங்கைகளின் அடிப்பாகம் மிகவும் பரந்து விரிய, விரித்த மலரணையிலே நாயகி கிடந்து, தன் அருகேயுள்ள நாயகனை அழுந்தத் தழுவுதல் 'தனமுறத் தழுவுதல்' எனப்படும்.

நாயகியானவள் தன்னிரு விழிகளும் நெற்றியும் நாசியும் தன் கணவனது விழிகள் நெற்றி நாசியுடன் நேர் நேராக ஒட்டிப் பொருந்துமாறு தன் நாயகனைக் கட்டி யணைத்துத் தழுவுதல் நெற்றி நெருக்கல் ஆலிங்கனம் என்று சொல்லப்படும்.

21. இதழ் அமுதம்

206. ஆலிங்கனம் உரை செய்தனம்;
அமுதந் திரள் வாயார்
மேலின்புற வரும் சும்பன
விதமுஞ் சில புகல்வோம்
சேலொன்றிய விழி பொற்கவான்
முலை நன்னுதல் செங்கை
மூலம் கடிதடம் வாயிதழ்
மொழி உந்தியின் இடமே.

ஆலிங்கன வகைகள் பற்றி இதுவரை கூறினோம்; இனி அமுதம் திரண்டு விளங்குகின்ற செவ்வாயினரான நாயகியாரானவர், மேலும் இன்புறுமாறு செய்யத் தூண்டும் சும்பன விதங்களிற் சிலவற்றையும் பற்றிக் கூறுவோம்.

சும்பனத்திற்கு உகந்ததான இடங்கள், விழி, தனம், நெற்றி, கன்னம், கைம்மூலம், அல்குல், இதழ், நாபி முதலியன எட்டும் ஆகும் (சும்பனம் - சுவைத்தல்) என்பர்.

இதழ் பருகல் எட்டுவகை

207. எனவே மொழிபல தானமுள்
இயல் சும்பன இடமாம்

கனிவாய் இதழ் அளியாது எதிர்
கதிர்வாள் முகம் மாறல்,
இனிதாய் அவன் அவள் வாயிடு
இதழைப் பருகா மல்
சினமாய் இதழ் நாவால் தள்ளல்
சிறு பேதையர் இயல்பே.

மேலே சொன்ன சும்பனத் தானங்கள் எட்டனுள், ஒரு சும்பனத் தானமான கனி போன்ற வாய் இதழைத் தன் நாயகனுக்குப் பருகத் தராது, எதிர்த்து முகம் மாறலும், அவன் அவள் வாயிலிடும் இதழை அவளும் இணைந்து சேர்ந்து பருகாமற் சினங்கொண்டு இதழ் நா முதலியவற்றால் தள்ளலும், அறிவீனமான இயல்புகளாம். இருவரும் ஒருவரிதழை ஒருவர் மனம் விரும்பிச் சுவைத்தலே நாயக நாயகியர்க்கு இன்பந் தருவதாகும்.

208. முன்னின்றவள் பின்னிட்டிடின்
முகம் அங்கையினில் திருப்பி
மன்னுங்கனி வாய்உண்டிடல்,
மகிழ்நன்முகம் திரித்தே
அன்னந்தரு நடையாள்மறித்(து)
அவன்வாய்இதழ் உண்ணல்,
பன்னுஞ்சிறு விரலால்பிணித்(து)
இதழ் நாவினாற் பருகல்;

1. தனக்கு எதிரே நின்ற நாயகியானவள், நாணத்தால் பின்காட்டித் திரும்பிவிட்டால், அவளது முகத்தைத் தன் உள்ளங் கையால் தன் முகத்திற்கு எதிராகத் திருப்பி, அவள் கனிவாயமுதம் நாயகன் உண்ணுதல் ஒன்று;

2. அதே போலக் கணவன் முகத்தைத் தன் அருகே இழுத்து அன்ன நடையாளான நாயகியானவள் மீண்டும் அவன் வாய் இதழ் பருகுதல் ஒன்று;

3. நாயகியானவள் தன் சிறு விரல்களால் நாயகன் இதழினைப் பிணித்துக் கொண்டு தன் நாவினல் தடவி உண்ணல் ஒன்று;

209. பல்லன்றியும் நாவால்இணை
இதழால் இதழ் பருகல்;
கல்லொன்றிய தோளான்அவள்
கனிவாயிதழ் இரண்டும்
மெல்லென்றிட உடனே அதில்
விளையும்அமு துண்டல்;
செல்லுந்தனி நாவாலிதழ்
செறியப்புறம் நீவல்;

4. பல்லினலும் நாவாலும் நாயகனுடைய இதழ்களை நாயகியானவள் பருகுதல் ஒன்று;

5. திண்ணென்ற தோளானுன நாயகன், அவளுடைய கனிவாய் இதழ் இரண்டையும், மெல்லெனத் தன் இதழ்களால் பற்றி, உடனே அங்கே விளையும் அமுதத்தை உண்ணல் ஒன்று;

6. நாயகன் தன்னுடைய நாவினல் அவளுடைய இதழினை அழுத்திப் புறத்திலும் தடவுதல் ஒன்று;

210. கணவன்இதழ் மாதுண்டிடு
காலந்தனில் அவனும்
மணமொன்றிய மேல்வாயிதழ்
மாறித்தனி பருகல்;

இணையில்லவள் பின்னேகிவந்
தெதிராய் முகம் குனிந்தே
துணைவன்இதழ் உண்போதவள்
துணைவாஇதழ் துய்த்தல்;

7. கணவன் இதழை நாயகி உண்ணும்போது, அவன் மணம் நிறைந்த அவள் மேல் வாயிதழைத் தானும் திருப்பிப் பருகுதல் ஒன்று;

8. இணையற்ற நாயகியானவள் தன் நாயகனின் பின்புறமாக வந்து திடுமென அவனுக்கு எதிராக முகம் குனிந்து அவன் இதழைப் பருக, அப்போது அவனும் தன் துணைவியின் இதழ்களை விரும்பி உண்ணல், ஒன்று; ஆக இவ்வகை எட்டும் அதரபான முறைகளாகும்.

துயிலெழுப்பல்

211. இவ்வாறிதழ் பருகுந்தொழில்
இதற்கெண்ணிய இடத்தில்
எவ்வாறென அறிந்தேபரு
கிடுதல்இயல் பாமால்;
ஒவ்வாது பொய் உறக்கஞ் செயும்
ஒருமாதினை உவந்தே
செவ்வா யிதழ் பருகித் துயில்
எழுப்பல்இது செயலே.

இவ்வாறுன பலவகைப்பட்ட அதரபானமும் செய்யும் போது, இடத்திற்குத் தக்கவாறு அறிந்து பருகுதலே சிறப்பாகும். கணவனுக்கு ஊடிக்கொண்டு பொய் உறக்கம் செய்கின்ற மனைவியைக், கணவன் ஆர்வமுடன் செவ்வாயிதழ் பருகித் துயில் நீங்கச் செய்தலும் அதரபான வகைகளுள் ஒன்றேயாகும் என்பர்.

22. நகக்குறி பதித்தல்

212. பங்கமி லாதுறு சும்பன
நீதி பகர்ந்தே மால்.
அங்கது நிற்க ; நகக்
குறி சேரிடம் அன்பாக
இங்கித னியல்பும் உரைப்ப
இயன்றனம் என்றாலும்
கொங்கலர் வாளி
மதன்கலை கற்றவர் கொள்வாரே.

இவ்வாறாகக், குறைவின்றி நிகழ்த்தப் பெறுகின்ற சும்பன நீதிகள் பலவும் பற்றிச் சொன்னோம்; அது நிற்க. இனி அன்பாக நகக்குறி பதிக்கும் இடமும், அதன் இயல்பும் சொல்லப் போகின்றோம். இதனால், மெல்லியலாரான நாயகியரின் உடலிலே வடுவுண்டாகுமே என்று கேட்கலாம். அப்படியேயாயினும், அதனால் அவருக்கு மிகுந்த இன்பம் ஏற்படுவதால், மதன கலைநூல் கற்றவர் அதனையுஞ் சிறந்தது என்று ஏற்றுக்கொள்ளவே செய்வர்.

நகக்குறித் தானங்கள்

213. ஏறியசண்டத் துக்கிரவேகத்
திரு வோர்க்கும்

ஊறுபடுத்து வள்ளுகிர் வைக்கும்
இடம் ஓதில்,
பேறுசெய்வாகு மூலம்உரம்தோள்
பிடர் கண்டம்
மாறில் விலாகவுள் சொர்க்க நிதம்பம்
வாயூ ரே.

கைம்மூலம், மார்பு, தோள், பிடர், கழுத்து, விலா, கன்னம், கொங்கை, நிதம்பம், வாய், தொடை என்ற பதினொரு உறுப்புக்களும் சண்டவேக உக்கிரவேகப் பெண்கள்பால் அவர்களது நாயகர் நகக் குறி செய்வதற்கான இடங்களாகும்.

214. மத்திம வேகம் மந்தம்உடைத்து
ஆகிய வேகத்து
இத்திற வேகத் தாருகிர் பூணார்
இடுங் காலம்
கைத்திடும் ஊடல் அறிந்திடுங் காலம்
களி யாரத்
துய்த்திடுங் காலம் நெட்டிடைப் போகத்
துணைக் காலம்.

மத்திம மந்த வேகம் உடையவராகிய பெண்கள், நகக்குறியைப் பெரும்பாலும் சகிப்பதில்லை. பொதுவாக நகக்குறியினைப் பதித்தற்கு உரிய காலம், ஊடல் தீர்ந்தபின்னரும், நெடு நேரங்களியாடித் துய்த்திடும் காலத்திலும், இருவரும் நீண்ட காலப் போக வேகத் தினராக இருக்கும் அக் காலத்திலும் ஆகும்.

நலம்பெற நெருடுதல்

215. மெல்லுகிர் ஊறு செயும் இடமே
இவ் விதமாகப்
பல்லிடும் ஊறு செய்திடல் பண்பே
என லாகும்;
வல்லணி கொங்கை, வாகுவின் மூலம்
மணி யூரு
நல்லுகிர் தையா தோசைப் படுத்திடல்
நலனு மால்.

நகக்குறி வைக்குமிடங்கள் எல்லாம் இவ்விதமாகப் பற்குறி பதித்தலும் செய்வதற்கு ஏற்றதாகும்.

கொங்கை, கைம்மூலம், தொடை ஆகிய இடங்களில் நகக்குறி பதியாது மெல்லோசை உண்டாமாறு நெருடுதல் நலன் தருவதாகும் என்பர்.

நல்ல நகம்

216. வள்ளுகி ரின்சீர் கூறிடின் மேலே
வகிர்வில்லாது
ஒள்ளொளி யாகி ஐந்திணையாகி
உயர்வாகிக்
கிள்ளையின் முள்வா யின்வடி வொத்துக்
கேடற் றே
எள்ளல் இலாதே வன்மை யுடைத்தே
இயல்பா மால்.

ஓரளவிற்கு உட்பட்டதாகி, உயர்ந்து நுனி பிளவு படாததாக, ஒளியுடன் கிளிமூக்கின் வடிவினை ஒத்துப், பழுதின்றி, வலுவுடன் விளங்குவதே சிறந்த கை நகங்களின் இயல்பாகும். அதுகொண்டே நகத்தொழிலில் ஈடுபடுதல் வேண்டும்.

நகக்குறி வகைகள்

1. பாதி நிலா 2. மண்டலம்

217. கந்தரம் மீதும், கவின்முலை மீதும்,
வளைவா கத்
தந்துகிர் வைத்தல் பாதிநிலாவின்
தரமென் பார்.
அந்த நிதம்பத் தேயிணை யாக
எதிரா க
முந்துகிர் வைக்கின் மண்டல மென்றல்
முறையா மால்.

கழுத்தின் மீதும், அழகிய தனங்களின் மீதும் வளைவாக நகக்குறி பதித்தல் பாதி நிலா வாகும் (பாதிநிலா—அர்த்த சந்திரன்). நிதம்பத் தட்டிலே எதிர் எதிராக இரண்டு நகக் குறிகளைச் சேர்த்துப் பதித்தல் மண்டலம் எனப்படும்.

3. புலிக்கால் நகம்

218. நிலைபெறவே முனம் நிகழ்த்தும் தானத்து
மலைவற நெடுகிய வடுவி ரேகையாம்
சிலசில இரேகையில் சிறிது கோ்டிய
தலையுள தெனில்அது புலியின் தாள்நகம்.

முன்னர் சொன்ன தானங்களில் செய்யும் நகத் தொழில் களில், வெளிப்படுமாறு நீண்ட வடு அமைந்த ரேகைகளில் சில சில ரேகைகள் முனையிற் சிறிது கோணுதலுள்ளனவாக இருந்தால் அது புலிநகக்குறி எனப்படும்.

4. மயிற் பாதம்

219. பெருவிரல் முலையடியில் அழுந்தப் பெற்றிடத்
திரிவிலா நால்விரல் செருத்த வள்ளுகிர்
மருவிய கீற்றுற நாலும் வாங்கிடில்
பரவிய மயூரத்தின் பதமென் றோதுவார்.

கொங்கைகளின் அடிப்புறத்திலே பெருவிரல் நகக்குறி யினைப் பதித்து, அதன் மேலாக மற்றைய நான்கு விரல் நகங் களையும் ஒரு சேரக்கூட்டிப் பதித்தால், அவ்வாறு பதிக்கப் பெறும் நகக்குறிக்கு மயிற்பாத நகக்குறி என்று சொல்வர்.

5. முயலடி

220. கயல்புரை கண்ணினர் கலவை மான்மதம்
இயல்புறு முலைமுகட் டிலக ஏறிய
பயில்நகம் ஐந்துமே பட்டதன் பெயர்
முயலடி என்னவே மொழிய வேண்டுமால்.

கயல்மீன்கள் புரள்வது போன்ற கண்கள் உடையவரான தம் நாயகியர் மார்பிலே அணிந்திருக்கின்ற களபகஸ்தூரிச் சாந்தமானது கலந்து தனமுகட்டிலே நாயகரின் ஐந்து விரல் நகக்குறிகளும் பதிய வைப்பது முயலடி நகக்குறி என்று சொல் லப்படும்.

6. மூங்கில் இலைக்குறி

221. பொற்புறு முலையிலும், புகழ் நிதம்பத்தும்,
பிற்புறம் தன்னிலும், பிடர் நகத்தினல்
பற்பல எதிர்இலை போல்படுக் குங்குறி
உற்பலம் என்னவே உரைக்க வேண்டுமால்.

அழகு நிறைந்த தனங்களிலும், புகழ் சிறந்த நிதம்பத் தட்டிலும், பின்புறமாகிய முதுகிலும், பிடரிலும் நகத்தினல் இலைக்குறிகள் போலப் பல பல குறிகள் பதித்தல் உற்பலம் என்ற குறியாகும்.

நாயகியும் நகக்குறியும்

222. படுநகக் குறியினல் பயன்யா தென்றிடில்
வடுவினைக் காண்டலும் மணந்து நீங்கினன்
உடனிகழ் கலவியை உணரத் தந்து பின்
அடைவினில் அனுதினம் ஆசை மூட்டுமே.

நகக்குறிகளை, நாயகன் நாயகிபால் பதித்தலால் நாயகிக்கு ஏற்படும் இன்பம் என்ன வென்றல், தன்னைத் தழுவிச் சென் றவன் பிரிந்துபோனபோது, செய்த கலவிச் சிறப்பெல்லாம், அவனில்லாத வேளையிலும் எண்ணச்செய்து, அவன்மீது எந்நாளும் ஆசை கொஞ்சமுங் குறையாது வளர்ந்துகொண்டே யிருக்கும். அதற்கு ஏற்ற அடையாளமாக விளங்குவதால் நகக்குறி மிகவும் பயனுள்ளது என நாயக நாயகியர் அறிதல் வேண்டும்.

23. பற்குறி பதித்தல்

223. ஒத்துடன் நெருங்கி,
மேலொரு சிறந்தவெண்
முத்தெனத் திரண்டு,
முன்முளைத்துச், செவ்விதாய்ப்,
பத்தியில் சிறந்து, ஒளிர்
பல்லினுற் செய்யும்
வித்தகக் குறியினை
விளம்பு வாமரோ.

ஒன்றேடு மற்றென்று பொருந்த இணைந்து, மேலான அமைப்பு உடையதாகச், சிறந்த வெண்முத்துக்களைப் போலத் திரண்டு வரிசையாய் அமைவுற முளைத்துத், தூய்மையாகவும், பத்தி பத்தியாகவும், சிறந்த ஒளி வீசுவதாகும் உள்ள பற்களினுல் நாயகன் அமைக்கும் அரிய குறிகள் பற்றி இனிப் பேசுவோம்.

1. எலிப்பல் குறி

224. மேலிதழ் நெடியநா விழிஇம் மூன்றன்றிப்
பாலுயர் சும்பனத் தானம் பற்குறிக்கு
ஏலவே ஒத்திடும் இதழ் சிவப்புற
வாலிய பற்குறி வகுக்கின் மூஷிகம்.

மேலிதழ், நீண்ட நாக்கு, கண், இம் மூன்றும் நீங்கலாகப் பிற சும்பனத் தானங்கள் பற்குறி பதிப்பதற்கும் ஏற்ற தானங்கள் ஆகும் என்பர். அவற்றுள் கீழ் அதரத்திலே அது சிவக்குமாறு விளக்கமுறப் பற்குறி பதித்தல் எலிப்பல் குறியாகும்.

2. மறைந்த பல்

225. ஓங்கிய கபோலத்தும் உதட்டந் தன்னிலும்
தாங்கிய பற்குறி தைத்தல் இன்றியே
வீங்கியே வழுத்திடு குறிக்கு மேவுபேர்
ஆங்கு அனுச் சூனகம் என்னல் ஆகுமால்.

உயர்ந்த கன்னங்களிலும், கீழ் உதட்டிலும், வடுப்பட்டுத் தெரியாதவாறு பற்குறி பதிப்பது மறைந்த பற்குறி (அனுச் சூனகம்) எனப்படும்.

3. பவளம் 4. துளி

226. பல்லொடும் இதழ் கபோலத்தில் பாய்குறி
எல்லையில் பவளமாய் மணி ஒன் ருகுமால்;
புல்லிய அதரத்தில் மணிப்பல் தைத்திடும்
மெல்லிய குறியினை விந்து என்று ஓதுவர்.

கன்னங்களில் பல்லும் இதழும் பொருந்தப் பதிப்பது பவளமணிப் பற்குறியாகும். உதட்டில் மணிப்பல் தைக்க இடுகின்ற மென்மையான பற்குறி 'விந்து', அதாவது 'துளி' என்னும் பற்குறியாகும்.

5. மணி பிந்து மாலை

227. பற்பல பற்படப் பகர் கைம் மூலத்தும்,
விற்படு நுதலினும், விளங்கும் மார்பினும்,

பொற்புறு தொடையினும் பொருந்தத்
[தைத்தடும்
அற்புதக்குறி பிந்து மாலை யாகுமே.

தோள், நெற்றி, மார்பு, ஆகிய இவ்விடங்களிலும் அழகமைந்த தொடைகளிலும் நகமுனைகள் அழுந்தும்படியாகப் பற்குறி பதித்தல் மணிபிந்து மாலை எனப்படும்.

6. கோலச் சார்வம்

228. குன்றென உயரிய கொங்கை மீதுற
வென்றி வேள் விசயங்கள் வேட்டல் என்னவே
ஒன்றிய பற்குறி ஒழுங்குறப் பட்டிடல்
பன்றியின் சுவை எனப் பகரப் பட்டதே.

குன்றுபோல உயர்ந்த கொங்கைகள் கிளர்ச்சியுற்றுப் புளகிக்கும்படியாக, வெற்றி வேளான மதனனின் விஜயங்களை விரும்புவது போலப், பற்குறிகளை நெருக்கமாகவும் ஒழுங்காகவும் பதித்தல், பன்றிப் பற்குறியாகும்.

பற்குறியின் பயன்

229. இயல்பல விடுவிடு தூர்த்தா என்று இணைக்
கயல்புரைக் கண்ணினுள் கையிற் றள்ளியே
அயர்வறு சீர்க்காரம் அரும்பச் செய்திடில்
மயலுறு காமத்தை வளர்க்கும் என்பவே.

'தூர்த்தா! உனக்கு இது தன்மையன்று; என்னை விட்டு விடு' என்று கூறி, அவனைத் தன் கையால் தள்ளியவளாக மதன சீர்க்காரம் அரும்புமாறு நாயகியானவள் சொல்வாளானல், பற்குறி பதித்தல், ஒருவர்பால் ஒருவர் மயக்கங் கொள்ளும் இச்சையை வளர்க்கும் என்பார்கள்.

24. தாடன வகைகள்

230. கங்குலைப் போல்இருள் மலிந்த கூந்தலார்
இங்கிதக் கலவியில் இதத்த பற்குறி
தங்குறும் இயல்பல சாற்றினேம்; இனிச்
செங்கையின் தாடனத் திறத்தைக் கூறுவாம்.

நள்ளிருளைப் போன்று கருத்து அடர்ந்த கூந்தலுடையாரான நாயகியருடன், நாயகர், இங்கிதம் அறிந்து செய்யும் சேர்க்கையிலே, நாயகியருக்கு இன்பந் தரும் பற்குறி பதிக்கும் இயல்புகள் பலவும் சொன்னேம்; இனிச் செங்கையினுல் மெல்லவும், ஓசை யெழவும் தட்டும் தாடன இயல்புகளைக் கூறுவோம்.

நால்வகைத் தாடனங்கள்

231. தாடனம் நால் விதம்;
அதன்பேர், சங்கோசம், பக்கத்தம்,
பீடு பிர சுரிதகம், பின்
பெருமுட்டி; இவை இயம்பில்,
கூடுவிரல் கைம்மடித்தல்,
குட்டுதல், அகங்கையால்
பாடுறமெய் தட்டுதல், பையக்
குத்தல் எனப் பகர்வார்.

தாடனம் நான்கு வகையாகச் செய்யப்படுவதாகும்; அவை:—கைவிரல்களைக் குவித்துத் தட்டுதல் (1), குட்டுதல் (2), உள்ளங் கையால் தட்டுதல் (3), பையக் குத்துதல் (4) என்பவையாகும். இவை, முறையே சங்சோசம், பக்கத்தம், பிரசுரிதகம், முட்டி எனப்படும்.

மற்றும் நால்வகை

232. இன்னும் நால்வகை உளதாம்
எழிற் கீலம், கத்தரிகை,
மன்னிய சந்தங்கிசம், பின்
வரும் வித்தை; இவை கூடச்
சொன்னவகைக் தாடனம் எண்
வகையாகும்; அவை தொகுத்து
நன்னுதலார் அங்கத்தில் உற
இயற்றும் இடம் நவில்வாம்.

மேற்சொன்ன நான்கு வகைத் தாடனங்களன்றியும் வேறு வகை நான்கும் உள்ளன; அவை: கீலம், கத்தரிகை, சந்தங்கிசம், வித்தை என்பவை. அதாவது, ஆப்பு, கத்தரிக்கோல், தமருசி, இடுக்கி போன்ற தாடன வகைகள். ஆகத் தாடனம் எட்டு வகையாகும். இனி, அவற்றைத் தத்தம் நாயகியின் மேனி உறுப்புக்களில் இயற்றும் இடங்கள் பற்றிச் சொல்வோம்.

தாடனம் இயற்றும் இடங்கள்

233. ஓங்குமுலை, நடு உரத்தில்,
உச்சியில், நெற்றியில், கதுப்பில்,
வீங்கியபொன் சகனத்தில்,
மென்புறத்தில், பிற்சுவலில்,

தாங்கும் இணைப் பொற் குறங்கில்
தகுந்தொழில், அத்தலம் அறிந்து
பாங்கு பெறத் தானியற்றல்
அவளியற்றல் பாராட்டே.

மதர்த்த கொங்கைகள், நடு மார்பு, உச்சி, நெற்றி, கன்னங்கள், அழகிய சகனம், முதுகு, தொடைகள் ஆகிய இவ் வெட்டுத் தானங்களுள் அவரவர் அந்தந்தத் தாடனத்திற்கு ஏற்ற இடங்களறிந்து செய்தல் வேண்டும். நாயகன் நாயகியினிடமும், மீண்டும் அவள் தன் நாயகனிடமும் தாடனங்கள் செய்து இன்புறுதல் வேண்டும்.

உச்சித் தாடனம்

234. சுள்ளென முள் ளெயிறு தைக்கச்
சோதியுறு உகிர் தைக்க
ஒள்ளிய தாடனம் உறைக்க
உற்றெழும்புஞ் சீர்க்காரம்;
தெள்ளிய வேல் விழியாள்தன்
சீர்க்காரம் எழும்பு தொறும்
வள்ளலவன் குவித்த கரம்
வனிதை தலைக் கணிந்திடுவான்.

'சுள்' என்று முள் எயிறு தைக்க; ஒளி வீசுகிற நகக் குறிகள் பதிய; ஒள்ளிய தாடனங்கள் ஓசையெழ; அதனால், நாயகிக்கு மதன சீர்க்காரம் எழும்பும்; அப்படிச் சீர்க்காரம் என்னும் களிப்புக் குரல் நாயகியிடம் தோன்றும்போதெல்லாம், நாயகன், தன் குவிந்த செங்கையால் நாயகியின் உச்சியில் மெல்லெனத் தாடனம் செய்தல் வேண்டும்.

தாடனமும் இடமும்

235. குட்டல் அம்பொன் மார்பகத்துக்,
குவித்த கரம் தலைமீதில்,
தட்டு தல்பின் சகனத்தில்,
சடக்கெனக் குத்து தல் முதுகில்,
ஓட்டிய கீலம் கவுளில்,
ஊறு பிடரில் கத்தரிகை,
கொட்டிய வித்தை குறங்கில்,
குலவு சந்தங் கிசம் நுதலில்.

மார்பகத்தில் குட்டுதலும், உச்சியில் கரங் குவித்துத் தட்டுதலும், சகனத்தில் அகங்கையால் தட்டுதலும், முதுகில் சடக்கெனக் குத்துதலும், கன்னத்தில் கீலமும், பிடரியில் கத்தரிகையும், தொடையில் வித்தையும், நெற்றியில் சந்தங்கிசமும் ஆக எட்டுத் தாடனங்களும் எட்டு இடத்தில் செய்வதற்கு உரியனவாகும்.

25. அங்குலி யோகம்

236. இத்தனையும் பொதுவாகும்
இலகிய தென் தமிழ் நாட்டு
முத்த நகையார் உரத்து
முதுசிலையைக் கைப்பற்றிச்
சத்த முறப் புடைக்கினன்றி
மதனசலம் பெருகாதால்;
அந்த விரற் புணர்ச்சி இனி
ஆசரிக்கும் இயல்பு உரைப்பாம்.

இந்தத் தாடன விதிகள் எல்லா மாதர்க்கும் பொதுவாகும். ஆயினும், பாண்டி நாட்டுப் பெண்கள் மனவலிமை மிகுதியும் உடையவராதலால் எளிதில் மனம் இசையார். அவர்க்கு இச்சை மிகுந்து மதனசலம் பெருக வேண்டுமானல் நாயகன் சத்தம் எழப் பலமாக மார்பிலே தாடனம் செய்தல் வேண்டும்.

இனி விரல் புணர்ச்சி நடத்தும் இயல்புகள் சொல்வோம்.

அங்குலி யோகம்

237. ஈரிரண் டியற்கை யாகும்
ஏந்திழை யார்க்குக் குய்யம்
வாரிசம் போல்வ தொன்று,
வளர்பிறை உறழ்வ தொன்று,

ஏர்பெற மடிந்த தொன்று,
எருமைநாச் சிவணும் ஒன்று,
கூர்தகு விசாலம் ஒன்றுக்கு
ஒன்றவை குறைந் திருக்கும்.

பெண்களுடைய நிதம்பம் அவற்றின் விசாலத்தை ஒட்டி நான்கு வகையாகும்; அவை:—

(1) தாமரை மொட்டுப்போலக் குவிந்தது, (2) வளர் பிறை போல வட்டமானது, (3) மடிப்பாகச் சேர்ந்திருப்பது, (4) எருமை நாக்குப்போலத் தடித்தது என்பன; இவை விசாலத்தில் ஒன்றுக்கு ஒன்று முறையே குறைந்திருக்கும்.

1. பெண் லிங்கம்

238. முன்னமே சொன்ன குய்யம்
உத்தமம்; மற்றை மூன்றும்
அன்னதில் ஒன்றுக்கு ஒன்றங்கு
அடைவினில் குறைந் திருக்கும்
சொன்ன ஆண்குறிபோல் உள்ளே
தோன்றிடும் நாடி ஒன்றங்கு
இன்னதை விரலாற் சுற்ற
இழிந்திடும் காம வெள்ளம்.

நால்வகை நிதம்பத்திலும் முதலில் சொன்ன தாமரை மொட்டுப் போன்றது உத்தமமாகும். மற்றைய மூன்றும் முறையே ஒன்றினும் மற்றொன்று தாழ்வானதாகும்.

நிதம்பத்தின் உட்புறம் ஆண்குறிபோல ஒரு நாடி விளங்கும். அதை விரலாற் சுற்றினல் நாயகிக்குக் காமநீர் வெள்ளம் போலப் பெருகும் என்பர்.

2. காமன் கவிகை

239. மானிடர் நாசி போல
வடிவதாய் புழைக்கை மேலாய்
ஊனுறக் குத்தாக் காதின்
சோணைபோல் உறமெத் தென்று
கூனுறு கருவி எம்பூ
அகவிதழ்க் கவினே போன்று
தானுயர் மணியைக் காமன்
கவிகையாச் சாற்று வாரே.

மானிடரின் நாசியைப் போன்ற வடிவினை உடையதாகப், பெண்குறித் துவாரத்தின் மேலாகக், குத்துதல் இல்லாத காதின் சோணைபோல மெத்தென விளங்குவதாகவும், அழகமைந்த நீலோற் பல மலரின் உள் இதழின் அழகினைப் போன்றதாகவும், உயர்ந்து விளங்குகின்ற மணியினைக் காமன் கவிகை என்று சொல்வார்கள்.

3. சந்திர நாடி

240. குறைவறச் சுரத நீரைக்
குதிப்பித்துச் சுகத்தை நல்கும்
நிறைமதிப் பெயரி னுலே
நிகழ்த்தும் ஓர்நாடி காமன்
உறையுளின் உள்ளே கிட்டி
நுண்ணிதாய் உறையும் என்ன
அறை தரும் தான மூன்றும்
காமன் அத் தாணி யாமே.

குறைவென்பதே இல்லாதபடி சுரத நீரைக் குதிப்பித்து வரச் செய்து, சேர்பவர்க்கு இன்பம் தருகின்றதாகவும், முழு நிலவான சந்திரனின் பெயரினை உடையதாகவும் விளங்கும் ஒரு நாடியானது, பெண் குறியினுள் அருகாமையிலேயே நுண்ணிதாக அமைந்திருக்கிறது. இதனோடு முன் கூறிய (1) பெண் லிங்கம் (2) காமன் கவிகை இரண்டும் சேர்த்தால் வரும் மூன்று தானங்களையும் காமன் கொலு மண்டபம் என்பர்.

அங்குலியோக வகைகள்

241. மூவகைத் தானம் தன்னில்
கரிகரம் முதலாய் ஓதும்
தாவரும் விரலி னாலே
தடவி மர்த்தனங்கள் செய்ய
மேவும் அங்குலிக ளுக்கு
வேறு வேறுள்ள பேரும்
பாவரும் தொழில்கள் தாமும்
பண்புறப் பகரு வோமே.

இவ்வாறு, கூறிய காமனின் கொலு மண்டபமாகிய மூன்று இடங்களிலும், விரலால் தடவி மர்த்தனம் செய்து நிகழ்த்தும் கரிகரம் முதலாகச் சொல்லப்பட்ட அங்குலி களுக்கு வேறு வேறு உள்ள பேரும், தொழில் முறைகளும் இனிப் பண்போடு கூறுவோம்.

1. கரிகரம்

242. அனுமிகை யோடு சேரத்
தர்ச்சனி தன்னைக் கூட்டி
வினாடு விரல்மேல் வைத்து
வேறுள விரல் மடக்கி

மனுவரை யல்கு லாரை
மருவும் அங்குலி பேதத்தைக்
கனுவிலும் வெகுளி தாராக்
கரிகரம் என்ன லாமே.

மோதிர விரலுடன் சேருமாறு சுட்டு விரலைக் கூட்டி இவ் விரண்டிற்கும் மேலாக நடுவிரலை ஏற்றி, மற்றைய விரல்களை மடக்கிக் கொண்டு, நாயகியின் அல்குற் புழையினுள்ளே நாயகனானவன் இயற்றும் தொழிலுக்குக் கனவில் கூடச் சினம் எழுவதற்கு இடம் தராது மகிழ்ச்சியே விளைக்கும் 'கரிகரம்' என்று பெயர் (கரிகரம் – யானைக் கை).

2. காமாயுதம்

243. மத்திம விரலின் மேலே
மருவு தர்ச்சனியை ஏற்றி
ஒத்த அங்குட்டம் தன்னை
உறுதியாய் நடுவே கூட்டிப்
பத்தியின் விரல் இரண்டும்
பண்புற மடக்கிக் கோடல்
சித்தசன் உவந்த காமா
யுதம் எனச் செப்புவாரே.

நாயகன் தன் மத்திம விரலாகிய நடுவிரலின் மேலே சேருமாறு சுட்டு விரலை ஏற்றிப், பெருவிரலை அவற்றின் நடுவே உறுதியாகக் கூட்டிப், பிற இரண்டு விரல்களையும் மடக்கிக் கொண்டு முன்போன்றே செய்யும் தொழிலுக்குக் காமாயுதம் என்று சொல்வார்கள்.

3. காம மருந்து

244. நடுவிரல் அதனைச் சுட்டு
விரலின் மேல் நகத்தில் ஏற்றி
வடிவுற உள்ளே சற்று
வளைவுறப் பிறைபோல் ஆக்கி
உடனுறு விரல்கள் மூன்றும்
உள்ளுற மடக்கி கோடல்
படைமதன் உவந்த காம
மருந்தெனச் செப்பு வாரே.

நடுவிரலினைச் சுட்டு விரலின்மேல் நகத்திலே ஏற்றி, பிறை போன்று வடிவு பெறுமாறு உள்ளே சற்று வளைத்துப், பிற விரல்கள் மூன்றையும் உட்புறமாக மடக்கிக் கொண்டு செய்யும் கர லீலைக்குக் காமன் மருந்து என்று சொல்வார்கள்.

4. மதன அங்குசம் 5. மன்மத பாகை

245. மிகுநடு விரலி னேடே
அனமிகை விரலும் கூட்டித்
தகு விரல் மற்றை மூன்றும்
தணியவே மடக்கிக் கோடல்
சுக மத னுங்குசப் பேர்,
தர்ச்சனி தன்னைத் தூய
வகை நடு விரலிற் கூட்டின்
மன்மத பதாகை யாமே.

நீண்ட நடு விரலுடன், மோதிர விரலையும் கூட்டிப் பிற மூன்று விரல்களையும் தணியுமாறு மடக்கிக் கொண்டு, அங்குலி

யோகம் செய்வது மதன அங்குசம் என்பதாகும். (அங்குசம் – யானையை அடக்கும் கருவி.)

சுட்டு விரலை நடு விரலோடு சேர்த்துச்செய்வது மன்மத பதாகை ஆகும். (பதாகை – வெற்றிக்கொடி.)

6. குதிரைச்சவுக்கு (தோத்திரம்)

246. தர்ச்சனி என்னும் தூய
தனிவிரல் அதனை நீட்டி
உச்சமாய் உயரப் பண்ணி
ஒழிந்திடும் விரல்கள் நான்கும்,
இச்சையால் மடக்கிக் கொள்ளும்
இயற்கை மன்மதனுர் ஏறும்
அச்சுவம் அடிக்குங் கோலின்
பெயரதாய் அறைவர் தாமே.

சுட்டு விரலை மாத்திரம் நீட்டி உயர்த்தி, மற்றைய நான்கு விரல்களையும் ஆசையுடன் மடக்கிக் கொண்டு இயற்றும் அங்குலிக்கு (தோத்திரம்) மன்மதன் ஏறும் குதிரையை அடிக்கும் சவுக்கு என்று பெயர் கூறுவர்.

அங்குலி யோகப் பயன்

247. இத்துணை விரற் புணர்ச்சி
இயற்றுவது என்னே என்னில்,
மத்தராய் அறிவி லாதார்
மாதரை மணக்கும் காலை
ஒத்துடன் போகம் நீக்கும்
உற்பனம் இதனுல் அன்றிச்

சித்தியாது என்ப தெண்ணி
அவர்க்கிது செப்பி னேமே.

'இப்படியெல்லாம் அங்குலியோகம் இயற்றுவது ஏனோ?' என்றால், காம நூலறிவு இல்லாத ஒரு நாயகன் தன் நாயகியுடன் கூடும்போது, ஒத்த போகம் விடும்படியாக நடந்து கொள்ள, இந்த அங்குலி யோகமன்றிப் பிற தொழில்கள் உதவாது என்பதை எண்ணி, அத்தகையவர்க்கே இது எம்மால் சிறப்பாகச் சொல்லப்பட்டது என்க. (அங்குலியோகம்-விரல்களை இணைத்துச் செய்யும் தொழில்.)

26. ஒத்த போகம்

248. கூடிய மகளிர் தம்மைக்
குணம் கொண்டு கலவியாடி
நீடுறத் தனது போகம்
நிறுத்தி அங்கவர் போகத்தை
ஊடுற முன்னே யாக
ஒத்ததாப் போக்கு வானேல்
ஆடவர் திலகன் என்ன
அறைந்திடும் அவனை ஞாலம்.

தன்னோடு கூடுகின்ற நாயகியின் குணபாவங்களை அறிந்து, அதற்கேற்ப மதனநூல் விதித்தவாறு சேர்க்கை நடத்தித், தன்னுடைய போக காலத்தை நாயகியின் போக காலத்திலும் நீடித்திருக்குமாறு நிறுத்தி, அவள் போகத்திற்கு ஒத்ததாகவோ, அல்லது அவளுக்குப் பின்னரோ தன் போகத்தை நாயகனானவன் போக்குவானாகில், அவனையே ஆடவர் திலகன் என்று உலகம் சொல்லும்.

249. மிக்க தன் சுகத்தைப் பார்த்து
மெல்லியலார்க்கு முந்திக்
குக்குடம் போலப் போகம்
போக்கிடும் குறியி லானைத்

தக்க மென் கொங்கை மாதர்
தழுவிட அருவ ருத்து
மக்களில் சுகவி ரோத
அலியென எண்ணு வாரே.

நாயகனுனவன், தன் சுகத்தையே பெரிதாகப் பாவித்தவனுகத் தன் நாயகிக்கு முன், கோழிச் சேவலைப் போலத் தன் போகத்தை முந்த விட்டு விடுகின்ற லட்சியமற்றவன் ஆனுல், தகுதியான மென் கொங்கைகளையுடைய நாயகியானவள், அவனைத் தழுவுவதற்கே அருவருத்து, 'மக்களில் ஆண் பெண் சேர்க்கை இன்பத்திற்கே தகுதியற்ற அலி எனக் கருதி, வெறுத்து அவனை ஒதுக்கி விடுவாள்.

250. புல்லிய கணவன் போகம்

போக்குமுன் மடந்தை போகம்
மெல்லவே முந்தி விட்டால்
விரும்பிமுன் ஆசை வைத்த
வல்லி நல்லாரைக் கூடி
மணப்பதாய் மனம் பாவிக்க
ஒல்லையில் அவள் போகத்தோடு
ஒத்து அவன் போகம் கூடும்.

தன் போகத்துக்குத் தன் நாயகியின் போகமானது முந்தி விடுவது போலத் தோன்றினுல், அப்போது அங் நாயகனுனவன், தான் மிகவும் விரும்பி இவளை மணப்பதற்கு முன்னர், மனத்தில் காதலித்திருந்த பெண் இவளே எனக் கருதி, ஆசையோடு கூடினுல், அந்த அளவிலேயே, இவனும் அவளோடு ஒத்துப் போகம் கூடுகின்றவனுய் விடுவான்; அதாவது இருவரும் ஒத்த போகம் உடையவராய் விடுவர்.

251. கூடிய மாதர் போகம்

விடாது எனக் குறித்துக் கண்ட
ஆடவர் தாமும் முந்தாது
அவளுடன் போக்க வேண்டில்
கோடுறு கொம்பி லேறி
அசைந்திடும் குரங்கே என்னப்
பாடக வடிவி னுரை
மனத்தினில் பாவி யாரே.

தன்னேடு சேருகின்ற நாயகியானவள், நீடித்த காலப் போகம் உடையவள் எனக் குறிப்பால் உணர்ந்தால், நாயகனுனவன், தானும் முந்த விடாது, அவளுடன் சமபோகம் விட வேண்டுமானுல், தான் அங் நாயகியுடன் சேருகின்றதாகவே நினையாமல், மரத்தின் நுனிக் கிளையில் ஏறி அசைந்தாடும் குரங்கு எவ்வாறு அதுபற்றி எள்ளளவும் நினையாதிருக்குமோ அதுபோல, அந்த நினைவே அற்றவனுக இருந்து கூடினுல் இருவருக்கும் சமபோகக் கலவியானது சித்திக்கும்.

252. கூட்டிடும் மருந்தி னுலும்,

குய்யத்தின் உள்ளே பூசும்
தீட்டியலே பனத்தி னுலும்,
கலவியின் திறத்தி னுலும்,
ஈட்டிய தம்பனத்தி னுலும்
ஏந்திழை போகத் தோடே
கூட்டிடப் புணரும் வண்ணம்
குறித்தவன் கொழுநன் அம்மா.

மருந்துச் சரக்குகளைக் கூட்டிக் குறியிலே பூசிக்கொள்வதாலும், நிதம்பத்தினுள்ளே பூசும் லேபன (பூச்சு) மருந்துகளினு

லும், கலவி செய்யும் முறை அறிந்த திறமையினலும், போகத்தை விரைவிலே விடாது கட்டுப்படுத்தக் கூடிய தம்பன (கட்டுப்படுத்தும்) முறைகளினலும், நாயகியின் போகத்தோடே ஒத்த போகம் விடும்படியாகத் தன்னை ஆக்கிக் கொள்ளும் நாயகனே, தகுதியான கணவன் ஆவான்.

253. எண்ணிய சமரத இன்பம் இன்றியே
பண்ணிய கலவிகள் பசு முயக்கமாம்
புண்ணிய அங்குலி மணம் புகன்றனம்;
மண்ணினில் கரணம் மேல் வகுக்க லாகுமால்.

சமரத போகம் துய்த்துப் பெறுகின்ற இன்பம் அன்றி நாயக நாயகியர் தம்முள் வெறும் இச்சை வசப்பட்டுச் சேரும் சேர்க்கை எல்லாம் பசுப்புணர்ச்சி போன்ற விலங்குச் சேர்க்கையே யாகும்.

இவ்வாறு நிகழாமல் சமபோகம் சித்திக்க உதவும், புறத் தொழில் ஆகிய அங்குலி யோகம் இதுவரை சொன்னேம். இனிமேல், அவரவர்க்கேற்ற கரணவகைகளை வகுத்து உரைப் போம்; (சமரத போகம் – ஒத்த கலவி இன்பம்.)

27. அகத் தொழில்கள்

254. ஐங்கணை அறுத்து விட்ட
அடலினை ஆற்ருது ஈசன்
தங்கிய யோகம் நீங்கித்
தன் உடல் பாதியாக
வெங்கடுங் காமத் தீயால்
உடல் வெடித் திடப் போர் செய்த
திங்கள் வெண் குடையினுன் தன்
சேவடி சென்னி சேர்ப்பாம்.

காமத்தை வெறுத்து உக்கிரமாக யோகம் செய்த ஈசனைச் சினந்து, அவன்மேல் ஐங்கணைகளை எய்து, மன்மதன் போரிட, அந்த மலர்க்கணைகளின் வன்மையை ஆற்ருத ஈசன், தானிருந்த யோக நிலையினின்றும் நீங்கிக் காமத் தீயால் உடல் பாதியாயி ஞன். இவ்வாறு, முன்னுள் போரிட்டு வெற்றி கொண்ட, திங் களை வெண்கொற்றக் குடையாக உடைய மதனனின் திருவடி களை நாமும் சிரமேற் கொள்ளுவோம்.

255. இன்னணம் புறத்தொழில் இயல்பெலாம் செய
மன்னிய காமநீர் மல்கும் போதினில்
அன்னன குய்யத்தின் அளவைக்கு ஏய்ந்திடும்
என்னலாம் கலவியே கரணம் என்பரால்.

இதுவரை கூறியவைகளை மனத்திற் கொண்டு நாயகன் நாயகியின்பால் புறத்தொழில்களின் வகையெல்லாம் செய்ய அவளுக்குக் காம நீர் பெருகும்; அப்போது அவள் கலவிக்குத் தயாராய் விட்டாள் என்று அறிந்து, நாயகன் அவள் மிதம்பத்தின் அளவைக் கேற்பக் கூடி அவளை மகிழ்விக்கத் தக்க நிலை மாற்றங்களையே கரணம் என்று பெரியோர் கூறுவர்.

பொது விதி

256. குதிகொளும் காம நீரால்
குய்யமே விசால மாயின்
இதமுறு தொடை நெருக்கி
இறுக்கிடு கரணம் செய்வர்;
அதிவித நெகிழ்ச்சி யின்றி
அப்புழை சிறிய தாகில்
விதமுறு தொடை இரண்டும்
விரித்திடு கரணம் செய்வர்.

குதித்துப் பெருகும் காம நீரினால், பெண்குறிப் புழையானது விரிவடையுமானால், நாயகியினுடைய தொடைகளை இறுக்கி நெருக்கிக் கூடும் கரணத்தில் இருந்து சேர்தல் வேண்டும். அதிகமாக விரிவு அடையாமல் அப்புழையானது சிறியதா யிருக்குமானால், நாயகியின் தொடைகளை அகல விரித்துக் கூடும் கரணத்தில் இருந்து கூடவேண்டும்.

257. அணைபவர் நீசமாயின்
அல்குலை உயர்த்தி ஆரப்
புணருவன்; உச்ச மாயின்
பொற்குரங்கு இறுக்கிக் குய்யம்

தணியவே உயர்த்திப் பக்கம்.
சரித்திடப் புணர்வன்; ஒக்கின்
கணவனோடு அணங்கனார்உள்
கனிந்து ஒன்றப் புணர்வர்தாமே.

கலவியில் ஈடுபடுகின்றவர் நீசப் புணர்ச்சி வகையைச் சேர்ந்தவராயின், நாயகன் நாயகியின் அல்குலை உயர்த்தி வைத்துக்கொண்டு சேரவேண்டும்.

உச்சப் புணர்ச்சியானால், தொடைகளை இறுக்கிப் பெண் குறியைத் தாழ்வாக வைத்துக் கொண்டு இருவரும் ஒருக் கணித்தவாறு கூட வேண்டும்.

சமமான புணர்ச்சியானால், இருவரும் உள்ளங் கனிந்து இருவர் உடலும் ஒன்று எனுமாறு சேர்ந்து மகிழலாம்.

[நீசம், உச்சம், சமம் என்ற விவரம் முன்னர் கூறப்பட்டது.]

கரண பேதவகை

258. முற்படுங் கரணம் ஐந்து;
முறை படும் பேதம் கூறில்,
பொற்பின் உத்தானிதம், சீர்
புரி திரியக்கு, இவற்றின்
பிற்படு ஆசிதகத் தோடு,
பீடுறு ஸ்திதமும் மற்றும்
சொற்படா ன்மிதமும் என்னச்
சொற்றிடும் மதன நூலே.

கரணம் ஐந்து வகையாகும்; அவற்றின் முறையான வகைகளைக் கூறுவோமானால், அழகிய உத்தானிதம், சிறந்த திரியக்கு, இவற்றின் பின்னான ஆசிதகம், ஸ்திதம், ஆன்மிதம் என ஐந்து வகைப்படும்.

28. உத்தானித முறைகள்

மல்லார்ந்த நிலைச் சேர்க்கைகள்

259. மல்லார் உத்தா னிதத்தின்
வருபேதம் மூவொன் பானில்
சொல்லார்ந்த சமத்தி ரண்டு;
தொடர்ந்த நீசத்தின் மூன்று;
நல்லார் சொல் உச்சம் தன்னில்
நான்கு, இவை அடைவே கொள்ள;
அல்லாத கரணம் மற்றை
அனைத்திற்கும் பொதுவாய் நிற்கும்.

நாயகியானவள் மல்லார்ந்து படுத்திருக்கச், செய்யும் உத்தானித கரணத்தின் பேதங்கள் இருபத்தேழு ஆகும்; அவை:—

சமப் புணர்ச்சி உடையவர்க்கு	2
நீசப் புணர்ச்சி உடையவர்க்கு	3
உச்சப் புணர்ச்சி உடையவர்க்கு	4
அனைவருக்கும் பொதுவானது	18

இவற்றின் பேத வகைகளின் முறைகள் இனிவரும் செய்யுட்களில் காண்க. இக்கரணம் ஐந்திற்கும் மொத்த லீலைகள் நாற்பது ஆகும்.

சமப்புணர்ச்சிக்குறிய சிறப்பு வகைகள் : 2

1. கிராமியம். 2. நாகரம்.

260. காரிகை கவான் இரண்டும்
கணவன் தன் கவானில் ஏறும்
பேருறு கரணம் தன்னைக்
கிராமியம் என்று பேசும்;
ஊருவில் ஊரு ஏறுது
உறுதொடை அகற்று வாளேல்
ஏர்பெறு நாக ரத்தின்
கரணமென்று இயம்பு வாரே.

நாயகியானவள், தன் இரு தொடைகளையும் தன் நாயகனின் தொடைகள்மேல் ஏற்றி வைத்துக்கொண்டு, மேலிருந்து கூடுதல் கிராமியம் என்று சொல்லப்படும். (1)

அவ்வாறு தொடைகளோடு தொடைகள் பொருந்தாமல் அகற்றி வைத்துச் சேர்வாளானால் அது நாகரம் எனப் படும். (2).

நீசப்புணர்ச்சிக்குறிய சிறப்பு வகைகள் : 3

3. உற்புல்லிதம்.

261. கிளர அண்ணாந்து பாயில்
கிடப்பவள் கை இரண்டும்
வளரும் பின் முட்டி தாங்க
மகிழ்நன் பின் புறத்தில் தன்கால்
இளகிய குதியில் ஏற்றி
இணைக் கொங்கை பற்றிச் சேரும்

உளம் மகிழ் கரணம் உற்புல்
விதமென உரைக்கும் அன்றே.

நாயகியானவள் பாயிலே அண்ணாந்து படுத்துக்கொண்டு, தன் இரு கைகளாலும் தன்னுடைய பின் பாகத்தைத் தாங்கி உயர்த்தித், தன் குதிகால்களை நாயகனுடைய பின்புறமாகச் சேர்த்து வைத்துக்கொள்ள, அதன் நடுவே நாயகன் தன் குதிகால் தன் பிரஷ்டத்திலே படும்படியாக மண்டியிட்டு அமர்ந்து, நாயகியின் இரு தனங்களையும் பற்றிப்பி டித்துக் கொண்டே சேர்தல் உற்புல்வித கரணமாகும்.

4. சிரும்பிதம்

262. மங்கைதன் தாளி ரண்டும்
வரிக் கோரைக் கீற்றுப் போல
அங்கவை யகல நீட்டி
அகல்வடி வுயர்த்தி மற்றும்
பங்கயம் மலர்ந்த தென்னப்
பையரவு அல்குல் விள்ளத்
தங்குறு முயக்கம் மேவும்
சிரும்பித கரணம் தானே

நாயகியானவள் தன் இரண்டு கால்களையும் வரிக்கோரை பிளந்தாற்போல அகன்றிருக்குமாறு விரித்து நீட்டித், தன் உடலை மேலெழுப்பித், தாமரை மலர்ந்தது போலத் தன் குறி யானது விள்ளும்படியாக உயர்த்திக்கொள்ள, நாயகன் சேர் தல் சிரும்பித கரணம் எனப்படும்.

5. இந்திராணிகம்

263. கலப்பவன் முழந்தாள் ஒன்றில்
கரிகை கவான் இரண்டும்

நலப்படப் பரிவோடு ஏற்றி
நன் முழந்தாள் இரண்டும்
புலப்பட அங்கை மூலத்து
அணைத்து அவன் புணர்வா னுகில்
சொலப்படும் இந்திரா ணிகத்தின்
கரணமாச் சொல்லு வாரே

நாயகனுடைய ஒரு முழந்தாளின் மேல், நாயகியின் இரு தொடைகளையும் ஏற்றி வைத்துக் கொண்டும், அவளுடைய முழந்தாள்கள் இரண்டையும் அவனுடைய உள்ளங் கைகளால் அணைத்துக் கொண்டும் சேர்வது இந்திராணிக கரணம் ஆகும்.

உச்சப் புணர்ச்சிக்குறிய சிறப்புவகைகள்: 4

6. உத்தான சம்புடம்

264. மாதர் அண்ணாந்து, அங்கம்
தன்னொடு மகிழ்நன் அங்கத்து
ஓதிய உறுப்பெலாம் உற்று
ஒன்றியே கவிழ்ந்து புல்லத்
தீதறு கனிவா யுண்டு
தேய்த்துஅங்கம் அலையச் சேர்தல்
காதல் உற்றிடும் உத்தான
சம்புட கரண மாமே.

நாயகியானவள், தான் மல்லார்ந்து படுத்துக் கொண்டு, நாயகன் தன் உறுப்பெல்லாம் அவள் உறுப்புக்களுடன் ஒன்று படக் கவிழ்ந்து அணைத்துக்கொள்ள இருவரும் இதழமுதம் பருகி, இருவர் அங்கங்களும் ஒன்றோடொன்று இழைந்து அலையும்படியாகச் சேருதல் 'உத்தான சம்புடம்' ஆகும். (சம் புடம்-மூடி யிருக்கும் நிலை).

7. பூற்சம்புடம் (பால்-பக்கம்)

265. முந்துற எடுத்துச் சொன்ன
கரணத்தின் முறை தப்பாமல்,
பைந்தொடி யொடுதான் ஓர்பாய்
ஒருக்கணித் தவளைச் சேரும்
அந்தநற் கரணம் தன்னை
அநங்கநூல் அனைத்தும் வல்லோர்
தந்திடும் ஒரு பக்கத்துச்
சம்புடக் கரணம் என்பர்.

முன் சொன்னது போல, இருவர் உடலும் ஒன்றோடொன்று பொருந்துமாறு தழுவி, நாயகன் நாயகியோடு ஒருக்கணித்துப் படுத்துக்கொண்டு, அவளோடு கூடும் அந்தக் கரணத்தைப் பாற்சம்புடக் கரணம் என்று மதன நூல் கற்றறிந்தோர் கூறுவர்.

8. ஊருபீடிதம் 9. வேஷ்டிதம்

266. மற்றவள் தொடை யிரண்டும்
மகிழ்ந்தணைத்து இறுக்கிச் சேர்தல்
உற்றபீ டிதம் என்றோதும்
கரணமாம்; தொடை இரண்டால்
கற்றடந் தோளான் தன்னைக்
கட்டியே யிறுக்கிச் சேர்தல்
வெற்றிவேல் உலகத் தோர்கள்
வேட்டித கரணம் என்பர்.

நாயகியினுடைய இரண்டு தொடைகளையும் நாயகன் தன்

தொடைகளால் இறுக்கி அணைத்துக்கொண்டே சேர்தல் ஊரு பீடித கரணமாகும். (ஊருபீடிதம்-தொடை நோக அமுத்தல்).

நாயகனுடைய இரு தொடைகளையும் நாயகி தன் தொடைகளால் இறுகக் கட்டி யணைத்துச் சேர்தல் வேஷ்டித கரணம் ஆகும். (வேஷ்டிதம்-பின்னிக் கட்டிக் கொள்ளல்).

• பொதுக்கரணங்கள்

10. பாடவம்

267. இன்னல் உற்று அலைக்கும் போகம்
முந்திடும் என்ன எண்ணித்
தன்னுறு கோசம் முற்றும்
தையலின் குறியில் சேர்த்துப்
பன்னிய மொழிகள் பேசிப்
புறத்தொழில் மிகப் பாராட்டும்
இன்னவ கரணந் தன்னைப்
பாடவம் என்ன லாமே

சேர்க்கைக் காலத்திலே, தன்னுடைய குறியானது உறுத்தும் படியாக அசைத்துப் புணர்ந்தால், தன் போகம் முந்திவிட நேரும் என்பதை நாயகன் தெளிவாக உணர்ந்து, தன் கோசம் முழுமையும் நாயகியின் குறியினுள் பொருந்தச் சேர்த்து, அசையாத நிலையிலிருந்து, சரச வார்த்தைகள் பேசிப், புறத்தொழில்கள் பலவும் செய்து கூடுவது பாடவ கரணம் ஆகும். (பாடவம்-அரிய திறமை).

11. உற்புக்கினம்

268. ஆயிழை தாளி ரண்டும்
அணிபெறக் கூட்டி நீட்டி

வேய்நெடுந் தண்டு போல
மீதுற அவன் எடுப்ப
நாயகன் தலையைக் கையால்
நலம்பெறக் கட்டிச் சேரும்
நேயமாம் கரணம் உற்புக்
கினம் என நிகழ்த்து வாரே.

நாயகியின் இரண்டு கால்களையும் அழகுறச் சேர்த்து நீட்டி, மூங்கில் தண்டுகளைப் போல அவற்றை அவன் மேலே எடுக்க, அவள், நாயகனின் தலையைத் தன் கைகளால் அன்போடு கட்டிக் கொண்டே சேரும் கரணம் 'உற்புக்கின' கரணமாகும்.

12. பாணிபாதம் 13. உரபூடணம்

269. ஒருவர் ஒருவர் முழந்தாளின்
ஊடுபோக்கும் துணைக்கரத் தால்
இருவர் கழுத்தும் நீக்கமற
இறுக அணைத்தல் பணிபாஷம்;
மருவும் அவள் சீர் அடி இரண்டும்
மார்பின் மிதிக்க மகிழ்ந்திருந்தான்
கரபங் கயத்தால் கழுத்தணைத்துக்
கலப்பது உரபூ ஷண மாமே.

நாயகன், தன் கைகளை நாயகியின் முழங்கால்களுக்கு அடியிலும், நாயகி தன் கைகளை நாயகனின் முழங்கால்களுக்கு அடியிலுமாக வைத்துக்கொண்டு, இருவரும் ஒருவர் கழுத்தை மற்றவர் இருக்கமாக அணைத்துக் கொண்டே சேர்வது பாணி பாத கரணம். (பாணி-கை; பாதம்-கால்.)

நாயகி தன் அழகிய இரு பாதங்களையும் தூக்கி நாயகனின் மார்பிலே மிதித்துக் கொள்ள, அதனுல் மகிழ்ந்த நாயகனை

வன் தன் அகங்கையால் அவள் கழுத்தை அணைத்துச் சேர்வது உரபூடண கரணம் ஆகும். (உரபூடணம்-மார்பிற்கு அணியாக அமைவது.)

14. அத்தினி பீடிதம் 15. மதன சிரும்பிதம்

270. அரிவை ஒருதாள் ஓங்க எடுத்து
அணைவான் மார்பில் ஒன்றவைத்து,
மருவி அணைத்துப் புணர்கரணம்
வரும் அத்தினி பீடிதமாகும்;
கரிய குழலாள் முழந்தாள்கள்
கணவன் கழுத்து மீதேற்றிப்
புரியுங் கலவி வருகரணம்
புகலின் மதன சிரும்பிதமே.

நாயகியானவள் தன் ஒரு தாளை உயரே தூக்கி நாயகனின் மார்பிலே பொருந்த வைத்து, அவனை அணைத்துச் சேர்வது 'அத்தினி பீடித' கரணம்.

நாயகி தன் முழந்தாள்களைக் கணவன் கழுத்து மீது ஏற்றி வைத்துக் கொண்டு சேர்தல் மதன சிரும்பித கரணம்.

16. ஊர்த்துவநிபீடிதம்
17. வேணு விதாரிகம் (பிளவுமூங்கில் நிலை)

271. ஒருதாள் கணவன் தோள்ஏற்றி
ஒருதாள் நிலத்து உறநீட்டி
மருவா நிற்கும் கரணப்பேர்
வகுக்கின் ஊர்த்வனி பீடிதமாம்;
திரியத்தாளை முறைமுறையே
தோளில் வைத்தும் நிலம் சேர்த்தும்

பொருந்தும் கரணம் வேணுவிதா
ரிகமே என்னப் புகலுவரால்.

நாயகியானவள் நாயகனது தோளினிடத்தே ஒரு காலை ஏற்றியும், மற்ளெரு காலைத் தரையிலே நீட்டியும் வைத்துக் கொண்டு நாயகனுடன் சேர்தல் ஊர்த்துவமி பீடித கரண மாகும். (ஊர்த்துவமி பீடிதம் - மேலே தூக்கி வைத்து வருத்து வது.)

நாயகி தன் இரண்டு கால்களையும் நாயகன் தோள்களிலும் மீண்டும் நிலத்திலும் மாறி மாறி வைத்துக்கொண்டே சேர்தல் 'வேணு விதாரிகக்' கரணம் ஆகும்.

18. சூலசிதம்

272. வகுத்த தாளில் ஒருதாளை
மகிழ்நன் தாள்கள் இடைப்போக்கி
மிகுத்த எழிலாள் ஒருதாளை
எடுத்துச் சென்னி மேல்வைத்தே
அகத்தில் துனியற் றிவன்மதனென்
றன்பிற் புணரும் கரணப்பேர்
சுகத்தில் அனந்த சுகம் விளைக்கும்
சூலசிதம் என்று ஓதுவரால்.

நாயகனின் இரண்டு தாள்களுக்கும் நடுவிலே நாயகி தன் ஒரு தாளை நீட்டிக்கொண்டு, மற்ளெரு தாளை அவனது தலை மேல் வைத்துத் தன் உள்ளத்தில் தன் நாயகனை 'இவனே மன்மதன்' என்று ஆசையுடன் எண்ணியவளாகச் சேர்வது மிகுந்த இன்பம் தரும் சூலசிதம் என்ற கரணம் ஆகும்.

19. கர்க்கடகம் 20. பிரேங்கா

273. பாவை அனையாள் தாளிரண்டும்
பைய அவன் நாபியின் மிதிப்ப;
மேவு கொழுநன் தானிருந்து
மேவுற்றிடல் கர்க்கட கரணம்;
கோவை இதழாள் தாள் இரண்டும்
கொழுந்தோ ரணக்கால் போல் நிறுத்த
ஓவாது அலைத்துக் குறிவிள்ள
ஒன்றின் அதுவே பிரேங்காவாம்.

சித்திரப் பாவை போன்ற வனப்புமிக்க நாயகியானவள், மெல்லெனத் தன் நாயகனின் நாபியில் தன் பாதங்களால் மிதித்துக்கொள்ள, நாயகன் உட்கார்ந்து சேர்தல் கர்க்கடக கரணம் ஆகும்.

கோவைக் கனிபோன்று செக்கச் சிவந்த இதழ்களையுடைய நாயகியானவள், தன் பாதங்கள் இரண்டையும் பந்தற்கால்கள் போல மேனேக்கி உயர்த்தி அசையாது நிறுத்திக்கொள்ள, நாயகனுனவன் இடைவிடாமல் தன் குறியை அசைத்துக் கொண்டே நாயகியின் குறியானது விள்ளும் வண்ணம் சேர் வது பிரேங்காக் கரணம் ஆகும்.

21. பத்மாசனம் 22. அர்த்த பத்மாசனம்

274. கரந்த உளத்தாள் கணைக்காலைக்
கணைக்கால் முரணத் தான்பின்னிப்
பொருந்த மடக்கிப் புணர்வதுவே
புகலில் பதுமா சனமாகும்;

திருந்த மடக்கும் இருதாளில்
ஒருதாள் நிமிர்த்திச் சேருவது
பரிந்து கூறில் அக்கரணம்
பாதிப் பத்மா சனமாமே.

நாயகியானவள் தன் கணைக்கால்கள் இரண்டையும் ஒன்றுடன் மற்றொன்று முரணுமாறு பொருந்த மடக்கிக்கொள்ள, நாயகன் சேர்வது பத்மாசன கரணம் ஆகும்.

அவ்வாறு, நாயகியானவள் மடக்கும் கால்களுள் ஒன்று மடங்கியிருக்க, மற்றொன்றை நிமிர்த்தி வைத்துக் கொண்டு நாயகன் சேர்வது அர்த்த பத்மாசனக் கரணம் ஆகும்.

23. சம்யமனம் 24. கூர்மம்

275. கிடந்த மடவாள் முழந்தாட்குள்
கேள்வன் கைகள் தமை நீட்டக்
குடங்கை இரண்டால் தோள் பிடித்துக்
கூடில் அதுவே சம்யமனம்;
மடந்தை நிமிர்ந்த உறுப்போடு
மகிழ்னன் நிமிர்ந்த உறுப்பு ஒன்றத்
தொடர்ந்து கவிழ்ந்தே உரம் புல்லல்
சொல்லில் கூர்ம கரணமதாம்.

படுத்திருக்கும் நாயகியின் முழந்தாள்களுக்கு அடியே நாயகன் தன்னுடைய இரு கைகளையும் நீட்ட, நாயகி அவள் கைகளால் அவன் தோள்களைப் பற்றிக்கொள்ள அந்நிலையே இருவரும் சேர்தல் சம்யமன கரணம் ஆகும்.

நிமிர்ந்திருக்கும் நாயகியின் குறியோடு, நாயகன் தன்னுடைய குறியைப் பொருந்த வைத்துக் கொண்டு, அத்துடன்

கவிழ்ந்து அவளுடைய மார்பை இறுகத் தழுவிச் சேர்தல் கூர்ம கரணம் ஆகும்.

25. பரிவர்த்தனம் 26. அதிபீடிதம்

276. அந்தக் கூர்ம கரணத்தில்
அவள்கால் மடக்கி மேலுயர்த்தப்
புந்திமகிழ இவன் சேர்தல்
புகலில் பரிவர்த் தனமாகும்;
விந்தை போல்வாள் தொடை இரண்டால்
மென்பாதத்தால் தன் கரத்தால்
முந்து மகிழ்நன் தொடையிறுக்கி
முயங்கல் அதிபீ டிதமாமே.

மேலே கூறியபடி இயற்றுகின்ற கூர்ம கரணத்தில், நாயகி தன் கால்களை மடக்கி மேலே உயர்த்த, அவள் உளம் மகிழுமாறு நாயகன் சேர்தல் பரிவர்த்தன கரணம் ஆகும்.

நாயகியானவள் தன் இரு தொடைகளாலும், மெல்லிய பாதங்களாலும், தன் கைகளாலும் நாயகனுடைய தொடையை இறுக்கி அணைத்துச் சேர்தல் அதிபீடித கரணமாகும்.

27. கடிபீடிதம்

277. தேறிக் கிடந்த மடவாள்தன்
திருத்தாள் இரண்டுஞ் செவ்வையின்றி
மாறித் தனது தொடை யேற்றி
மருவல் கடிபீ டித கரணம்;
கூறித் துணையுத் தானிதத்தின்
கொத்து விளங்கக் கூறினம்;மேல்

ஆறிப் புணருந் திரியக்காம்
கரணத் தியல்பை அறைகுவமே.

கிளர்ச்சியுடன் படுத்திருக்கும் தன் நாயகியின் இடது பாதம் தனது வலது தொடையிலும், வலது பாதம் இடது தொடையிலும் பதியுமாறு மாறிப் பின்னி ஏற்றி வைத்துச் சேர்தல் கடிபீடித கரணம் ஆகும்.

இதுவரை உத்தானிக கரணத்தின் இருபத்தேழு வகைகளையும் கூறினோம். இனி, மேலே திரியக்கு கரணத்தின் வகைகளைச் சொல்லுவோம்.

திரியக்கின் வகைகள் 2

28. சமுற்கம்

278. பாயல் அதனில் இருவோரும்
பரிவில் குறுக்காய்ச் சயனித்து
மேயகொழுநன் தொடை இரண்டும்
மேவுமவள் பொற் றொடை நடுவில்
நேயமுறவே தான் போக்கிக்
குறியும் குறியும் நேர்செய்து
தோயும் கலவி சமுற்கமாம்
கரணம் என்னச் சொல்லுவரால்.

படுக்கையிலே நாயக நாயகியர் இருவரும் அன்புடன் ஒருக்கணித்துப் படுத்துக் கொள்ள, நாயகனவன் தன் இரண்டு தொடைகளையும் அவளுடைய தொடை நடுவில் காதலுடன் போக்கி, இருவர் குறிகளும் நேராகப் பொருந்துமாறு கொண்டு சேர்தல் சமுற்கம் என்ற கரணமாகும்.

29. விபரி வர்த்தனம்.

279. இணையும் கலவி தனில் மடந்தை
கீழே கிடந்த தாளெடுத்து
நினையும் கொழுநன் தொடைமீது
நெருங்கா திருகாலை யும்ஏற்றி
வினையம் உடனே மணி முழந்தாள்
மடக்கி மெல்ல ஒரு புறமாய்
அணையும் கலவிக் கிடுநாமம்
அறையும் விபரி வர்த் தனமாமே.

அவ்வாறு கூடும் சமுற்க கரணத்தில் கீழே கிடந்த தன் தாளை நாயகியானவள் எடுத்துக்கொண்டு, பின் தன் நினைவாகவே யிருக்கும் நாயகனின் தொடைமீது தன் இரு கால்களையும் நெருங்காமல் ஏற்றித், தன் முழங்கால்களைப் பின்னர் மடக்கிக் கொண்டு, மெல்ல ஒரு புறமாக ஒருக்கணித்துப் படுத்துச் சேர்வதற்கு விபரிவர்த்தனம் என்று பெயர்.

ஆசிதக வகைகள்: 3

30. உக்மபதம்

280. பொறுத்த திரியக் கின்கரணம்
புகன்றோம்; இனியா சிதகரணத்
திறத்தை உரைக்கின், இருவோரும்
சிறப்பாய் வேறோர் தாள் நீட்டி,
மறுத்து மற்றை ஒருதாளை
மடக்கி யிருந்தங் கெதிர்முகமாய்

உறுத்துமருவும் கரணத்தை
உக்ம பதமென் றேதுவரால்.

திரியக்கின் கரணம் சொன்னேம்; இனி ஆசித கரணத்தின் வகைகளை உரைப்போம். (ஆசிதகம்-உட்கார்ந்திருத்தல்).

நாயக நாயகியர் இருவரும் தம் தாள்களுள் வேறு வேறு தாள்களை நீட்டிக்கொண்டு, மற்றத் தாளை மடக்கி வைத்து இருந்து முறையே சேர்தல் உக்மபத கரணம்.

[வேறு வேறு தாள் நீட்டலாவது, அவன் வலது கால் நீட்ட அவள் இடதுகாலும், அவள் இடது கால் நீட்ட அவன் வலது காலும் நீட்டுதல்]

31. விதர்ச்சனம் 32. மர்க்கடம்

281. வனிதை மடிமேல் உற இருந்து
மலர்த்தாள் நீட்ட மற்றவனும்
தனதுகாலை உற நீட்டித்
தழுவுங் கரணம் விதர்ச்சிதமாம்;
புனித மடவாள் இவ் வண்ணம்
புணர்வாள் புறமிட்டுப் புணர்தல்
இனிய தொரு மர்க்கட கரணம்
என்ன உலகம் இசைத்திடுமே.

நாயகனுடைய மடிமீது நாயகி அமர்ந்து தன் கால்களை அவனுக்கு இருபுறமும் நீட்டிக்கொள்ள, அவனும் தன் கால்களை நீட்டி வைத்துக்கொண்டு சேரும் கரணம் விதர்ச்சித கரணம் ஆகும்.

இருவரும் அங்கிலேயிலேயே எதிர்முகமாக இராமல் நாயகியானவள் பின்காட்டியிருந்து சேர்வாளானல் அது மர்க்கட கரணம் ஆகும்.

ஸ்தித கரண வகைகள்: 4

33. சானு கூர்ப்பரம்

282. பரிந்தா சிதத்தின் கரணம்
பகர்ந்தோம்; இனியா திதம்ஓதில்,
பொருந்து கணவன் ஒருதூணைப்
பொருந்தி நிற்ப, மடமாது
திருந்து கழுத்தைக் கரத்தணைத்துத்
திரண்ட குறங்கால் கடிதடத்தை
நெருங்க அணைத்துப் புணர்கரணம்
நிகழ்த்தில் சானு கூர்ப்பரமே.

ஆசித கரண வகைகளைச் சொன்னேம்; இனி ஸ்தித கரண வகைகளைக் கூறுவோம்.

நாயகன் ஒரு தூணைப் பொருந்துமாறு நிற்க, நாயகியானவள் அவன் கழுத்தைத் தன் கைகளால் கட்டி அணைத்துக்கொண்டு, திரண்ட தன் தொடைகளால் குறியை நெறுக்கி, அவனை அணைத்துக்கொண்டே சேர்தல் சானுகூர்ப்பர கரணமாகும்.

34. அரிவிக்கிரமம் 35. துவிதலம்

283. பாவை தூணைச் சார்ந் தொருதாள்
மேலே எடுப்பப் பகர்கொழுநன்
மேவு கரத்தால் கழுத்தணைத்து
மேவல் அரிவிக் கிரமாகும்;
பூவை இருதாள் இருகரத்தால்
புருடன் ஏந்திச் சுவர்சாயக்

கோவை வாயாள் கழுத்தணைத்துக்
கூடும் கரணம் துவிதலமே.

நாயகி ஒரு தூணைச் சார்ந்து நின்று கொண்டு, தன் கால்களில் ஒன்றை மேலே தூக்கிக் கொள்ள, நாயகன் தன் கைகளால் அவள் கழுத்தைச் சேர்த்து அணைத்துச் சேர்வது அரிவிக்கிரம கரணம் ஆகும்.

நாயகன் ஒரு சுவரிலே சாய்ந்து நின்றவனாக, நாயகியின் இரு பாதங்களையும் தன் கைகளால் தாங்கிக் கொள்ள, நாயகியானவள் அவனுடைய கழுத்தைத் தன் கைகளால் அணைத்துக் கொண்டே சேர்தல் துவிதலக் கரணம் ஆகும்.

36. அவலம்பிதம்

284. தலைவன் சுவரில் சாய்ந்து நின்று
தடக்கை இரண்டால் சகனத்தை
உலைவி லாமல் தாங்கி நிற்ப,
உபரி கரத்தால் கழுத் தணைத்து
நிலவு குறங்கால் மிகநெருக்கி
நெடிய தாளைச் சுவரூன்றி
அலையுங் கரணந் தனக்கிடுபேர்
அவலம்பிதம் என்று அறைந்திடுமே.

தலைவனானவன் சுவரிலே சாய்ந்து நின்று கொண்டு, தன் அகன்ற இரு கரங்களாலும் நாயகியின் சகனத்தை அசையாது தாங்கி நிற்க, தலைவியானவள் தன் இரு கைகளாலும் அவன் கழுத்தை யணைத்துக் கொண்டு, தன் தொடைகளுக்கிடையில் தலைவனை மிகவும் நெருக்கித், தன் தாள்களைச் சுவரில் ஊன்றியவளாகச் சேர்வது அவலம்பித கரணம் ஆகும்.

ஆன்மிதக்கரண வகைகள்: 5

37. பசுகரணம்

285. தொன்று திதமாம் கரணமிசைத்
தோமான்மிதம் இனித் தொடுக்கின்
வென்றி விழியாள் குனிந்து கையை
விலங்குபோல ஊன்றி நிற்ப
மன்றல் மார்பன் கவிழ்ந்து மெல்ல
மலர்க்கை யதனால் மருங்கணைத்து
ஒன்றும் பசுப்போல் புணர்ந்திட்டால்
உரைக்கும் கரணம் பசுவாமே.

இவ்வாறு நின்ற நிலையிலே சேர்கின்ற ஸ்தித கரண வகைகள் பலவும் கூறினோம். இனிக் குனிந்த நிலையிலே சேரும் நிலைகள் பற்றிய ஐந்தும் கூறுவோம்.

நாயகனைத் தன் நோக்கால் வென்று அடிமை கொண்ட நாயகியானவள் தான் குனிந்து கையை விலங்குபோல ஊன்றி நிற்க, நாயகன் கவிழ்ந்து, மெல்லத் தன் கைகளால் அவளது இடையை அணைத்துக்கொண்டே சேர்வது பசுக் கரணம் ஆகும்.

38. வியாக்கிரமம்

286. முலைமுகம் பாயில் தோய
முழங்கை மெல் லணையில் ஊன்றி
நிலைபெற முழந்தா ளிட்டே
நிதம்ப மேல் உயர, ஆங்கே
அலைவறக் குனிந்து வைகும்
ஆயிழைப் பின் னிருந்தே

மலைபொரு தோளான் சேர்தல்
வரிவியாக் கிரமம் அன்றே.

தனக் காம்புகள் பஞ்சணையிலே பொருந்தும்படியாக முழங்கைகளை ஊன்றிக் கொண்டும், முழந்தாளிட்டுத் தன் நிதம்பம் உயருமாறும் நாயகியானவள் இருக்க அவள் பின்புறமாகவிருந்து நாயகன் சேர்தல் வியாக்கிர கரணமாகும்.

39. சித்திரம்

287. பன்றிபோல், பூனைபோலப்
படுநகக் குளியமேபோல்,
கன்றியே குரைக்கும் நாய்போல்,
கவின்முக நரிபோல், மான்போல்,
வென்றிகொள் பரிபோல் மற்றை
விலங்குகள் எவையும் போல
ஒன்றியே புணர்வா ளுகில்
சித்திரம் உற்ற பேரே.

பன்றி போலவும், பூனை போலவும், கொடிய நகம் உடைய கரடி போலவும், சினந்து குரைக்கும் நாய்போலவும், நரிபோலவும், மான்போலவும், வெற்றி தேடித் தரும் குதிரை போலவும் பிற விலங்கினங்களுள் எவை போலவும் ஒன்றுபட்டு நாயக நாயகியர் சேர்வது சித்திர கரணமாகும்.

40. சங்காடகம்

288. இருவரை ஒருவன் கூடில்
ஏந்திழை ஒருத்தி யின்பம்
மருவிடக் குறுக்க தாக
மலரணை கிடப்பச் சேர்ந்த

திருவனாள் முகத்தி னேராய்க்
கிடப்பவள் செம்பொ னல்குல்
பருகிடு கரணஞ் சங்கா
டகமெனப் பகரு வாரே.

இரண்டு நாயகிகளை முன்னரே மணந்த நாயகன் எவனாவது இருந்தால், அவன் இருவரையும் ஒரே சமயம் திருப்திப்படுத்தும் முறைபற்றிக் கூறுவது இது: மலரணையின் குறுக்காக ஒருத்தி படுத்துக் கொண்டு நாயகனுடன் சேர்ந்து இன்புற, மற்றொருத்தியைச் சும்பன லீலையால் திருப்தி படுத்தல் வேண்டும் என்கிறார், இதுவே சங்காடக கரணம் ஆகும்.

கரண நுட்பம்

289. வேண்டிய கரண பேதம்
விளம்பினம்; அவற்றின் நுட்பம்
ஆண்டகை குறியும், சேரும்
ஆயிழை குறியும் எண்ணி
ஈண்டிய வேகம் காலம்
இரண்டையும் சிந்தித் தோர்ந்து
பூண்டிடும் போகம் ஒக்கும்
கரணத்தில் புணர்தலாமே.

தம்பதிகளுக்கான கரண பேதங்கள் பலவும் பற்றி இதுவரையிற் சொன்னோம். அவற்றை முறையாக உணர்ந்து அநுபவிக்கும் நுட்பம் யாதெனில்; நாயகனின் குறி நீளமும், நாயகியின் குறி ஆழமும் கருத்திற் கொண்டு, வேகம், காலம் இரண்டையும் ஆராய்ந்து தெரிந்து, இருவருக்கும் ஒத்த போகம் நிகழ ஏற்ற கரணம் எதுவெனவும் தெரிந்து அதன்படி கூடுதல் ஆகும்.

290. முந்த வெகு லீலைகள்
மொழிந்தனம் அவற்றில்,
எந்தவித லீலை செயின்
ஏந்திழை விரும்பிச்
சிந்தைமிக நேர்ந்து
வதனத்து எழில் சிறக்கும்
அந்தவகையே புரிவர்
ஆடவரின் மிக்கோர்.

பல்வேறு வகையான லீலைகள் பற்றிச் சொன்னோம். என்றாலும் அவற்றில் எந்த விதமான லீலைகளைச் செய்து கூடினால் தன் நாயகியும் விருப்பம் உடையவளாகச் சிந்தை மகிழ்ந்து முக மலர்வாளோ அதனையே நிகழ்த்துவர் ஆடவரிற் சிறந்தோர்.

291. விடுத்து உரமுறத் தழுவல்,
பற்குறி, விசேடித் தன்பாய்
எடுத்த வள்ளுகிர்க் குறிகள்,
சும்பன விதத்தில்,
படுத்த வுயர் தாடனம்
எனும் பலவும் அன்பால்
அடிக்கடி செயத் தகும்
அறிந்து புணர் வோர்க்கே.

மதனாகமத்தின் நுட்பங்களை நன்றாக அறிந்து சேருபவர்களான நாயக நாயகியர் ஆலிங்கனம், பற்குறி, நகக்குறி, சும்பனம், தாடனம் எனும் புறத் தொழில் வகைகள் பலவற்றையும் ஒருவர்பால் ஒருவர் அன்புடன் அடிக்கடி செய்த பின்னரே இணைந்து இன்புறுவர்.

29. உபசர்ப்பன வகைகள்

292. ஆதிகரணத்தியல் பனைத்தையும் உரைத்தேம்
மாதரை மணந்திடு மணாளனும் மடந்தை
ஏதம றல்குலி னிதத்தொடு புகுத்தல்
தீதிலுப சர்ப்பன மதைச்சிறி துரைப்பாம்.

பழைய காலங்களாக வழி வழி மேற்கொள்ளப்பட்டுவரும் கரண பேதங்கள் எல்லாம் விளக்கிச் சொன்னோம்: இனி மாதினை மணந்த மணாளனானவன், தன் நாயகியின் குற்றமற்ற குறியினுள் தன் குறியைப் புகுத்தும் வகையாகிய தீதற்ற உபசர்ப்பனத்தைப் பற்றிச் சில கூறுவோம்.

1. மதித்தல் 2. விமர்த்தம்

293. உற்றதொரு பெண்குறியில்
ஆண்குறியை ஊன்றிச்
சுற்றுதல் மதித்தலென
வேகவிஞர் சொல்வார்;
உற்றவள் நிதம்பநெகிழ்
வுற்றகல மானல்
ஒற்றைவிர லோடுகுறி
ஓட்டுதல் விமர்த்தம்.

1. நாயகியின் பெண் குறியினுள், நாயகனவன் தன் ஆண் குறியை ஊன்றிச் சுற்றுதல் மதித்தல் எனப்படும்.

2. நாயகியின் குறியானது நெகிழ்வுற்று அகலமானல் தன் குறியோடு ஒருவிரலையும் சேர்த்து நாயகன் உட்புகுத்தல் விமர்த்த மாகும்.

3. நிபீடிதம் 4. அசனி

294. புகன்ற குறியாலவள் குறித்தலை புடைத்தே
நெகிழ்ந்திட அழுத்திடல் நிபீடிதம் ஆகும்;
மகிழ்ந்த குறியைப் பறிய வாங்கியே மணளன்
அகழ்ந்திட இடித்தல் அசனிப்பெயர் தாமே.

3. ஆண்குறியால் பெண் குறியின் மேற்புறத்தே தட்டிப், பெண்குறி அதனல் நெகிழ்ச்சி யடையும்போது, சேர்தல் நிபீடிதம் ஆகும்.

4. சேர்க்கைக் காலத்திலே தன் ஆண் குறி முழுவதை யும் வெளியே இழுத்துக் கொண்டு பெண் குறியினுள் பலமாக இடித்துக் கொண்டே சேர்தல் அசனிப்பெயர் பெறும்.

5. கோலாகலம் 6. ரிஷப காதம்

295. ஒண்தொடி நிதம்ப மதில்
ஓர்இதழ் விளிம்பில்
கொண்ட குறியால் எழுதல்
கோலவரை ஆகும்;
விண்ட இருபாலும் அவன்
மெய்க்குறியான் நீவல்

மண்டிடப காதம் என
ஓதும் மத னூலே.

5. நாயகன், ஒளிரும் வளையணிந்தவளான தன் நாயகி யின் அல்குல் இதழ்களில் ஒன்றின் விளிம்பில் தன் குறியால் நீவுதல் கோலாகலம் என்பதாகும்.

6. அவ்வாறே இரண்டு இதழ்களின்பாலும் நீவுதல் ரிஷபகாதம் ஆகும். (கோலாகலம் என்பது பன்றி மோதல்; ரிஷப காதம் என்பது காளை மோதல்.)

7. சகடாயுதம்

296. உள்ளுற அழுத்தும் கணவன்,
குறியை ஊன்றி,
மெள்ளவொரு நாலுபுற
மும்மிக நெருக்கி,
வள்ளல் அமுதத் தொழுகும்
காமம் வடிவித்தல்,
தெள்ளு சகடாயுதம்
எனப் பெயர் சிறக்கும்.

நாயகனவன் தனது கோசத்தைத் தன் நாயகியின் குறியி னுள் ஊன்றி மெள்ள நான்கு புறத்தும் அது உறுத்துமாறு நெருக்கிச் சக்கரம்போலச் சுற்றிக் கொண்டே அழுத்திப் போகம் விடுதல் சகடாயுதம் என்று சொல்லப்படும்.

30. லய வகைகள்

297. இந்தவகை நின்றதினி
லயத்து வகை சொல்வாம்
அந்தலயம் மூவகைய
தாகும் அவையின்பேர்
வந்ததுரி தத்திஞெடு
மத்திமம் விளம்பின்
பிந்துலயம் வச்சிரம்
என்ன முறை பேசும்.

உபசர்ப்பன வகை இவ்வளவே. இனி லயத்தின் வகைகள் பலவும் சொல்வோம். அந்த லயம் மூவகையினதாகும். அவற்றின் பேர் துரிதம், மத்திமம் வச்சிரம் என்ற முறையால் கூறப்படும்.

மூன்றின் பண்பு

298. வச்சிர லயத்து இயல்பு
மந்தகதி முன்னும்;
இச்சையுறு மத்திமம்
மத்தியின் இயங்கும்;

நச்சலுறு வஜ்ரகதி
அந்தியம் நடக்கும்
இச்சையுறு வேள்நடனம்
என்பர் இதை மேலோர்.

வச்சிர லயத்தின் இயல்பு மந்த வேகமும், மத்திமம் இடைத்தர வேகமும், துரிதம் முழு வேகத்துடனும் நடப்பதாகும். இம் மூவகை லயங்களையும் பெரியோர் மன்மத நடனம் என்று கூறுவார்கள்.

காதலன் அயர்வைப் போக்க

299. கலவிப் போர்க்கு ஆற்ருள்போல்
கள்ள மனத்தால் மெல்லப்
புலவியுடன் மழலை கொஞ்சிப்
புலம்பிய மோகன அழுகை
அலைவுறு காதல் மனத்தில்
அயர்காமச் சுடரை நனி
இலகுறக் கூர்ங் கருவிகொடு
தூண்டுதல் போன்ம் மென இசைப்பார்.

நாயகனனவன் கலவிக் காலத்திலே சோர்பவன் போலத் தோன்றுவானுனல் நாயகி அவனை மீண்டும் கிளர்ச்சி யடையச் செய்வது பற்றிக் கூறுவது இது. நாயகன் செய்யும் கலவிப் போதை சகிக்கமாட்டாதவளைப்போலப் பொய்மையாக மெல்ல ஊடி மழலை குளறி, மோகன அழுகையில் நாயகி ஈடுபடுவாள். அது அவன் உளத்தில் அயர்வு தோன்றச் செய்த காமச் சுடரை நன்ருகத் துலங்குமாறு கூர்மையான கருவி கொண்டு தூண்டுதல் போலப் பயன் தரும் என்பார்கள்.

31. உபரிசுரதம்

300. இவ்வண்ணம் கலவிபுரி
தலைவன்தான் இரங்தெனினும்
மைவண்ணக் குழலியவள்
வருத்தங் கண்டானுலும்
செவ்வண்ணக் குறியழியா
திருக்கவவள் சிரித்தெழுந்து
அவ்வண்ண உபரிசுரதத்தின்
அவனைப் புல்லுவ ளன்றே.

இப்படி அவள் கூடும்போது ஊடிநின்ருல், நாயகனுனவன் அவளைக் கெஞ்சியானுலும், அல்லது நாயகியானவளின் வருத்தத்தைப் பாராட்டாமலாயினும், தன் குறியை எடாது தளர்ச்சி யின்றி உள்ளே வைத்திருக்க, அப்போது அவள் மகிழ்ந்து கணவனின்மேல் தான் எழுந்தமர்ந்து கலவி செய்யத் தொடங்குவாள். இது உபரிசுரதம் எனப்படும்.

உபரிசுரதப் புணர்ச்சிகள்

301. சீறடி சிலம்பத், திருமுகம்
வியர்வு சிந்தக்,
கூறிய கள்வன்நீ, என்
குறியின்வந் தகப்பட் டாயென்

றேறிய பல்முத் தால் தன்
நிலவிதழ் அதுக்கிப், பங்கி
வீறுயர் கரத்தால் பற்றி
மெல்லெனக் கவுளின் மோதி.

சீறடிச் சிலம்புகள் ஒலி முழங்கத், திருநிகர் முகத்திலே குறுவியர்வு அரும்பி வழிய, தன்னைக் கவர்ந்த கள்வன் என, ''உள்ளம் நிறைந்த கள்வன் நீதான்; இதோ என்னிடத்திலே வந்து அகப்பட்டுக் கொண்டாய்'' என்று அவன் மேற்கொண்டு, முத்தனைய தன் பற்களாற் கீழிதழை அதுக்கிபவளாக, அவனுடைய தலையைக் கரத்தால் பற்றிக்கொண்டு, அவன் கன்னங்களிலே மெதுவாகத் தட்டி,

தலைவி மேம்பாடு

302. தலைவன்மேம் பாட்டிற் செய்யும்
தகுதிகள் அனைத்துந் தானும்
இலகுகைம் மாறு போல
எழில்பெற இயற்றிக் காட்டி;
பலமலர்த் தெரியல் எல்லாம்
பரிந்தவன் மார்பில் போட்டு;
நலமுறப் புடைக்குந் தோறும்
நகைமணி வளைகள் ஆர்ப்ப,

தலைவன் தனக்கு மேம்பட்டிருந்து செய்த கலவித் தொழில்கள் அனைத்தையும் பெற்று இன்புற்ற நாயகியானவள், தான் அதற்குக் கைம்மாருகத் திருப்பித் தருவதேபோல, அத்தனை செயலையும் அழகுடன் தானும் அவன்பால் செய்து காட்டித், தான் அணிந்திருந்த பன்மலர் தொடுத்த மாலைகள் அனைத்தையும் அவன் மார்பிலே கழற்றி இட்டு, அவனுக்குப் புளகம்

உண்டாகுமாறு தாடனங்கள் செய்யுந்தோறும் கரங்களில் ஒளி மணி பதித்த வளைகள் ஒலி முழங்க,

கலவிக் களி

303. சரிந்துவீழ் அளக பாரம்
வளைக் கையால் தாங்கி, மற்றை
விரிந்தபூங் காந்தள் கையால்
நுதல் வியர் வழித்து வீசிப்,
பரிந்த நெட் டுயிர்ப்பால் ஆவி
பதைப்ப மேல் விழுந்து புல்லிப்,
புரிந்துவாய் அமுதம் ஊட்டிப்,
புட்குரல் களத்தில் ஆர்ப்ப,

சரிந்து வீழும் கூந்தலைத் தன் ஒரு கையால் தாங்கியவளாக, விரிந்த அழகிய காந்தள் மலர்போல் தோன்றும் மற்றொரு கையால் தன் நுதலின்கண் அரும்புகிற வியர்வினை வழித்து வீசி, களிப்புத் தொழிலிலே எழுந்த பெருமூச்சால் ஆவி சோர்வாளைப்போல, அவன்மேல் விழுந்து அணைத்துத், தன் வாய் அமுதத்தை அவனுக்கு ஊட்டித், தன் தொண்டையில் புட்குரல் ஒலிக்க,

[புட்குரல் எட்டு; மயில், புரு, அன்னம், காடை, வண்டினம், குயில், கோழி, வண்டு, முதலியன.]

காம நடனம்

304. தபதியர் தெரிந்து செய்த
தமனியப் பாவை என்ன
உபய முத் தாரக் கொங்கை
ஒருத்தி நான் மதன்நீ என்று

விபரிதம் நாலு திக்கும்
விரைவினிற் புகுந்து காமன்
அபிநயம் தெரிப்பாள் போல
மேவுவள் அணங்கி னாளே.

"சிற்பியர் ஆராய்ந்து செய்த பசும்பொற் பாவை போன்ற முத்தாரம் தவழுகின்ற மார்பகம் உடையவளான நான் ஒருத்தி, எனக்கு ஏற்ற மதனன் நீ" என்று கூறி, நாற்புறமும் புகுந்து புகுந்து, விரைவுடன் காமநடனம் செய்பவளைப் போலத், தன் நாயகனை ஆர்வமுடன் சேர்ந்து நாயகி இன்புறுவாள்.

மகிழ்நன் மேம்பாடு

305. ஒருவர்தம் வருத்தம் தன்னை
ஒருவர்தாம் ஒழிப்பார் போல
இருவரும் மாறி மாறி
இதமுறக் கலவி செய்து
மருவிடும் காலம் தன்னில்
மகிழ்நன் மேம்பாடு காட்டி
விரகுறு வேகத் தோடு
வியப்புற மேவு வாரே.

நாயகனும் நாயகியும் கலவித் தொழிலால் ஒருவர்க்கு ஏற்பட்ட களைப்பை மற்றவர் மாற்றுபவரைப்போல, இருவரும் இவ்வாறு மேல் கீழாக மாறி மாறிக் கலவி செய்து சேரும் காலத்திலே, நாயகனும் தன் உள்ளத்து எழும் ஆசைவேகத்தோடு தானும் மேற்கொண்டு தன் நாயகி வியந்து இன்புறுமாறு கலவிகள் செய்வான்.

உபரிசூரதம் செய்யலாகாத நாயகியர்

306. பூத்தவள், புனிற் றினள்,
பொருந்துசூல் மிகுந்த பாவை,
ஏத்திய மானின் சாதி
ஏந்திழை, தூல மாகிக்
காத்திரம் தடித்தாள், வாலை,
மெலிந்துளாள் இவர்கள் கண்டாய்
பார்த்திடின் மேம் பாட்டுக்குப்
பகர்ந்திடா மகளிர் தாமே.

வீட்டுக்கு விலக்கமானவள், இளம்பிள்ளைத்தாய்ச்சி, நிறை மாதகர்ப்பிணி, மான் சாதியைச் சேர்ந்த மாதர், உடல் பெருத்தவள், வாலைப் பருவத்தினள், மெலிந்தவள், ஆகியவரான நாயகியர் உபரிசுரதத்திலே ஈடுபடுதல் கூடாது என்பது விதியாகும்.

32. முகரத வகைகள்

307. பகர்தரு வகைகள் எல்லாம்
பகர்ந்தனம் அறிந்த வாறு;
சுகரதம் அறிந்த சிந்தை
ஆடவர் தொகுத்துக் கேண்மின்,
மிகரத மாக இன்ப
விளைவுகள் அனைத்தும் நல்கும்
முகரத வகையும் இவ்வா
றன்னதே மொழிய லுற்றேம்.

இங்ஙனமாகச் சேர்க்கைபற்றிய வகைகள் எல்லாம் நாம் அறிந்தவாறு உங்களுக்கும் சொல்லினோம். இனிச் சுகரதம் அறிந்த உள்ளத்து ஆடவர்களே! மிகவும் ஆசையும் இன்ப விளைவுகள் எல்லாமும் தரும் முகரத வகைகளையும் அவை இவ்வாறு என்றும் வகுத்துச் சொல்வோம்.

ஏற்ற கோசம்

308. அறவுமே குறுகல், நீளல்,
அதிகமாய்ப் பருத்தல், நேர்தல்,
குறையெனச் சொல்லும் நான்கு
குற்றமும் அற்ற தாகி,

வெறிமணம் கமழ்வ தாகி,
மேன்மையாய் ரோமம் போக்கிக்,
கறைகொளும் மாசி லாது,
புனிதமாய்க் கவின தாகி,

மிகவும் குறுகுதல், நீளல், பருத்தல், நேர்தல் என்னும் நால்வகைக் குற்றங்களும் அற்றதாகவும், நறுமணம் கமழ்வ தாகவும், மேன்மையாக ரோமம் போக்கப் பெற்றதாகவும், தூய்மையும் அழகும் உடையதாகவும்,

1. நிமித்தம்

309. தோலினில் பொதியாதாகித்
துணை அண்டம் தனக்கு நேராய்
மேலுறு வரைய தாகி
விளங்கும்ஆண் குறியை மாதர்
வாலிய துகிலை நீக்கி
மலர்க்கையால் பற்றல் தன்னை
ஏலவே காம நூலார்
நிமித்தம்என் றியம்பு வாரே.

தோலினுள் பொதியாததாகவும், இரண்டு விதைகளுக் கும் நடுவே உள்ளதாகவும், வரையுடையதாகவும் விளங்கு கின்ற, (1) தன் நாயகனின் கோசத்தை நாயகியானவள் மலர் போன்ற தன் மென்கைகளால் பற்றுதலுக்கு நிமித்தம் என்று காமநூலார் சொல்லுவர்.

2. பாற்கரவை 3. வாக்கியம் 4. அப்பியந்தம்

310. பிடித்ததைப் பற்ப டாமல்
பிளந்தவாய் அதரம் தன்னால்

அடிக்கடி கவ்வ லின் பேர்
அரியபாற் கரவை யாகும்;
எடுத்ததோர் பூவைச் சும்பித்
திடுதல் வாகியமாம்; அப்பால்
தொடுத்ததோர் களமட் டொட்டிச்
சும்பிக்கின் அப்பி யந்தம்.

(2) அவ்வாறு பிடித்த கோசத்தைப் பற்படாமல் தன் வாய் திறந்து இதழ்களால் அடிக்கடி கவ்வுதல் பாற்கரவை எனப் படும், (3) நாயகன் குறியின் மலரை மட்டும் நாயகி சும்பித்தல் வாகியமாகும். (4) குறியின் அடிவரை பற்றி நாயகி சும்பித்தல் அப்பியந்தமாகும்.

5. சும்பிதம் 6. பரிமிதம் 7. சூடியம்

311. கோதில் வாய் இதழ் இரண்டால்
நெருக்கல்சும் பிதமாம்; எங்கும்
ஓதிய நுனிநா வாலே
உறுத்திடல் பரியின் மித்தம்;
தாதுவை நாவி னலே
உறிஞ்சல்சூ டிய மதாகும்;
மாதரின் மிக்காள்! ஈதே
கணவனை வசம்செய் வண்ணம்.

(5) வாயிதழ்களால் நாயகி நாயகன் குறியை நெருக்குதல் சும்பிதம்; (6) நுனி நாவால் எங்கும் உறுத்துதல் பரிமிதம்; (7) நாவினல் தாதுவை உறிஞ்சல் சூடியம். சிறந்த நாயகியே! இவைதாம் கணவனை வசியம் செய்யும் வகைகள் என்பதை மறவாதீர்கள்.

நாயகன் முகரதம்

312. ஆடவர் கூடும் மாதர்
முகரதம் அறியச் சொன்னோம்;
கூடிடு கணவன் செய்யும்
முகரத அடைவு கூறில்,
ஏடவிழ் குவளைச் செவ்வாய்,
இணைமுலை, கபோலம், நெஞ்சு,
சூடக வளைக்கைம் மூலம்,
நாபிசும் பனமும் செய்தே;

நாயகனோடு சேரும் நாயகி செய்யும் முகரத வகை அறியுமாறு கூறினோம். நாயகன் செய்யும் முகரதத்திற்கு உரிய இடங்கள் கூறுவோமானால், அவை நாயகியின் விழி, வாயிதழ், தனங்கள், கன்னங்கள், நெஞ்சு, கைம்மூலங்கள், நாபி ஆகிய இடங்களாகும்.

313. உள்ளத்தில் புளகம் தோன்றி
உருக்கிள மகளிர் தம்மை,
மெள்ளவே ஊரு மூலம்
மீதுயர் நிதம்பத் தட்டு
வள்ளவாய் அமுத மென்ன
வாய்வைத்துப் பருகிப் பின்னை
தள்ளரும் சகனந் தன்னை
இருகையால் உயரத் தாங்கி;

நாயகன் தன் உள்ளத்திலே புளகம் தோன்றுமாறு உருக்கும் இளமகளினளான தன் நாயகியை, மெள்ள அவளது நிதம்பத்

தட்டில், வட்டிலில் அமுதம் பருகுவது போல வாய்வைத்துப் பருகிப்,பின் அடிப்பாகத்திலே இரு கையும் கொடுத்து உயர்த்தி,

314. ஆடு பாம்பின் படம் போல
அல்குலை விரியச் செய்து
நாடின்நால் திசையும் நாவால்
இலேகியால் சும்பித் துப்பின்
பாடிரு பக்கந் தன்னில்
பத்திர விளிம்பு பற்றிப்
பீடுறச் சுவைத்திட் டப்பால்
பெருநாவால் துவளத் தட்டி,

ஆடும் அரவின் படம் போன்ற அல்குலை அலர்த்தி, நாற்புறத்தும் நாவால் தடவிப் பருகிப், பின்னுக அதற்குப் புறத்து விளிம்பினையும் பற்றிச் சுவைத்துத் துவளும்படி நாவினுல் தட்டி,

315. நீட்டிய நாவி னுலே
நிகழுறச் துழாவிச் சுற்றிச்
சூட்டற உச்சிச் செம்பொன்
சுடிகையில் விளங்கித் தோன்றும்
வாட்டமில் மணியை முற்றும்
வாயினுல் சுவைத்து வாங்கி
மீட்டும்பின் விட்டு விட்டு
விதம்பெறப் பருகி விட்டே,

மேலும், அந் நாவினுல் துழாவிச் சுற்றி, அவ்விடத்தே தோன்றும் மணியை முற்றிலும் வாயினுல் சுவைத்து வாங்கி, மீட்டும் அவ்வாறே விட்டுப் பருகி,

316. மணியடி முடிச்சை நாவின்
வளைவினுல் வருடிச் சுற்றி
அணிவிரல் சுரதத் துள்ள
அடைவெலாம் நாவிற் காட்டி
உணர்வற நுனிநாத் தன்னை
உள்ளுற ஓட்டி ஓட்டித்
துணிவுடன் அடிநா மட்டும்
தொரட்டிபோல் வளைத்துள் ஓட்டி,

நுனி நாவை வளைத்து மணியடி நாடியைத் தடவிச் சுற்றி, விரல் புணர்ச்சி முறைகள் எல்லாம் நாவினுலுஞ் செய்து காட்டி, நுனி நாவை அங்குசம் போல வளைத்து அடிநா மட்டும் வளைத்து உள்ளே செலுத்தி,

317. ஓரிதழ் விளிம்பை நாவால்
உருவியே சுவைத்திட் டப்பால்
ஈரிதழ் தம்மைப் பற்றி
இளகவே சுவைத்துப் பின்னர்க்
கூரிய நாவி னுலே
மத்தெனக் குடைவ னுகில்
சீரிய வெண்ணெய் என்னக்
காமநீர் செழிக்கு மன்றே.

முதலில் ஒருபுற விளிம்பையும், பின்னர் இருபுற விளிம்புகளையும் இளகுமாறு சுவைத்துப், பின்னர் கூரிய தன் நாவினுல் மத்துப் போலக் குடைந்தால் நாயகிக்கு வெண்ணெய் போன்ற காம நீர் பெருகிச் செழிக்கும் என்று காமநூல் கூறும்.

318. இருவரும் ஒரு காலத்தே
இயல்புடன் தலையை மாறி
ஒருவரை ஒருவர் அன்பால்
உவந்துசும் பனங்கள் செய்து
மருவிய காலம் தன்னில்
மற்றிரு வோர்க்கும் சொன்ன
பொருவறு தொழில்கள் எல்லாம்
தனித்தனிப் புகழ்ந்து செய்வார்.

நாயக நாயகியர் தம்முள் தலைமாறிப் படுத்துக் கொண்டு ஒருவர் குறியை மற்றவர் அன்போடு சும்பனம் செய்து மகிழும் பொழுது முன்னர் இருவருக்கும் தனித்தனியே சொன்ன தொழில் முறைகளெல்லாம் களிப்புடன் செய்து இன்புறுவார்கள்.

33. ஊடலும் கூடலும்

ஊடலின் தோற்றம்

319. மறுமணம் கண்ட போதும்
மனத்தினில் வெறுத்த போதும்
பிறிதொரு மாது தன்பேர்
பேசிய போதும் கூடும்
முறைபிறழ் கலவிப் போதும்,
மூச்செறிந் திட்ட போதும்
சிறுபிறை நுதலார் தங்கள்
திருவுளத் தூடல் தோன்றும்.

நாயகன் வேறோர் பெண்ணினிடம் தொடர்பு வைத்திருக்கக் கண்டபோதும், மனத்தில் அவன்பால் வெறுப்பு எழுந்த போதும், அவன் பிறிதோர் பெண்ணைச் சிறப்பித்துப் பேசிய போதும், கலவி முறையிலே பிறழ்ந்து அவன் கூடும்போதும், கலவிக் காலத்திலே விரைவிற் களைத்து அவன் அடிக்கடி பெருமூச்சு விடும்போதும், நாயகியின் திருவுளத்தே ஊடல் தோன்றும்.

ஊடலின் விளைவு

320. பாயலை நீத்தும், மாலை
பரிந்தும்,பாக் கிலை எறிந்தும்,

தூயமென் கலவை நீத்தும்
தொடேல் எனச் சூளுரைத்தும்
ஆய்தொடி அணி சிதைத்தும்,
அலர்கண் உற் றழுதும், வைதும்,
தீயவஞ் சின முரைத்தும்
செயிர்ப்பொடு இருக்கும் போதில்,

அவ்வாறு தன் நாயகனோடு உள்ளத்தால் ஊடிய நாயகியானவள் மலரணையை விட்டு நீங்கியும், மலர் மாலையைப் பிய்த்தும், தாம்பூலத்தை விசிறி எறிந்தும், சந்தனக் குழம்பை அழித்துப் போக்கியும், 'என்னைத் தொடாதே' என ஆணை உரைத்தும், வளையல் முதலிய ஆபரணங்களைச் சிதைத்தும், கண்ணீர் விட்டழுதும், நாயகனை வைதும், கொடிய சபதங்கள் செய்தும் சினத்துடன் காணப்படுவாள். அப்போது,

ஊடற் குறிகள்

321. கண்மலர் சேப்ப, நீண்ட
கருங்கொடிப் புருவம் ஏற,
வெண்ணகை இதழ் துடிப்ப,
வியர்வுவந் தரும்பிச் சிந்தத்,
தண்மதி வதனம் வெய்ய
தபன மண்டலத்தை ஏய்ப்பத்
திண்இமைப் பெருக, வாய்மை
சிதற, மெய்க் கம்பம் ஆக,

அவளுடைய கண்மலர்கள் செந்நிறங் கொள்ளும், நீண்ட இமைகள் புருவத்தில் ஏறும், வெண்ணகை அரும்பும் இதழ்கள் துடிக்கும், வியர்வு அரும்பிக் கொட்டும், குளிர்மதி வதனம்

கோடைச் சூரியனைப்போல் வெப்ப மடையும், கண்கள் நீர் சொரியும், பேச்சுக்கள் தடுமாறும், உடல் நடுங்கிப் பதறும்.

ஊடல் தீர்த்துக் கூடல்

322. பொற்புறு வெரினில் வீழ்ந்து
பூச்செறி அளகம் தாழ
நிற்பவள் முனிவை நோக்கி
நிலையழிந் துருகி, "மானே!
அற்பனுன் புன்மை செய்யில்
பொறுப்பதே அளிய" தென்னச்
சொற்பயில் முகமன் கூறிச்
சுரும்பினம் தன்னை ஓச்சி.

அழகிய கூந்தல் அவிழ்ந்து பின்னர் வீழ்ந்தவளாக ஊடி நிற்பவளின் கோபம் கண்ட நாயகன், தன் மனம் கலங்கி, உருக்கமுடன், "மானே! நான் அற்பன்; தவறு செய்தால் அதைப் பொறுத்து அருள்வதுதானே உனக்கு அழகு" என்பன போல், இதமான பணிமொழிகள் பலவும் கூறி, அவளருகே சென்று சேர்ந்து கூந்தல் மலரில் மொய்க்கும் வண்டுகளைக் கையால் ஓட்டி,

323. மெல்லென ஓதி கோதி
விரும்புவஞ் சினங்கள் பேசிக்
"கல்உறழ் மனமும் என்பாற்
கரையுமே" எனக் கலுழ்ந்து
வல்லிதன் அடியை ஏந்தி
மலர்க்கண்ணில் ஒற்றி ஒற்றி

அல்லியங் கமலம் என்ன
அணிமணி முடியில் சேர்த்தி,

ஊடி நிற்கும் நாயகியின் தலை மயிரை மெதுவாகக் கோதி விட்டு, அவள் உள்ளத்திலே தன்பால் விருப்பம் தோன்ற ஆணைகள் பலவும் பேசி, "கல்போன்ற மனமும் என் வருத்தங் கண்டால் கரையுமே! நீ இரங்காதது ஏனோ" என மனம் வருந்தி, நாயகியின் பாதங்களைத் தொட்டுத் தொட்டுக் கண்களிலும் தலையின்மீதும் பன்முறை சேர்த்து,

324. சிலம்புகள் திருத்தி, அம்பொன்
சீலையை நீவித் தொட்டுக்,
கலன்பல திருத்தி, மெல்லக்
கவானிணை மூலம் தைவந்து,
அலம்பெறு நயங்கள் பேசி,
அணிமுலை நெருடி ஊன்றி
நிலந்தனில் அணங்க னாளை
அணைத்து நீள் அணையில் ஏற்றி,

சிலம்புகள் திருத்தி, அழகிய ஆடையைத் தடவித் தொட்டு, ஆபரணங்களுள் கலைந்தனவற்றைத் திருத்தி, அடித்தொடைகளை மெதுவாக வருடி, இதமான காதல் மொழிகள் பலவும் பேசி, அழகிய தனக் காம்புகளை மெல்ல நெருடி, அணங்கு போன்ற அவளை அப்படியே அணைத்துப் பஞ்சணையில் சேர்த்து,

325. முலைமுகம் குழைய மோந்து,
முத்தவாய் அமுதம் உண்டு,
கலைமதி நிகர்த்தா ளோடு
பாக்குதன் கரத்தால் ஊட்டி

இலையது கொடுப்பான் போல
இல்கிதழ் கனியப் பற்றிப்
புலவியைத் திருத்திச் சேர்வர்
மதனநூல் புலமை யோரே.

அந் நாயகியின் தனங்களின் முகங்கள் குழையுமாறு முகர்ந்து, அவள் இதழமுதத்தினைப் பருகி, அவள் வாயிலே பாக்கினை முதலில் கொடுத்துப், பின் வெற்றிலை மடித்துக் கொடுப்பவனைப் போல அவள் அழகிய இதழ்களைக் கனியுமாறு பற்றி, அவள் ஊடலைத் திருத்தி, அந் நாயகியுடன் சேர்ந்து இன்புறுவர் மதனநூல் புலமையுடைய நாயகர்.

34. கலவிச் சிறப்பு

உத்தமக் கலவி

326. தலையளிக் கலவி தானும்,
தணிந்துபின் கூடல் தானும்,
புலவிதீர்த் தணைதல் தானும்,
போக்குநாள் புணர்தல் தானும்,
கலவியின் இனிய தென்பர்;
கைக்கிளை இன்றிக் காதல்
நிலைபெற இருவர் ஒத்துப்
புணர்தலும் நிகழ்த்தின் நன்றே.

மணமான தம்பதிகள் முதல் நாட் கூடும் தலைக் கலவியும், பிரிந்து பின் வந்து கூடும் முதல் நாட் கூடலும், ஊடல் தீர்த்துக் கூடலும், பிரிந்து போக நேரிடும்போது அதற்குச் சற்று முன் கூடுதலும் கலவியில் இனியது என்பார்கள். ஒருதலைக் காமம் இன்றி இருவரும் தம்முள் காதல் நெஞ்சம் ஒத்தவராகச் சேர்தலும் இனியதே யாகும்.

மத்திமக் கலவி

327. ஆடவன் அன்பு வைக்க
அரிவை அன்பிலாது சேர்தல்,

கூடிடும் மாது நச்சக்
கொழுநன் அன்பிலாது கூடல்,
நேடிய இருவர் தாமும்
சிற்றன்பு வைத்து நண்ணல்
நாடின் மத்திமமம் என்றேதும்
கலவியா நாட்டுவாரே.

நாயகன் விரும்ப நாயகி விருப்பமின்றிச் சேர்தல்; நாயகி விரும்ப நாயகன் அவள்பால் அன்பிலாது கூடுதல்; இருவருமே ஒத்த அன்பின்றிச் சிற்றன்பு வைத்துச் சேர்தல்; இவை எல்லாம் மத்திமக் கலவிகள் ஆகும்.

மத்திமமும் உத்தமம் ஆகலாம்

328. படைமதன் கலையின் எண்ணெண்
பகுதியும் அறிந்தோர் தீமை
உடையமத்தி மமும் நன்காய்
உத்தமம் ஆக்கிக் கொள்வார்;
வெடிபுலால் நாறும் உப்பு
வேலைநீர் மேகம் உண்டு
படியினில் அமுதம் ஆக்கித்
தருகின்ற பான்மை போன்றே.

புலால் நாற்றம் நாறும் உப்புக்கடல் நீரை மேகம் உண்டு உலகிலே அமுதமாக்கித் தருகின்றதைப்போல, மதன கலையின் அறுபத்து நான்கு பகுதியும் அறிந்தவர் தீமை உடைய மத்திமக் கலவியையும் உத்தமமாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் உடையவராவர்.

பொருந்தாக் காமம், கபட காமம்

329. உள்ளத்தில் விருப்பம் இன்றி
ஊரை ஒப்பிக்க வேண்டி
மெள்ளவே இவர்கள் தாமும்
மேவுதல் பொருந்தாக் காமம்;
கள்ளநெஞ் சிருவர் தாமும்
பிறர்தமைக் கருத்தில் வைத்துத்
தெள்ளிய அன்பு பேசிச்
சேர்ந்திடல் கபடக் காமம்.

உள்ளத்தில் ஒருவருக்கொருவர் ஆசையின்றியும், ஊரை ஒப்பிக்க வேண்டியும் இருவர் தமக்குள் மணம் செய்து கூடுதல் பொருந்தாக் கூட்டமாகும்; உள்ளத்தில் இருவரும் வேறொருவரைக் கருத்திற் கொண்டு மிக அன்பு உடையவர் போல ஊர் மெச்ச நடித்துக் கூடுதல் கபட காமம் என்பர்.

கூடாத செய்திகள்

330. கன்னிகை இயல்பு தானும்
கடிமணஞ் செய்யு மாறும்
முன்னைநூன் முகங்கள் தோறும்
மொழிந்ததால் ஒழித்திட் டேமால்;
பின்னர்அப் பரதா ரத்தில்
பேசிய தான காமம்
நன்னெறி நீதி யன்று
நவிற்றுதற்கு என்ன நீத்தோம்.

கன்னிகா லட்சணமும் திருமணஞ் செய்யும் முறைகளும் முன்னரே பல நூல்கள் தமிழிற் கூறுவதால் சொல்லாது விட்டு விட்டோம்; பரதாரகாமம் நல்லொழுக்க முறையன்று என்பதால் அதனையும் பற்றி எதுவுஞ் சொல்லாது நீக்கினோம்.

331. ஆகஇவ் விரண்டும் போக்கி
அறைந்துள அதிகா ரங்கள்
ஓகையிற் சுருக்கத் தெண்ணி
உரைத்தனம்; அணங் கனுர்க்குப்
பாகுவெள் ளிலையில் அன்ன
பானத்தில் ஊட்ட அன்னுர்
தேகத்தில் பூச ஓதும்
மருந்தெலாம் முறையாச் சொன்னேம்.

மேற்கூறிய இரண்டு லட்சணங்களும் தவிர்த்த பிறவெல்லாம் ஒருவாறு சுருக்கி உரைத்துள்ளோம்; நாயகிக்குத் தாம்பூலம் அன்னம் பானம் முதலியவற்றில் கலந்து ஊட்டவும், உடலிற் பூசவும் சொல்லப்பட்ட மருந்தெல்லாம் முறையாகச் சொல்லியிருக்கிறோம்.

35. பேரின்ப வாழ்வு

332. இத்திறம் நூலில் சொன்ன
இயலினை முழுதும் ஓர்ந்து
முத்தெனும் நகையார் போக
முயக்கினைப் பெற்றுர் தாமே
செத்தபின் முத்தி சேர்வ
தென்றுமச் சிலுகை தீர்த்தே
கொத்தலர் குழலார் அன்பின்
கொடுக்கப் பேரின்பம் பெற்றுர்.

இந்நூலில் கூறியுள்ள இலக்கணங்களை முழுதும் உணர்ந்து முத்து நகை நாயகரின் போக முயக்கத்தைப் பெற்ற நாயகர்கள் தாம், செத்த பின் முத்தி சேர்வது என்ற தவறான எண்ணத்தை விட்டு, இல்வாழ்வில் பூங்கொத்து அணிந்த தம் நாயகியார் அன்போடு இசைந்து அளிக்கப் பேரின்பத்தை இவ்வுலக வாழ்விலேயே பெற்றவராவர்.

வாழ்த்துக்கள்

333. மாதர் வாழி! வனமுலை வாழியே!
நாதன் ஐங்கணை வாழி!நற் காமநூல்
வேதமான விரகமும் வாழி! மெய்க்
காதல் கூறும் கலவியும் வாழியே!

மாதர் வாழ்க! அவர் தனபாரங்கள் வாழ்க! ஐங்கணை நாதனுன மதனன் வாழ்க! நன்மை தரும் காமநூல் வேதமான விரகம் வாழி! மெய்க்காதல் கொண்ட நாயக நாயகியர் கூட்டமும் வாழ்கவே!.

334. கன்னலஞ் சிலையால் உலகெலாம் புரக்கும்
கவின்மதிக் கவிகைநா யகனும்
மன்னிய ரதியும் முறைமுறை புணர்ந்து
வாழி! காம ஆகமமும் வாழி!
பொன்நெடுந் தடந்தோள் ஆடவர் வாழி!
புளகித களப முத்தார
வன்னமென் முலையார் வாழி!என்னுளும்
மலர்க்கணை ஐந்தும் வாழி யே!

கொக்கோகம் மூலமும் புலியூர்க்கேசிகன்
விளக்கமும் முற்றும்

பிற்சேர்க்கை:

1. காதலர் வாழ்வு

நளனும் தமயந்தியும் மணம் கொண்டபின் அவர் இன்புற்ற வரலாறு நைடதத்துள் சிறப்பாக வருவது. காதல் வாழ்வை இனிக்க இனிக்கப் பாடியுள்ளார் அதிவீரராமர். அதனை இங்கே தருகிறோம்.

வரிமுலை யோடும் தோன்றி
வளர்தொறும் வளர்ந்து வீங்கிப்
பெருகுநாண் சுமக்கல் ஆற்றுப்
பெய்மலர்க் கொம்பு போல்வாள்
திருமுகஞ் சிறிது கோட்டிக்
கயிற்புறம் அதனில் தேங்கொள்
விரிமலர்க் கூந்தல் தாழ
மின்னென நுடங்கி நின்றுள். 1

கழிமடன் நாணம் அச்சம்
பயிர்ப்பெனுங் காவல் வேலை
அழிதர ஆசை வெள்ளம்
அகத்திடை அடங்கா தாகி

வழிவதே போல இன்பம்
வடிவெடுத் தனைய நங்கை
பொழிகதிர் நிலவு நாணப்
புன்னகை கோட்டி னாளே. 2

குருமணி வலயம் மின்னும்
குங்குமம் குலவு திண்தோள்
முருகுலாந் தார மார்பன்
முறுவலின் குறிப்பு நோக்கித்
திருநலங் கனிய நின்ற
செழுங்கடை மழைக்கண் பேதை
வருமுலை ஞெமுங்கப் புல்லி
மலரணை மேயி னானே. 3

ஆம்பலும் போதும் மானும்
அணிதிகழ் பவள வாயில்
தேம்பொதிந் தமுதம் ஊறும்
செந்துவர் தேறல் மாந்திப்
பாம்படும் அல்கு லாள்தன்
பணைமுலை மணிக்கண் சேப்ப
ஏம்பலுற் றினிது புல்லி
இளநலம் பருகி னானே. 4

கத்திகைக் கருமென் கூந்தல்
கயிற்புறத் தவிழ்ந்து வீழ

முத்தரிச் சிலம்பு பைம்பொற்
கிண்கிணி முரன்று பாடத்
தத்தரி நெடுங்கண் சேப்ப
தடமுலை தாங்கல் ஆற்று(து)
எய்த்துநுண் மருங்குல் தேம்ப
ஏந்தலோ டாடி னாளே. 5

களிக்கயல் பொருது நீண்டு
கதுப்பிணை அளக்கும் வேற்கண்
துளிப்புயல் மின்னின் அன்னாள்
தொண்டைவாய் அமுதம் மாந்தித்
தளிர்த்தெழும் உவகை பொங்கத்
தண்ணறும் சாந்த மார்பன்
அளப்பரும் களிகொள் காமக்
கடலகத் தழுந்தி னானே. 6

அலங்கலம் குன்றம் அன்னான்
அணிவரை அகலம் மூழ்கி
நலங்கெழு கலவைச் சாந்தும்
நானமும் அழித லோடும்
இலங்கொளி வைரப் பைம்பூண்
இளமுலை வடுக்கண் டேங்கிப்
பொலங்கொடி நாணி னோடும்
பொய்த்துயில் கூர்ந்தாள் அன்றே. 7

புலவியின் துயின்ருள் தீண்டின்
முனிந்திடும் பூவை என்று
மலரணைப் புறத்துத் தானும்
துயிறல்போல் கிடப்ப வாய்ந்த
கலவியின் வேட்கை தூண்டக்
கனவினில் வெருவி னுள்போல்
முலைமுக டமுந்த வேந்தன்
முழவுத்தோள் புல்லி னுளே. 8

புல்லலும் மகிழ்ச்சி கூரப்
புணர்முலை குழைய மோந்து
மெல்லிதழ் அமுதம் மாந்தி
மேகலை நெகிழ்த்த லோடு
நல்லெழில் கனிந்த கோதை
நகையுளத் தடக்க லாற்ருள்
முல்லைமென் முகையும் நாண
அரும்பிள முறுவல் பூத்தாள். 9

புருவவிற் கோலி உள்ளம்
போழ்ந்துகண் கணைகள் ஓட
உருவத்தார் உடைய ஒற்றை
வலம்புரி ஒலிப்ப விம்மி
வரிமுலை களிநல் யானை
மருமம்பாய்ந்து உழக்க மன்றல்

விரிமலர் கோதை காம
வெஞ்சமம் விளைத்திட் டாளே. 10

திருநுதல் பொடித்த வேர்வின்
தேங்கமழ் திலகம் தேய
புரிமுறுக் கவிழ்ந்து தாழ்ந்த
பொலங்குழை திருவில் வீச
மருமலர்க் கூந்தல் சோர
வசமழிந் துருகி வேந்தன்
எரிமணி ஆர மார்பின்
இன்துயில் பொருந்தி னுளே. 11

2. குறள் அமுதம்

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து
உற்று அறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. 1

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின்
இனிதுகொல்
தாமரைக் கண்ணன் உலகு. 2

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினுள் தோள். 3

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலாற்
பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். 4

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. 5

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன். 6

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. 7

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு. 8

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர். 9

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்காமம்
வெளிப்படும் தோறும் இனிது. 10

இன்னாது இனன் இல் ஊர் வாழ்தல்
[அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. 11

தாம்வீழ்வார் தாம்வீழப் பெற்றாரே
காமத்துக் காழ்இல் கனி. 12

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. 13

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு. 14

ஒருதலையான் இன்னாது காமம் காப்போல
இருதலை யானும் இனிது. 15

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. 16

காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி
மாலை மலரும் இந் நோய். 17

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். 18

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்குஇல் காமத்திற்(கு) உண்டு. 19

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் [பனைத்துணையும்
காமம் நிறைய வரின். 20

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். 21

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 22

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. 23

நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. 24